பக்கங்கள் - 28
விலை - 30ரூபா

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 34 கதிர் 285 ஆவணி 24 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை 10 செப்ரெம்பர் 2019 வள்ளுவர் ஆண்டு 2050

# வடக்கு-கிழக்கு இணைவு, சமஷ்டி ஒருபோதுமே சாத்தியம் இல்லை

## தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் அநுரகுமார திட்டவட்டம்

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 10

வடக்கு – கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டு கூட்டாட்சித் தீர்வை (சமஷ்டி) வழங்க முடியாது. புதிய அரசமைப்பு உருவாக்கத்தின்போது, நாட்டிலுள்ள அனைவருக்கும் சம அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்ற யோசனையை முன்வைத்திருந்தோம். அதுவே எமது நிலைப்பாடு. இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினரும், தேசிய மக்கள் சக்தியின் அரச தலைவர் வேட்பாளருமான அநுரகுமார திசாநாயக்க 25

## சிக்ஸர் பறக்கும் பார்த்திருங்கள்!



யாழ்ப்பாணம், செப்.10

எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் களமிறங்கித் துடுப்பாட்டத்தில் “சிக்ஸ்” அடிப்பதைப் போன்று அடிக்கப்போகின்றேன் என்று சிரித்தவாறு கூறினார் அமைச்சர் சஜித் பிரேமதாச. 25

## மாவீரர் வாரத்திலேயே அரச தலைவர் தேர்தல்

*உத்தியோகபூர்வ அறிவிப்பு 21ஆம் திகதி வெளியாகும்*

யாழ்ப்பாணம், செப். 10

அரச தலைவர் தேர்தல் நவம்பர் மாதம் 22ஆம் திகதி இடம்பெறவுள்ளது. அதற்குரிய வகையில் வேட்புமனுக் கோரல் உள்ளிட்ட ஏனைய விடயங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. தமிழீழ விடுதலைப் புலி 25

## ஒருமித்த நாட்டுக்குள்ளேயே அதிகூடிய அதிகாரப் பகிர்வு

*2015ஆம் ஆண்டுக் கதையை மீண்டும் கூறிய அமைச்சர் சஜித்*

யாழ்ப்பாணம், செப்.10

ஒருமித்த நாட்டுக்குள் அதிகூடிய அதிகாரங்களைப் பகிர்வது இனப் பிரச்சினையைத் தீர்ப்பேன் என்று தெரிவித்த அமைச்சர் சஜித் பிரேமதாச, அரச தலைவராகத் தெரிவு செய்யப்பட்டால் அதை இலகுவாக வழங்குவேன் என்று தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், வலிகாமம் 25

## ஐ.தே.கவின் வேட்பாளராக நானே களமிறங்குவேன்

*தனியே செல்லும் அவசியம் வராது என்கின்றார் சஜித்*

யாழ்ப்பாணம், செப்.10

எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பாகவே களமிறங்குவேன். தனித்துப் போட்டியிட வேண்டிய அவசியம் இல்லை.

இவ்வாறு தெரிவித்துள்ளார் ஐக்கிய தேசியக் கட்சி 25

## சிங்கள மக்களைக் குழப்பி தீர்வைப் பெறவே முடியாது

*கூட்டமைப்புக்கு விளக்கிய சஜித்!*

கொழும்பு, செப்.10

அரச தலைவர் தேர்தலில் களமிறங்குவதில் நான் உறுதியாக உள்ளேன். ஒற்றையாட்சியைக் கடந்து வேறொரு வடிவத்தில் தீர்வு என்றால் சிங்கள மக்கள் குழப்பமடைந்து விடுவார்கள். சிங்கள மக்களைக் குழப்பமடைய வைத்துத் தீர்வொன்றை எட்ட முடியாது என்ற யதார்த்தத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும் என்று அமைச்சர் சஜித் பிரேமதாச தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் கூறியுள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது. அமைச்சர் சஜித் பிரேமதாச நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்தார். அவர் சில நிகழ்வு களில் பங்கேற்றிருந்தார். அதன் இடைநடுவே அவருக்கும் கூட்டமைப்பின் சில நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையே சிறிய சந்திப்பு ஒன்று நடந்துள்ளது.

அரச தலைவராக 02

## கட்டி முடிக்கப்படாத வீடுகளுக்கு விரைவாகநிதியைவழங்குங்கள்

*மக்கள் அல்லல் என சஜித்திடம் சரவணபவன் எம்.பி சுட்டிக்காட்டு*

யாழ்ப்பாணம், செப். 10

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களிலும் வடக்கின் ஏனைய மாவட்டங்களிலும் மக்களுக்கு வழங்கப்பட்டு, கட்டுமானங்கள் ஆரம்பிக்கப்பட்ட வீடுகள் அரை குறையாக 25

## ஐக்கிய தேசியக் கட்சியும் கூட்டமைப்பும் ஒன்றுதான்

*விஜயகலாவிடம் கூறிய சஜித்*

யாழ்ப்பாணம், செப்.10

ஐக்கிய தேசியக் கட்சியும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஒன்றுதான், வெவ்வேறு அல்ல என்று தெரிவித்தார் அமைச்சர் சஜித் பிரேமதாச.

வலிகாமம் கிழக்கில் தேசிய வீடமைப்பு 25

## அரசியல்வாதிகள், ஊடகங்களை ஒழித்தால்தான் நாடு உருப்படும்!

*முரளிதரன் கூறுகின்றார்*

கொழும்பு, செப்.10

இந்த நாட்டின் முதல் பிரச்சினை அரசியல்வாதிகள். இன, மத, மொழியை வைத்து அரசியல் செய்கின்றனர். அடுத்தது 25

Busy ஆக உள்ளவர்களுக்கு Dialog இடமிருந்து
மிஸ்-கோல் ரீலோட்
458 மிஸ்-கோல் செய்து LOLC Finance சேமிப்பு கணக்கின் மூலம்
எந்தவொரு இடத்திலிருந்தும் ரூ.100/- ரீலோட் இனை செய்து கொள்ளுங்கள்
தினசரி ரூ.500 வரையில் ரீலோட்
LOLC FINANCE
இந்த சேவையினை பெற்றுக்கொள்ள LOLC Finance Missed Call Reload சேவையினை செயற்படுத்தியிருத்தல் வேண்டும்.
மேலதிக விபரங்களுக்கு 1777க்கு அழையுங்கள் நிபந்தனைகளுக்கு உட்பட்டது
Dialog
எதிர்காலம் இன்றே.

# தற்கொலைகள்

# தடுக்கப்படக்கூடியவை

அ.மௌலி

**இன்று உலக தற்கொலை தடுப்புத் தினம்**

மனிதஉயிர்கள்விலைமதிப்பற் றவை. அவை அழிக்கப்படுவது வேதனைக்குரியது. அதிலும் தமது உயிரைதாமேஅழிக்கநினைப்பது மிகவும்வேதனைக்குரியதும்வெட்கப்பட வேண்டியது மாகும். அதாவது தற்கொலை எண்ணம் கொண்ட ஒருவர் தாங்கும் சக்தி குறைந்தவ ராக மனவிரக்தியுற்று காணப்படுவார். மேலும் தற்கொலை எண்ணம் திடீரென உருவாகி நடைமுறைப்படுத்தும் ஒன்றல்ல.

இது நீண்ட காலத் திட்டமிடலின் மூலம் மேற்கொள்ளப்படும் ஒரு துயர நிகழ்வாகும்.

இவ்வாறான எண்ணம் கொண்டவர்கள் தமது உறவுகளுடனோ அல்லது தமது நம்பிக்கைக்குரியவராக கருதும் ஒருவருடனோ மனம் திறந்து தமது உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வதன் மூலம் அவ்வாறான எண்ணத்தில் இருந்து விடுபட்டுக் கொள்ளமுடியும். மேலும்தோல்விகளைக் கண்டு துவண்டு விடாது அந்தத்தோல்விகளுக்கானமூலகாரணங்களைகண்டுஅதைமுறியடித்து வெற்றிகாண்பதற்குமுயற்சிசெய்ய வேண்டும்.

அத்துடன் தற்கொலைகளைத் தடுப்பதற்குசமூகத்துக்கும்முக்கிய பொறுப்பு உண்டு. அதாவது தற்கொலைஎண்ணம்கொண்டவரை இனம்கண்டுஅவரைஅதிலிருந்து விடுவித்துக்கொள்ளவேண்டியது சமூகத்தில் உள்ளவர்களின் பொறுப்பாகும்.

தற்கொலை எண்ணம் கொண்டவர்கள் மற்றவர்களிடம் எதிர்பார்ப்பது நட்புடன் கூடிய உணர்வு ரீதியிலான ஆதரவேயாகும். எனவே தற்கொலை எண்ணம்கொண்ட ஒருவரைநாம் இனம்கண்டால்அவர்களைஎடைபோடாது அவர்களை அவர்களாகவே ஏற்றுக் கொண்டு அவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து அவர்களின் பிரச்சினைகளைசெவிமடுப்பதன்மூலம்நட்புரீதியான ஆதரவை வழங்கி தற்கொலை எண்ணத்தில் இருந்து அவர்களை விடுவித்துக் கொள்ள முடியும். அதாது ஒரு பிரச்சினையை சொல்பவருக் கும் அதனை செவிமடுப்பவருக்கும் இடையே உள்ள இடைவெளியே அந்தப் பிரச்சினைக்கான தீர்வாக அமையும்என்பதில்எந்தச்சந்தேகமும் இல்லை. ஒருமுறை தற்கொலை முயற்சியில் தோல்வி கண்டவர் பின்னர் அதனை நினைத்து வெட்கப்படுகிறார்.

எனவே தற்கொலை எண்ணம் கொண்டவர்அதிலிருந்துமுழுமையாக விடுபட்டுக் கொள்ள வேண்டும். அவ்வாறுவிடுபட்டுக்கொள்ள முடியாது எனக் கருதுமிடத்து ஆற்றுப்படுத்தல் சேவைகளை வழங்கும் நிறுவனங்க ளுடன் தொடர்பு கொண்டு தமது உணர்வுகளை வெளிப்படுத்துவதன் மூலம் அவ்வாறான எண்ணங்களில் இருந்து விடுபட்டுக் கொள்ள முடியும்.

கட்டுரையாளர்
இயக்குநர்
கைகொடுக்கும்நண்பர்கள்
ஸ்ரீலங்காசுமித்ரயோ யாழ்.
கிளை.


## கண்ணீர் அஞ்சலி

லயன் சீமாட்டி **வாசுகியின்**
அன்புத் தாயாரும்
லயன் **கங்கைவேணியன்**
அவர்களின்
அன்பு மாமியும் ஆகிய

**அமரர்**
**திலகவதி**
**விஸ்வநாதன்**



அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**தலைவர் மற்றும் உறுப்பினர்கள்**
**தீவக அரிமா கழகம்.**
(CS/27944)



## மரண அறிவித்தல்

## வல்லிபுரம் ஞானசேகரம்



கச்சாய் தெற்கு கொடிகாமத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் ஞானசேகரம் நேற்று (09.09.2019) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகனும் கணபதிப்பிள்ளை செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சிவக்கொழுந்துவின் அன்புச்சகோதரனும் திருச்செல்வத்தின் அன்பு மைத்துனரும் சச்சிதானந்தமணியின் அன்புக் கணவரும் மேகலைச் செல்வி (கலாசார உத்தியோகத்தர், பிரதேச செயலகம், பளை), மிதிலைச்செல்வி (புத்தளம்), ஜனார்தனன் (லண்டன்), தமிழ்ச்செல்வி (ஆசிரியை, யா/கெற்பேலி அ.த.க பாடசாலை) , ஞானச்செல்வி (ஆசிரியை, யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை), பார்த்தீபன் (கிராம அலுவலர் , மீசாலை மேற்கு) ஆகியோரின் பாசமிகு தந்தையும் இந்திரகுமார் (MRA, ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை), மகேந்திரபாலன் (சாரதி, பிரதேச செயலகம், புத்தளம்), இராஜநந்தினி (லண்டன்) , தனுசா ( DO, பிரதேச செயலகம், ஊர்காவற்றுறை), தயாபரன் (அலுவலக உதவியாளர், யா/கச்சாய் மகாவித்தியாலயம்), மணிவண்ணன் (ஆசிரியர், யா/கச்சாய் மகாவித்தியாலயம்) , குமணன், சிவகல்யாணி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ராம்குமார் , நிலானிகா, மிதுஷாயினி, அனுராம், ஆத்மிகா, ஆகன்யா, தனுஷயன், ஆரணன், அஜிஷ், மதுரன், விதுரன், அபிருத்தன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.09.2019) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பி.ப 03.00 மணியளவில் கச்சாய் எறியால் பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 668 1527**


## சிங்கள...

நான் பதவியேற்ற முதல் ஆறு மாதங்களுக்குள் இனப்பிரச்சினையைத் தீர்ப்பேன். அதற்கு மேல் காலத்தை இழுத்தடித்தால் இனப்பிரச்சினையைத் தீர்க்க முடியாமல் போய்விடும்.

நான் இந்த முறை போட்டியிடாமல் விட்டுக் கொடுக்கலாம். எனக்கு அதில் ஆட்சேபணையில்லை. எனக்கு இன்னும் காலமிருக்கின்றது. ஆனால் என்னைத் தவிர்த்தால் கட்சிக்குள் வெற்றியடையக் கூடியவர்கள் யார் இருக்கின்றார்கள்?. வேறு யார் போட்டியிட்டாலும் கட்சி தோல்வியடையும். கட்சி வெற்றியடைய வேண்டும் என்பதற்காகவே நான் போட்டியிட விரும்புகின்றேன். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தமிழ் மக்களும் எனக்கு ஆதரவு வழங்கவேண்டும் என்று அமைச்சர் சஜித் அந்தச் சந்திப்பில் குறிப்பிட்டுள்ளாராம்.

வார்த்தைகளில் கவனம் செலுத்தாமல் உள்ளடக்கத்தில் கவனம் செலுத்தலாம். ஒற்றையாட்சி என்ற அரசமைப்புக்குள் சுயாட்சிக்குரிய அம்சங்களுடன் பல்வேறு நாடுகளில் அரசமைப்பு உள்ளது. வார்த்தைகளில் சிக்காமல் வார்த்தைகளால் சமாளித்து அதிகாரங்களைப் பகிர்ந்து அரசமைப்பை உருவாக்கலாம் என்று இதன்போது கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அப்போது சுட்டிக்காட்டினர். கூட்டாட்சி (சமஷ்டி) கோரிக்கையுடன் தமிழ் மக்கள் நீண்ட காலமாகப் போராடியுள்ளனர் போராடுகின்றனர். அதற்குக் குறைந்த எந்தத் தீர்வையும் ஏற்க முடியாது. கூட்டாட்சியின் குணாம்சங்களும், அலகுகளும் தமிழர்களுக்கான தீர்வில் கட்டாயம் இடம்பெற்றிருக்க வேண்டும். அதேவேளை, சிங்கள மக்களைக் குழப்பாமல் நுணுக்கமாகச் செயற்பட வேண்டும். அதற்கு முன்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் அரச தலைவர் வேட்பாளர் யார் என்பதைத் தங்களின் தலைமைப்பீடம் தீர்மானித்துவிட்டதா?. அரச தலைவர் வேட்பாளர் பற்றிய குழப்பம் ஐ.தே.கவுக்குள் நீடிக்கின்றது. யார் வேட்பாளர் என்ற குழப்பத்தால், மக்கள் இங்கு குழப்பமடைந்துள்ளனர். யார் வேட்பாளர் என்பதில் உடன்பாட்டுக்கு வந்துவிட்டீர்களா?. நீங்கள் போட்டியிடுவது உண்மையா? என்றும் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வினவினர் என்றும் தெரியவருகின்றது.

இனப்பிரச்சினை தீர்வு விவகாரம் பெரிய விடயம். அதனால் எப்படியான தீர்வை எட்டுவது என்ற கலந்துரையாடலை ஒரே சந்திப்பில் எட்ட முடியாது. பல்வேறு கருத்துக்களில் இருந்து, வடிவமொன்றைக் கண்டுபிடிப்போம். இது அதற்கான முதல் சந்திப்பாக இருக்கட்டும் என்று அப்போது அமைச்சர் சஜித் குறிப்பிட்டாராம்.

அதை ஏற்றுக்கொண்ட கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், முதலில் ஐக்கிய தேசியக் கட்சியின் அரச தலைவர் வேட்பாளர் யார் என்பதை கட்சியின் தலைமையுடன் இணைந்து நீங்கள் தீர்மானியுங்கள். அதன்பின்னர், அடுத்தகட்டப் பேச்சைத் தொடரலாம். ஐ.தே.கவின் அரச தலைவர் வேட்பாளர் யார் என்று கட்சியின் தலைமைப்பீடம் உத்தியோகபூர்வமாக அறிவித்த பின்பே நாம் எந்த வேட்பாளருக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்பதை தமிழ் மக்களுடன் கூடி ஆராய்ந்து முடிவெடுப்போம் என்று குறிப்பிட்டனர் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (எ-22)



## இன்றைய நாள்

**மேடம்:** அடுத்தவர் மீதான நம்பிக்கை குறையும். தொழில், வியாபாரத்தில் குறுக்கீடு வந்து பின்னர் சரியாகும். அளவான பணவரவு கிடைக்கும். புத்திரரின் செயலை மேம்படுத்த ஆலோசனை சொல்வீர்கள்.

**இடபம்:** சிலரது பேச்சு சங்கடப்படுத்தலாம். எவருக்கும் வாக்குறுதி தர வேண்டாம். தொழிலில் உற்பத்தி , விற்பனை அளவுடன் இருக்கும். பணவரவை விட செலவு அதிகரிக்கும்.

**மிதுனம்:** முக்கியப்பணி நிறைவேற அனுகூலம் உருவாகும். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி பணி செய்வீர்கள். உற்பத்தி, விற்பனையின் அளவு அதிகரிக்கும்.

**கடகம்:** மனதில் உற்சாகமும், கலையுணர்வும் அதிகரிக்கும். எவரிடமும் அன்பு பாராட்டுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பணி திருப்திகரமாக நிறைவேறும். தாராள பணவரவு கிடைக்கும்.

**சிம்மம்:** மாறுபட்ட சூழ்நிலை ஏற்படலாம். பெருந்தன்மை குணத்துடன் நடந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் வேலைப்பளு அதிகரிக்கும். ஒவ்வாத உணவு உண்ண வேண்டாம்.

**கன்னி:** உங்கள் பேச்சை சிலர் தவறாக புரிந்து கொள்வர். எவரிடமும் நிதானித்து பழகவும். தொழில், வியாபாரத்தில் சில குறுக்கீடு வந்து சரியாகும். சேமிப்பு பணம் முக்கிய செலவுக்கு பயன்படும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

**துலாம்:** குடும்ப உறுப்பினர் அதிக பாசம் கொள்வர். நம்பிக்கையுடன் பணிபுரிவீர்கள். தொழில், வியாபாரம் செழிக்கும். பணியாளர்கள் கூடுதல் வேலைவாய்ப்பு, திருப்திகர சன்மானம் பெறுவீர்கள்.

**விருச்சிகம்:** நண்பர்களிடம் தேவையற்ற கருத்துக்களைப் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி பணி செய்வதில் தாமதம் இருக்கும். சீரானஓய்வுஉடல்நலத்தைபாதுகாக்கும்.

**தனுசு:** அக்கறையுடன் பணிபுரிவீர்கள். மனதில் புதிய நம்பிக்கை உருவாகும். தொழில், வியாபாரம் சிறந்து பணப்பரிவர்த்தனை முன்னேற்றம் பெறும். முக்கியஸ்தர் ஒருவரின் பாராட்டு கிடைக்கும்.

**மகரம்:** விழிப்புணர்வுடன் செயற்படுவது அவசியமாகும். தொழில், வியாபாரத்தில் குளறுபடியை சரி செய்வீர்கள். குடும்பத்தின் தேவைகளை சிக்கன பணச்செலவில் நிறைவேற்றவும்.

**கும்பம்:** பொறுமையுடன் செயற்படுவீர்கள். தொல்லை கொடுத்தவர் இடம் மாறிப் போவர். தொழில், வியாபார வளர்ச்சியில் புதிய சாதனை ஏற்படும். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும்.

**மீனம்:** மனதில் தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். நற்செயல் அத்தனையும் இனிதாக நிறைவேறும். தொழில், வியாபார தொடர்பு புதிய அறிமுகங்களைப் பெற்றுத் தரும்.

## கண்ணீர் அஞ்சலி



இலங்கை வங்கி சாவல்கட்டு கிளை
முகாமையாளர்
திரு.சிவசுப்பிரமணியம் பிரசாந்தன்
அவர்களின் அன்புத்தாயார்

**மகேஸ்வரி சிவசுப்பிரமணியம்**

அவர்கள் நேற்று (09.09.2019) திங்கட்கிழமை இயற்கை எய்தியுள்ளார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

வங்கி உத்தியோகத்தர்கள்
இலங்கை வங்கி மானிப்பாய், சாவல்கட்டு கிளை.

CS27949(16/17)

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com. 021 493 1111

## அறைகள் வாடகைக்கு

வாகன தரிப்புடன் கூடிய அறைகள் வாடகைக்குள்ளன.
குழுவாகவும் தங்கலாம்.

No n A/c
**Sara Guest - House**
**076 167 7297**

## பெயர் மாற்றம்

அராலி வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த **விஜயராசா சுஜிவன்** ஆகிய நான் 10.09.2019 செவ்வாய்க்கிழமை இன்றில் இருந்து எனது பெயரை **முகமட் சியாம்** என்று மாற்றம் செய்வதோடு சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பம் இடுவேன் என்று அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(ca.27943) (13.17)

**முகமட் சியாம்**

## அதிர்ஷ்ட லொத்தர் முடிவுகள்

அத கோடீபதி — சீட்டிழுப்பு இல: 726 — வர்ணம்: சிவப்பு — சீட்டிழுப்பு திகதி: 2019.09.09
23 26 46 66 S — 1555
ரூ. 88,176,395/-

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
23 26 61 70 G 62
59,752,135/-
0114 824 824, 0112 333 778

**ராசி அதிர்ஷ்டம்**

| திகதி | வெற்றி வாரம் | வர்ணம் |
|---|---|---|
| 09.09.2019 | 2612 | மஞ்சள் |

மகரம் — வெற்றி இலக்கங்கள்: 11 42 50 59
செவ்வாய்க் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,696,196/=

10.09.2019 ம் திகதி செவ்வாய்க் கிழமை சிகப்பு நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

**கோடிபதி கப்ருக**

சீட்டிழுப்பு வாரம்: 492 — திகதி: 2019 செப். 08 — வர்ணம்: மஞ்சள் — ஞாயிறு
A 33 37 56 65
வாசி தகை 6 7 2 2 8
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.139,237,458/-
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>KS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

**SUPER BALL**

சீட்டிழுப்பு வாரம் ▸ 1037
சீட்டிழுப்பு திகதி ▸ 2019.09.08 ஞாயிற்றுக்கிழமை
C 01 40 49 62
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

## Procurement of Office Equipment, Medical Equipment, Electrical Item (fitting) & Construction Work

**Reference No: NP/RDHS/PSSP/ME/2019/09 and NP/RDHS/PSSP/ME/2019/10– Addendum**

We are revised as follows

| Reference No | Item | Qty | Non refundable fees | Bid Security |
|---|---|---|---|---|
| NP/RDHS/ PSSP/ ME/2019/09 | Medical Refrigerator | 02 | 1000.00 | 40,000.00 |
| | Distilled water apparatus | 02 | | |
| | CTG Machine | 02 | | |
| | Doppler | 02 | | |
| | Medicine Trolley | 02 | | |
| | Multipara Monitor | 01 | | |
| **Reference No** | **Item** | **Qty** | **Non refundable fees** | **Bid Security** |
| NP/RDHS/ PSSP/ME/2019/10 | Biochemitry Analyzer | 02 | 1000.00 | 90,000.00 |

**The Bid forms will be issued until: 10th September 2019"**

**The deadline for submission of Bids shall be 24th September 2019"**

You are kindly requested to read the above with the IFB published on 09.09.2019 Other all terms and conditions will be same as in the documents. Any further explanations needed please contact the institution's head without hesitation for clarifications.

**Dr.E.Devanesan**
**Regional Director of Health Service**
**Jaffna.**




BAJAJ QUTE

## இலக்கினை கடந்து முன்னோக்கி பயணிக்கின்றது

சிறந்த கொட்றிசைக்கள் தொழில்நுட்பத்துடன் வரும் பஜாஜ் கியுட் எம் தேசத்தில் 1000 குடும்பங்களுடன் இணைந்து இனிதே தனது வெற்றிப் பயணத்தை ஆரம்பித்து முன்னோக்கி பயணிப்பதை இங்கு பெருமகிழ்வுடன் அறியத்தருகின்றோம். இன்றைய காலத்திற்கு பொருந்தும் வகையில் அதிக பாதுகாப்புடனும் உயர் எரிபொருள் சிக்கனம் மற்றும் எவருக்கும் இலகுவாக உபயோகிக்கவல்ல இவ் அழகிய கியுட் வாகனத்தை உங்கள் குடும்பத்திலும் ஓர் அங்கத்தவராக்கிக்கொள்ளுங்கள்.

BS iv உமிழ்வு தரம்

செப்டெம்பர் 30 இற்கு முன் கொள்வனவு செய்யும் அனைத்து கியுட் வாகனத்திற்கும் எரிபொருள் இலவசம்.

ரூ. 1,067,450/-
*நிபந்தனைகளுக்கு உட்பட்டது

டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி (பிறைவட்) லிமிடட்
077 298 1011 / 011 4 700 600 | QUTEinfo@dpmco.com



## தெல்லிப்பழை

# அருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

# தேர்த்திருவிழா சிறப்பிதழ்

## 10.09.2019



### தேவஸ்தான வரலாறு

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானமானது ஏறக்குறைய 350 ஆண்டுகளுக்கு மேலான பழமைவாய்ந்த ஆலயமாகும்.

இவ் ஆலயமானது ஈழவள நாட்டின் வடபால் அமைந்த யாழ்ப்பாண நகரின் வடக்கே தெல்லிப்பழை கிராமத்தில் உழுகுடைப் பதியின் துர்க்காபுரம் கிராம சேவையாளர் பிரிவில் அமைந்துள்ளது.

சைவ மரபிலே வாழ்ந்த பெரியார் கதிர்காமர் என்பவர் 1750 ஆம் ஆண்டளவில் தலயாத்திரை செய்யும் நோக்கில் இந்தியாவில் உள்ளகாசிக்குச் சென்று 10 ஆண்டுகளுக்கு மேலாக தங்கியிருந்து தமிழ் சமஸ்கிருதம் ஆகியவற்றில் கற்றுத் தேர்ந்து துர்க்கா தேவி உபாசகரானார்.

அவர் 1760ஆம் ஆண்டளவில் யாழ்ப்பாணம் மீளத் திரும்பியபோது துர்க்காயந்திரமொன்றையும் வெண் கலத்திலான திருமுகக் கெண்டி உருவமொன்றையும் கொண்டு வந்தார். தேவியின் அருளால் துர்க்கா சக்கரத்தை ஸ்தாபித்த இடமே தெல்லிப்பழை உழுகுடைப் பகுதியாகும்.

கதிர்காமரின் ஆன்மார்த்த பூசை நிலையமாக விளங்கிய இவ் ஆலயம் பரார்த்த பூசை நிலையமாக காலப் போக்கில் விருத்தியடைந்தது.

இவ் ஆலயமானது கதிரேசபிள்ளை நாகநாதர் உடையாரின் தனி முகாமையிலிருந்த போதிலும் மிக நீண்ட காலமாகப் புனருத்தாரணம் எதுவும் செய்யப்படாததை அறிந்த முகாமையாளர் இவ் ஆலயத்தைப் புனரமைக்க விரும்பி உறுதிச் சாதனம் இல.2881, 26.04.1949 ஆம் திகதியது மூலம் 11 பேர் கொண்ட அறங்காவலர் சபை யொன்றை ஸ்தாபித்து சில குறிப்பிட்ட திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

எனினும் 1953ஆம் ஆண்டு இவ் ஆலயம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு 05.05.1963இல் முன்னைநாள் கல்வித் திணைக்கள அதிகாரி திரு.சே.தியாகராசா தலைமையில் ஒரு திருப்பணிச் சபை நியமிக்கப்பட்டது.

இச்சபையின் அயராத முயற்சியினாலும் தெல்லிப்பழை வாழ் இளைஞர்களின் சிரமதான இயக்கத்தின் மூலம் பொது மக்களின் ஆதரவினாலும் 08.09.1965 இல் முதலாவது மஹா கும்பாபிஷேகம் வெகு சிறப்பாக நிறை வேறியது. இளைஞர்களின் சிரமதான இயக்கமே பின்னர் தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கமாக மாற்ற மடைந்தது.

18.05.1966 இல் 15 பேர் கொண்ட புதிய நிர்வாகம் தர்மகர்த்தா சபையால் தெரிவு செய்யப்பட்டது. அதன் பொருளாளராகப் பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் தெரிவு செய்யப்பட்டு 1977 வரை சிறப்பாக செயற் பட்டு 20.01.1977 இல் தலைமைப் பொறுப்பை ஏற்று 2008 இல் சிவபதமடையும் வரை தேவஸ்தானத்தின் திருப்பணிகளை சிறப்பாக நிறைவேற்றினார்.

இவர் காலத்தில் 17.04.1981, 07.09.1997 ஆகிய தினங்களில் மகா கும்பாபிஷேகங்கள் நிறைவேறின. 15.06.2008இல் அம்மையார் சிவபதமடைந்த பின் தேவஸ்தானத்தின் தலைமைப் பொறுப்பினை செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன் அவர்கள் ஏற்றுக் கொண்டார். இவர் அம்மையாரின் அடிச் சுவட்டைப் பின்பற்றிப் பலதிருப்பணிகள் சமயசமூகப் பணிகளைத் தளர்வில்லாது நிறைவேற்றி வருகின்றார்.

**தேவஸ்தானத்தில் நிறைவேற்றப்பட்ட முக்கிய திருப்பணிகள்**

1978 – சித்திரத் தேர்
1978 – பொது அலுவலகம்
1980 – ஞானசுரபி மண்டபம்
1981 - இராஜகோபுரம்
1981 – அலங்கார நுழைவாயில்
1982 – துர்க்காபுஷ்கரணி தீர்த்த தடாகம்
1982 – அந்தணர்கள் இருப்பிடம்
1985 – சப்பறம்
1985 – பக்தர் விடுதி
1987 – சரஸ்வதி மண்டபம்
1988 – புதியஅன்னதானமண்டபம்
1988 – அலுவலர்கள் இருப்பிடம்
1994 – சிவத்தமிழ் செல்விதங்கம்மாஅப்பாக்குட்டிபிறந்தநாள் அறநிதியம்
1998 – நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபம்
2001 – அன்னசத்திர மண்டபம்
2001 – அறநெறிப் பாடசாலை
2002 – சிவத்தமிழ்ச் செல்வி ஆய்வு நூலகம்
2004 – யாத்திரிகர் விடுதி
2009 – திருமஞ்சம்
2009 – ஆன்மீகத்தாய் சிலை அமைப்பு
2009 – சிவத்தமிழ் செல்வி நினைவாலயம்
2011 – மஹா கும்பாபிஷேகம்
2013 – மகளிர் இல்ல புதிய விடுதி
2013 – கைலாச வாகனம்
2014 – தணிகாசலம் பூங்கா அமைப்பு
2014 – நால்வர் ஐம்பொன் விக்கிரகங்கள் பிரதிட்சை
2014 – நல்லூர் மூன்றுமாடிக் கட்டடம்
2015 – துர்க்காதேவி வீட்டுத்திட்டம் ஆறுவீடுகள் அமைப்பு
2017 – தெற்குவாசல் இராசகோபுரம் கும்பாபிஷேகம்
2017 – வடக்குவாசல் (குபேரவாசல்) அடிக்கல் நாட்டுவிழா
2017 – சிவாச்சாரியார் மடம்
2018 – வடக்கு குபேரவாச கும்பாபிஷேகம்
2018 – பங்குனி உத்தரம் மேற்குவாசல் கோபுரம் அத்திவாரம்
2018 – ஆனி–சுன்னாகம் - திருமகள் அழுத்தகம் இருமாடிக் கட்டட வேலை ஆரம்பம்

நா.தவநாதன்
நிர்வாக செயலாளர்.

**தேர்த்திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்:**



## தெல்லிப்பழை

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

## தேர்த்திருவிழா

## இன்று ( 10.09.2019 ) செவ்வாய்க்கிழமை

தொல்லை வல்வினையறுத்து எங்கள் தாயே
தூய சிந்தை வளர்த் தெம்மை ஆளும்தாயே
தஞ்சமெனச் சரணடைந்தோம் எங்கள் தாயே
தேரேறி வந்தெம்மைக் காப்பாய் தாயே !






PETICKA FASHION

Dealers in Sarees, Shalwars
Modern Dress & Frocks
Exclusive Mother & Child &
baby care
Products & Garments.

**No.28,Subramaniam Road,
Chunnakam.**

T.P : 021 224 3800/ 4000,0779458612



ஜீவன் மருந்தகம்

ஆங்கில மருந்துகள்,
குழந்தைகளுக்கான பால்மா மற்றும் கால்நடைகளுக்கான
மருந்துவகைகள். தோல் சம்பந்தமான மருத்துவ
ஆலோசனைகளையும் சிகிச்சைகளையும்
ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**இல.50, 52, சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.**

தொ.இல: 021 224 2626/ 076 722 8840

தெல்லிப்பழை

# அருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் தேர்த்திருவிழா சிறப்பிதழ் 10.09.2019



## பிரதம குருவின் ஆசிச்செய்தி



அகிலலோக நாயகி ஆகிய பராசக்தி துர்க்கையின் வடிவத்தில் தெல்லி மாநகரில் வீற்றிருந்து அருள்பாலிக்கின்றாள். அன்னையின் திருத்தேர் விழாவை காண்பதற்கு பல்லாயிரம் அடியவர்கள் இன்று தெல்லி மாநகரிலே படையெடுப்பார். அலங்கார நாயகியாக துர்க்கை அம்பாள் அதர்மத்தை அழிப்பதற்கு திருத்தேரில் புறப்படுவார். காவடிகள், கற்பூரச்சட்டிகள் ஏந்தி பலநூறு பக்தர்கள் தம் நேர்த்தியை நிறைவு செய்வார்கள். இப் புண்ணியநாளை அனைவரும் கருத்தில் கொண்டு குடும்பம் குடும்ப மாக அம்பாளை தரிசித்து நல்லருள் பெறுவீராக.

சர்வம் சக்திமயம்.

சு.செந்தில்ராஜ குருக்கள்
பிரதமகுரு
ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை.

## செஞ்சொற் செல்வரின் ஆசிச்செய்தி



அம்பிகையை சரணடைந்தால் அதிகவரம் பெறலாம். தேசம் போற்றும் தெல்லிநகர் துர்க்கை அம்பாள் இன்று தேர் ஏறி வருகிறாள். அன்னையின் அருள் மழையில் நனைவதற்கு ஆயிரம் ஆயிரம் பக்தர்கள் துர்க்காபுரத்தில் இன்று ஒன்று கூடுவர். அற்புதம் நிறைந்த அம்பாள் எம் மண்ணையும் மக்களையும் காக்க வேண்டும் என்று மன்றாடிப் பிரார்த்திப்போமாக. அடியார்களின் காணிக்கையில் அழகாக உருவாக்கப்பட்ட அற்புதத் திருத்தேரில் அம்பாள் பவனி வரும் காட்சி உள்ளத்தை உருக்கும். கலாகேசரி ஆறுமுகம் தம்பித்துரை அவர்களின் கைவண்ணத்தில் உருவாக்கப்பட்ட இத் திருத்தேரின் சிறப்பை அறியாதவர்கள் இல்லை. எங்கள் தேவஸ்தானத்தில் பெரும் தலைவராக விளங்கிய சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மை அவர்கள் ஆற்றுப் படுத்திய ஒழுங்கில் எங்கள் ஆலயம் நன்முறையில் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. ஆலய தர்மகர்த்தா சபை, நிர்வாகசபை, துர்க்காபுரம் மகளிர் இல்லம், தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம், துர்க்காபுரம் பெண்கள் தொண்டர் சபை, துர்க்காதேவி அறநெறிப் பாடசாலை அனைவரதும் பூரண ஒத்துழைப போடு எங்கள் தேவஸ்தான பெரும் திருவிழா சிறப்பாக நடைபெற்று வருகிறது. திருத்தேர் நாளில் அனைத்து அன்பர் களுக்கும் எனது இதய பூர்வமான நல்லாசிகளை தேவஸ்தானத்தின் சார்பில் தெரிவித்து அமைகின்றேன்.

ஆறு.திருமுருகன்
ஸ்ரீதுர்க்கா தேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை

---





ஒரிஜினல் தங்க நகைகளை பெற்றுக் கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்

நடராசா கஜந்தன்

Since 1978

## நியூ மைதிலி ஜுவலர்ஸ்

காலத்தை வெல்லும் கலை நுட்பத்துடன் மின்னும் பொன் நகைகளால் மேலும்
உங்கள் புன்னகை ஒளிரும் விரையுங்கள் நியூ மைதிலிக்கு



38,40, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P: 021 221 7878 Fax:021 2217877

newmaithily40@gmail.com
New Maithily Jewellers
0094212217878

---

## Eut (Pvt) Ltd.



Furniture Showroom

General Manager
: V.Sriskantharasa,
077 656 6873



**Head Office :**
Chunnakam East, Chunnakam.
Tel : 021 224 0110
E-mail : Srieut@gmail.com

**Branch :**
150, K.K.S. Road, Chunnakam.
Tel : 021 454 6330, 077 478 4376
E-mail : Sinthujaneut@gmail.com

---

## Sothy Studio



அனைத்து மாங்கள விழாக்களுக்கும், டிஜிட்டல் முறையில் படம்பிடித்துத் தருதல் சின்தேட்டி டிஜிட்டல் அல்பம் தயாரித்தல், பழைய படங்களைப் புதுப்பித்தல், கறுப்பு வெள்ளைப் படங்களை கலராக்குதல், டியூறோ பிறேம் & பொக்ஸ் பிறேம் போடுதல் என்பன சிறந்த முறையில் செய்து தரப்படும்.



தேசிய அடையாள அட்டை புகைப்படங்களுக்கான அரச அங்கீகாரம் பெற்ற புகைப்பட நிலையம்

K.K.S. Road, Mallakam.
& Kuppilan Junction, Kuppilan.
K.K.S. Road, Tellippalai.
Tel : 077 659 2346, 077 151 0657

---

## எம்.ரி.எஸ் நகைத் தொழிலகம்



தங்கப்பவுண் நகை வியாபாரம்



M.T.S. Jewellery Work Shop
42, Dr.Subiramaniyam Road, Chunnakam.
Tel : 071 913 0024, 021 720 0124

---

அல்லல் போக்கும் அன்னை துர்க்கையின்
அருளாட்சி காண்போம்.

## யாழ்ப்பாண இரும்பகம்
### ஏசியன் பெயின்ற்ஸ்

மலிவு விலையில் பெயின்ற் வகைகள் பெற்றுக் கொள்ளலாம்.
32, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5589 | 7028

---

## J.T. ரான்ஸ்போட்ஸ் சேவிஸ்

யாழ் — கொழும்பு — யாழ் பாரஊர்தி
போக்குவரத்து சேவை

| | | |
|---|---|---|
| 135, ஆட்டுப்பட்டி வீதி, கொழும்பு-13. 0114987935 | 190, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 021 5772214 | 32, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 2225589\| 7028 |

---

## வினோ நகைப் பூங்கா






தங்க வைர
நகை வியாபாரம்
அசல் 22 கரட்
தங்க நகைகள்
உத்தரவாதத்துடன்
குறித்த தவணையில்
செய்து கொடுக்கப்படும்.

185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Tel : 021 222 5394/ 021 222 9494,
Fax: 021 222 2824

---

## Thisha Hotel & Party Hall





A/C, Non A/C Rooms
Restaurant Entertainment Park

K.K.S.Road, Chunnakam.
E-mail : thisahotel@gmail.com
Tel : 021 224 3940, 077 398 1094,
077 929 7909

---

தேசம் போற்றும் தெல்லி நகர் துர்க்கையின்
தேர் திருவிழா காண திரண்டு வாரீர்!


## கிருத்திகா என்ரர்பிறைஸ் & Butterfly Metal



K.K.S. Road, Jaffna.
077 454 2223

see more news in
NEWUTHAYAN.COM

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



(16/17)

கடந்த 12.08.2019 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

### அமரர் கணபதிப்பிள்ளை சுந்தரலிங்கம்

*(ஓய்வுபெற்ற அதிபர், சமாதான நீதவான்)*

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (11.09.2019) புதன்கிழமை முற்பகல் 11.00மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதனால் அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு தயவுடன் வேண்டுகிறோம்.

பத்தானை வீதி,
தாவடி தெற்கு, கொக்குவில்.

குடும்பத்தினர்

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த தற்போது கனடாவில் வசிக்கும் பூசம் 2ஆம் பாதம். கிரகபாவம் 15, 1982 இல் பிறந்த அழகிய மணமகனுக்கு தகுந்த படித்த குடும்பப்பாங்கான அழகிய மணமகளை எதிர்பார்க்கின்றோம்.

(CS 27858)(04.17)

தொடர்பு: 075 219 8052
077 382 1565

## சாரதி தேவை

லொறி ஓடக்கூடிய வாகன ஓட்டுநர் தேவை.

CS27946(16/17)

தொடர்பு:- 075 991 0060

## வேலை ஆள்கள் தேவை

கோழி இறைச்சிக் கடையில் வேலை செய்வதற்கும் மற்றும் வவுனியாவில் உள்ள ஆட்டுப் பண்ணையில் வேலை செய்வதற்கும் ஆண்கள் தேவை.

(CS 27941)(04.17)

077 271 8149

## மரண அறிவித்தல்கள்

### அன்னபாக்கியம் சற்குணநாதன்



பாரதி வீதி அச்சுவேலியை பிறப்பிடமாகவும் யாழ் நல்லூர் பருத்தித்துறை வீதி 370/3 வதிவிடமாகவும் கொண்ட திருமதி அன்னபாக்கியம் சற்குணநாதன் (06.09.2019) வெள்ளிக் கிழமை அன்று காலமானார்.

அன்னார் மு.சற்குணநாதன் (ஓய்வு பெற்ற Mechanical Fitter மத்திய மின்சார நிலையம் சுன்னாகம்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி கந்தர் செல்லம்மாவின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி முத்துவேலு அன்னம்மாவின் நேசமிகு மருமகளும் காலஞ்சென்றவர்களான அழகர். மணியம். வைத்திலிங்கம். துரைசிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்றவர்களான சின்னராசு. நவரத்தினம் (ராசு) மற்றும் ஜேர்மன் வாழ் சற்குணவதி. திருஞானசம்பந்தர் ஆகியோரின் அன்பு அண்ணியும் மதி. விஜி. கலா. சுதா. அருந்தா. நந்தினி. சுகந்தினி ஆகியோரின் அன்புத்தாயாரும் கௌரி. தயா. மயில்வாகனம். சிவசேகரம். கஜி. சுரேன். தனா ஆகியோரின் மாமியும் கவிராஜா. சாரங்கா. சாருயன். சாதூரியன். இலக்கியா. சுஜிக்கா. ஆர்த்திகா. அதிசயா. ஆகாஷ். ஆதிசன். சாத்வீகா. சுவாதிகா. கபிநாஸ். கீர்த்தனா. சுருதிகா. அபிநாஸ். யாதவன். சுஞ்சனா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(11.09.2019) புதன்கிழமை காலை10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

CS24027(16/17)

பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
நல்லூர் வீரமாகாளி அம்மன் ஆலயத்திற்கு அருகாமை.

தகவல்: குடும்பத்தினர்

தொடர்பு:- 021 222 5739/ 077 916 3048/ 076 001 3804
மின் அஞ்சல்:- m-s-mathi2006@yahoo.co.uk

## மரண அறிவித்தல்

### செம்பர் முருகேசு



கட்டப்பிராயைப் பிறப்பிடமாகவும் கற்குளம் கொட்டடியை வசிப்பிடமாகவும் கொண்ட செம்பர் முருகேசு நேற்று (09.09.2019) திங்கட் கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செம்பர்-செல்லாத்தை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வைரமுத்து-செல்லம் தம்பதிகளின் மருமகனும் வரதநாயகியின் ஆருயிர்க்கணவரும் காலஞ்சென்றவர்களான சின்னையா. சின்னாச்சி. வல்லிபுரம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் இராஜநாயகம். சரோஜினிதேவி. ரவி (ஆட்டோ). பிறேமசாந்தி. ரவிஞ்சன் (ஆட்டோ). பிறேமஜெயந்தி. ரோகினி. ஜீவன் (மாநகரசபை) மற்றும் வனஜா (பெறாமகள்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் புஸ்பராணி. காலஞ்சென்ற சந்திரலிங்கம் மற்றும் வனஜாதேவி. ராகினிதேவி (குடும்பநல உத்தியோகத்தர்). ஜெயச்சந்திரன் (சாரங்கா படமாடம்). ஜெனிற்றா. தங்கராசா. தியாகராஜா (ஆட்டோ). அங்கயற்செல்வி (அனுஷா) ஆகியோரின் அன்பு மாமனாரும் சலூஜா. சைலஜா. மயூரன் (மயூரன்ஸ் ஜீவல்லறி) இந்துஜா. மதுஷன் (மருத்துவ பிரதிநிதி). சிந்துஜா. சிந்துஜன். விபூஷன். மகீஷன். உசானி. சாரங்கா (சமுர்த்தி). பிரியங்கன். நிரூபன். சொரூபன். ஆதித்தன். றொபின்சனா. சஹானா. துவிஷன் மற்றும் விக்கினேஸ்வரன். யசோதரன்.ஜோன்ஸ்ரூ வோர்ட் (ஜேர்மனி). சாருண்யா. ஆரணி. வட்சலா. அஸ்ரத் ஆகியோரின் பேரனும் மானஷா. ரக்சிதன். அனுஸ்கா. கஜானன். மாதோஷ் அவனிஷ். அணா. பிரவீன். நைனிகா. ஆதிரன். மோனிகா. அபினவ். பிரணவ். நித் திஸ் ஆகியோரின் பாசமிகு பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.09.2019) புதன்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத் துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
ஜீவன் (மகன்), யாழ் மாநகர சபை



### திருமதி மகேஸ்வரி சிவசுப்பிரமணியம்

மலேசியாவைப் பிறப்பிடமாகவும், வட்டுத்தெற்கு வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி சிவசுப்பிரமணியம் நேற்று 09.09.2019 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகரத்தினம் சிவபாக்கியபூரணம் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற அமிர்தலிங்கம் மகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியத்தின் பாசமிகு மனைவியும் செந்தூரன் (விரிவுரையாளர். பௌதீகவியல்-யாழ்.பல்கலைக்கழகம்). பிரசாந்தன் (முகாமையாளர். இலங்கைவங்கி. சாவல்காடு). ஆகியோரின் பாசமிகு தாயாரும் பவானி. (வைத்தியர். தேசிய வைத்தியசாலை இலங்கை). சுமதிலா (ஆசிரியை. யா/வட்டு மத்தியகல்லூரி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஞானேஸ்வரி. காலஞ் சென்றவர்களான இராமேஸ்வரன். விக்னேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிறினீகா. கிஷோதன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.09.2019) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் மு.ப 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வட்டுதெற்கு,
வட்டுக்கோட்டை

தகவல்:
குடும்பத்தினர்

## சேவை நலன் பாராட்டும் மணிவிழா வாழ்த்தும்



எமது பாடசாலைக்கு அளப்பெரிய சேவையாற்றிய எம் உப அதிபர்

**சுப்பையா யோகேஸ்வரலிங்கம்**

(கல்விப்பணி 23.11.1989 - 12.09.2019)

*மானி அன்னையின் உயர்நிலைக்கு*
*அர்ப்பணித்த உம்பணிக்கு*
*பாடசாலைச் சமூகம் யாம்*
*நாவாற வாழ்த்துகின்றோம்.*

Congratulations

பாடசாலைச்சமூகம்
யா/ மானிப்பாய் இந்துக்கல்லூரி.




## மரண அறிவித்தல்

### கந்தையா சண்முகசோதி

*(உரிமையாளர், Air Travel Express Syndey Australia முன்னாள் பிராந்திய முகாமையாளர், Air Lanka LTD இந்திய நாட்டின் முகாமையாளர், முன்னாள் முகாமையாளர் மக்கள் வங்கி - யாழ்ப்பாணம், முன்னாள் முகாமையாளர் தேசிய சேமிப்பு வங்கி - யாழ்ப்பாணம்)*



யாழ் கரணவாய் தெற்கை பிறப்பிடமாகவும் அவுஸ்திரேலியா Syndey ஐ வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சண்முகசோதி கடந்த (07.09.2019) சனிக் கிழமை சிட்னியில் இறைபதம் எய்தினார்.

அன்னார் கரணவாய் தெற்கை சேர்ந்த காலஞ்சென்றவர்களான கந்தையா பொன்னம்மா தம்பதி களின் அன்பு மகனும் கந்தர் மடத்தை சேர்ந்த காலஞ் சென்றவர்களான வல்லிபுரம் தையல்நாயகி தம்பதிகளின் அன்பு மருமகனும் சேதாம்பிகை (இளைப்பாறிய ஆசிரியை, யா/இந்துமகளிர் கல்லூரி) அவர்களின் கணவரும் யசோதா, ஷாமினி ஆகியேரின் அன்பு தந்தையும் மோகன், குருபரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் கோகுலன், குமுதன், ராகுலன் ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்றவர்களான சண்முகலிங்கம், மதுரைமீனாட்சி, சண்முகரத்தினம் மற்றும் மனோரஞ்சிதம், தணிகாசலம், சண்முகசுந்தரம், இந்திராணி ஆகியோரின் அன்புச்சகோதரனும் காலஞ்சென்ற வல்லிபுரம் விசாகநாதன் மற்றும் கேதீஸ்வரநாதன், தில்லைநாதன் ஆகியோரின் மைத்துனரும் திரிசூலா, அவனிஷ், ஓம்காரன், திரியக் ஷரன், ஷிரினிக்கா, மீனா, ஜவி ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.09.2019) செவ்வாய்க்கிழமை மு.ப.11.15 (அவுஸ்திரேலிய நேரப்படி) Esst Chapel RookWood Cemetery இல் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஷாமினி - 61435915823**
**யசோ - 61424276423**

**தகவல்:**
**ஷாமினி, யசோ (மகள்)**

## வேலையாள்கள் தேவை

கோண்டாவிலில் அமைந்துள்ள
**Sharu Studio** இற்கு **Reception**
ஆள்கள் தேவை (பெண்கள்)

**077 248 7442**

## வேலையாள்கள் தேவை

கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு பின்வரும் வேலையாள்கள் தேவைப்படுகின்றனர்.

- **மேசன்**
- **கூலியாள்கள்**
- **சட்டரிங் வேலையாள்கள்**

**தொடர்பு:- 077 020 4990**

## அறை வாடகைக்குண்டு

யாழ் வீதியில் Science World அருகில் கல்வி கற்கும் பெண் பிள்ளைகளுக்கான சகல வசதிகள் கொண்ட அறைகள் வாடகைக்கு உண்டு.

(CS: 27945) (04.17)

**076 926 8179/077 085 0379**

## காணி விற்பனை

வண்ணார்பண்ணை தென்கிழக்கு $1\frac{1}{2}$ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

**076 321 9440**

## காணி விற்பனைக்கு

கரந்தன் நீர்வேலி வீதியில் **100m** உள் வீதியில் ஊரெழு அம்மன் கோயிலுக்கு அருகில் 15 பரப்புத் தோட்டக்காணி விற்பனைக்குண்டு.
(தரகர் தேவையில்லை)

**077 917 1511**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் மகேந்திரன் சுஜீபன்



ஆறாத்துயர் சுமந்து வருடம் ஒன்று ஆனதுவோ
எங்கள் செல்வமே
நீ வாழ்ந்த பாதி வாழ்க்கையிலே
சேனை சனம் சூழ்ந்திருக்க
குதூகலமாய் வாழ்ந்தாயே
இப்போ யாரும் அற்றவர் போல்
தனி வழியே போய் ஒடி மறைந்தாயே
உன் உயிர் பிரியும் போது
என்ன நினைத்தாயோ
எங்கள் செல்வமே உன் பிரிவை நினைத்தால்
ஆறிடுமோ எங்கள் துயர்
உனது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**மண்ணில் 01.01.1995**
**விண்ணில் 22.08.2018**

இன்று (10.09.2019) செவ்வாய்க்கிழமை அன்னாரின் முதலாம் ஆண்டு அஞ்சலி நிகழ்வி லும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி

(CS/27939)

என்றும் ஈரவிழிகளுடன் உன் பிரிவால் துயருற்றிருக்கும்
அம்மா, தங்கை, தம்பிமார்
0775017260

## வேலணை பிரதேச சபை
### முக்கிய அறிவித்தல்
### சாட்டி புனித சிந்தாத்திரை மாதா ஆலயப்பெருவிழா -2019

வேலணை சாட்டி புனித சிந்தாத்திரை மாதா ஆலயப்பெருவிழா 12.09.2019 முதல் 21.09.2019 வரை சிறப்பாக நடைபெறவுள்ளது. இக் காலப்பகுதியில் ஆலயத்திற்கு வருகை தரும் யாத்திரிகர்கள் மற்றும் தற்காலிக வியாபாரம் செய்பவர்கள் பின்வரும் நடைமுறைகளைப் பின்பற்றி ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

- துவிச்சக்கர வண்டிகள் , மோட்டார் சைக்கிள்கள் , ஏனைய வாகனங்களை வாகனத்தரிப்பிடங்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள இடங்களில் தரித்து அவற்றுக்கான பாதுகாப்புக் கட்டணங்களைச் செலுத்திப் பற்றுச்சீட்டுக்களைப் பெற்றுக் கொள்ளவும்.
- தற்காலிக வியாபார நிலையங்கள் எமது சபையால் 16.09.2019 ஆம் திகதி திங்கட் கிழமை அன்று முற்பகல் 10.00 மணிக்கு பகிரங்க கேள்வி மூலம் வழங்கப்படும். கேள்வி கோருபவர்கள் கோரப்படும் கேள்வித் தொகை முழுவதையும் சபையின் தலைமை அலுவலகத்தில் உடன் செலுத்திப் பற்றுச் சீட்டினைப் பெற்றுக் கொள்ளவும்.
- தற்காலிக வியாபார நிலையங்களை அமைக்க விரும்புபவர்கள் வேலணைப் பிரதேச சபையின் முன் அனுமதியைப் பெற்று அதற்குரிய கட்டணங்களை செலுத்திய பின்னரே வியாபார நிலையங்களை அமைக்க வேண்டும்.
- பிரதேச சபையால் வியாபார நிலையங்கள் அமைப்பதற்கென ஒதுக்கப்பட்ட இடங்களை தவிர வேறு எவ்விடத்திலும் வியாபார நிலையங்கள் அமைக்க முடியாது என்பதனை கருத்தில் கொள்ளவும்.
- உணவுப் பண்டங்களை கையாளும் வியாபாரிகள் தங்களது உள்ளூராட்சி மன்றங்களில் 2019ம் ஆண்டில் பெற்றுக் கொண்ட நிரந்தர அனுமதிப்பத்திரத்தின் உறுதிப்படுத்திய பிரதி சமர்ப்பித்தல் வேண்டும்.
- வியாபார நிலைய உரிமையாளர்கள் , ஊழியர்கள் ஒவ்வொருவரினதும் தேசிய அடையாள அட்டையின் பிரதி சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
- மேலும் உற்சவ காலத்தில் பொது ஒழுங்கு விதிகளையும் , சுகாதாரத்தையும் , ஆலயத்தின் புனிதத்தன்மையையும் பேணுமாறும் கேட்டுக் கொள்கின்றேன்.

**ந.கருணாகரகுருமூர்த்தி,**
**தவிசாளர்,**
**09.09.2019**
**பிரதேச சபை,**
**வேலணை.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் கனகலிங்கம் கார்த்திகா

| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 19 . 11 . 1988 | 23 . 08 . 2018 |

**திதி : துவாதசி (10.09.2019)**

*கார்த்தி நீயின்றிய ஓராண்டின் நிறைவில்*
*ஆண்டுக்கு ஒருமுறை கார்த்திகை மலரலாம்*
*ஆனால் கார்த்தி ! நீ நித்தமும் மலர்கின்றாய்*
*இயற்கையோடு கலந்து ஓராண்டு கடந்தாலும்*
*இன்னும் உன் இருப்பை எம்மருகில் உணர்கின்றோம்*
*காலையிலே சூரியனாய் காரிருளில் விண்மீனாய்*
*இதயத்தின் ஓசையாய் இனிமையான இசையாய்*
*மலர்களின் வாசமாய் மழலைகளில் புன்னகையாய்*
*நல்லவை யாவிலும் உன்னை நாம் காண்கின்றோம்*
*வாழும் காலத்தை வரலாறாய் மாற்றிய தேவதையே !*
*இந்த உலகம் எத்தனை முறை சுழன்றாலென்ன*
*எங்கள் மனங்களிலே என்றென்றும் நீ வாழ்வாயம்மா*
*உன் அழகு மிகும் ஆத்மாவின் அமைதிக்காக*
*இன்று தெய்வீக ராகங்களை இசைக்கின்றோம் கார்த்தி !*
*நீ சுமந்த கனவுகளை எல்லாம் நனவாக்கிட*
*எப்போதும் எங்களுக்கு துணையாயிரு.*




**குடும்பத்தினர்.**
**மட்டுவில் மத்தி, சாவகச்சேரி.**

(AC 1337) (14.17)

## மரண அறிவித்தல்

### சூசைப்பிள்ளை யேசுதாசன் (யேசுமணி)




இல.29,கொண்டடி வீதி, குருநகர், யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சூசைப்பிள்ளை யேசுதாசன்(யேசுமணி)08.09.2019 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதி ஆராதனை நாளை(11.09.2019) புதன்கிழமை பி.ப. 3 மணிக்கு புனித மரியன்னை பேராலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப் பட்டு, பூதவுடல் நல்லடக்கத்துக்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமைக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS/27938)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**0770366399**



# மீண்டும் பொலிஸ் வேடத்தில் அருண் விஜய்

தமிழ் சினிமாவில் தனித்துவமான கதைகளை தேர்ந்தெடுத்து நடிப்பவர் நடிகர் அருண் விஜய். அந்த வகையில் அண்மையில் இவர் நடிப்பில் வெளியான 'குற்றம் 23', 'தடம்' உள்ளிட்ட படங்கள் விமர்சன ரீதியாகவும், வர்த்தக ரீதியாகவும் நல்ல வரவேற்பைப் பெற்றன. அண்மையில் பிரபாஸ் நடிப்பில் வெளியான 'சாஹோ' படத்திலும் வில்லனாக நடித்திருந்தார். இவர் அடுத்ததாக 'பாக்ஸர்', 'மாஃபியா' போன்ற படங்களில் நடித்து வருகிறார். இந்த நிலையில், இவர் நடிக்கும் அடுத்த படம் குறித்த தகவல் வெளியாகியுள்ளது.

ஹரிதாஸ் படத்தை இயக்கிய ஜி.என்.ஆர்.குமரவேலன் இயக்கும் கிரைம் திரில்லர் படத்தில் அருண் விஜய் நடிக்க உள்ளதாகக் கூறப்படுகிறது. இந்தப் படத்தில் அவர் பொலிஸ் அதிகாரியாக நடிக்க உள்ளதாகவும் தகவல் கசிந்துள்ளது.




**வனிதா** : தயவு செய்து எங்களை வெளியே அனுப்புங்கள்

**ரசிகர்கள்** : வெளியே தானே அனுப்பினோம், மறுபடியும் ஏன் வந்தாய்....!












Sudha
@sweetsudha1

அழகான ஒன்றைக் கண்டால், ரசிப்பதை விடுத்து, படம் பிடித்து இணையத்தில் பதிவேற்றினால் எவ்வளவு லைக், ஷேர் என்று மனம் கணக்கிட்டால், உங்களுக்கு ஏற்பட்டிருப்பது 'இணையத்தொற்று' என்றறிக...

mohanram.ko
@mohanramko

நல்லவனாக வாழ, நல்லது செய்யணும்னு அவசியமில்லை, விட்டுக்கொடுத்து வாழ்ந்தாலே போதும்

நாம் கவனிக்காமல் தவறவிட்ட "அழகான விஷயங்கள் நம்மை சுற்றியுள்ளது என்று,

கைபேசியை நிறுத்தி வைக்கப்பட்ட பின் தான் புரிகிறது.

வகுப்பு எடுத்துட்டு கேள்வி கேட்டால் அது ஆசிரியர்

நாக்கை பிடுங்கிற மாதிரி கேள்வி கேட்டுட்டு அப்புறம் பொறுமையாக வகுப்பெடுத்தால் அது அப்பா

# ராம்ஜெத்மலானியும் முத்தையா முரளிதரனும்!





ராம் ஜெத்மலானி தமிழரல்ல. ஆனால் இன்னொரு பிறப்பு தனக்குக் கிடைக்குமானால் தான் தமிழராக பிறக்க விரும்பு கிறேன் என்று கூறியவர்.

மூன்று தமிழர் உயிருக்கு ஆபத்து என்றவுடன் ஓடி வந்து வழக்காடி காப்பாற்றியவர். அதுமட்டுமல்ல அதற்கு ஒரு ரூபாகூட அவர் பெறவில்லை.

இந்த மூவர் தூக்கில் இடப்பட வேண்டும். அவர்கள் இறக்கும்நாளே என் வாழ்வில் முக்கிய நாள் என்று அவர் கூறியிருந்தால் அவருக்கு ஆளுநர் பதவியோ அல்லது அரச தலைவர் பதவியோ பெற்றிருக்க முடியும்.

ஆனால் அவர் அவ்வாறு அற்ப சலகைகளுக்காகத் தன்னை விற்று விடவில்லை. அதனால்தான் அவர் இறந்தபோதுபோது அனைத்து தமிழரும் இரங்கல் தெரிவிக்கின்றனர்.

முத்ததையா முரளிதரன் தமிழர்தான். ஆனால் முள்ளிவாய்க்காலில் 40 ஆயிரம் தமிழர் கொல்லப்பட்ட நாள் தன் வாழ்வின் முக்கியநாள் என்கிறார்.

அதுமட்டுமல்ல தமிழ் இனப்படுகொலை செய்த கோத்தபாயவை வாக்களித்து அரச தலைவராக்க வேண்டும் எனவும் கோரியிருக்கி றார். என்ன செய்வது? காலம் எமக்கு ராம்ஜெத்மலானியை மட்டு மல்ல முத்தையா முரளிதரன்களையும் இனம் காட்டியே செல்கிறது.




சந்திராயன் – 2 சிக்னலை தடுத்தது ஏலியன்களா? அதிர்ச்சி தகவல்.



கந்தையா கனகசபை

# தெல்லிப்பழை துர்க்காதேவிக்கு இன்று தேர்



வரலாற்றுச் சிறப்புமிக்க அம்மன் ஆலயங்களில் ஒன்றான தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத்தின் விகாரி வருட தேர்த்திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு வெகுசிறப்பாக பக்திபூர்வமாக இடம்பெறுகின்றது.

கடந்த 31ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமான வருடாந்தத் திருவிழா 11ஆம் திகதி புதன்கிழமை ஆலயத்தின் முன்பாக உள்ள புஸ்பா புஸ்பகரணி தீர்த்தத் தடாகத்திலே இடம்பெறுகின்ற தீர்த்தத் திருவிழாவுடன் இனிதே நிறைவுபெறும். அம்பிகையின் ஆனந்த, அற்புதமயமான தேர்த்திருவிழாவை நேரிலே கண்டு அம்பிகையின் திருவருள் பெறுவதற்காக புலம்பெயர் நாடுகளில் இருந்தும் இலங்கையின் பலபாகங்களில் இருந்தும் வட பகுதியில் இருந்தும் லட்சோப லட்சம் பக்தர்கள் இன்று காலை தெல்லி நகரிலே ஒன்று கூடியுள்ளனர்.

**தேர்ப்பவனி**

இன்று காலை 9 மணிக்கு ஆலயத்தின் கிழக்கு பெருங்கோபுர வாசல் ஊடாக அம்பிகையானவள் அருட்கோல நாயகியாக தங்க ஆபரணங்கள் சூரிய ஒளியில்பட்டு கண்களைப் பறிக்க நறுமண மாலைகள் அணிந்து அசைந்து அசைந்து ஆடியாடி வெளியே வருகின்ற அற்புதமயமான திருக்கோலக் காட்சியை நேரடியாக காண ஆயிரம்கோடி கண்கள் வேண்டுமய்யா!. எம் தமிழ் இந்து மக்கள் கொடுத்து வைக்க வேண்டும். துர்க்கை அம்மன் தேரிலே ஏறி ஆலய பெருவீதி வழியாக ஆரோகணிக்கின்ற அருங்காட்சி அற்புதமயமானது. பெண் அடியவர்கள் ஒருபுறம் தேர்வடம் பிடித்து இழுக்க மறுபக்கம் ஆண் அடியவர்கள் வடம் பிடித்திழுக்க அம்பிகையின் அருட்கடாட்சத் தேரானது ஆடியசைந்து வருகின்ற திருக்கோலக்காட்சி அற்புதமானது. ஆனந்தமயமானதுமாகும். இந்தக் கோயிலிலே நடைபெறுகின்ற ஒவ்வொரு திருவிழாவும் அம்பிகையின் அலங்கார பவனியாக அழகான வர்ணச் சோடனைகளுடன் மலர் மாலைகளினாலும் ஆபரணங்களினாலும் சாத்துப்படியாகி சிறப்பு மங்கள வாத்தியங்களுடன் மங்கலகரமான கோலாகலத்துடன் வருடாவருடம் இடம்பெறுவது வழக்கம்.

**பக்கர்களும் நேர்த்திகளும்**

துர்க்காதேவியின் அருட்கடாட்சம் பெறுவதற்காக பக்தர்கள் இந்த ஆலயத்துக்கு நேர்த்திகள் பல வைப்பதுண்டு. அந்த வகையில் திருமணம் கைகூடாத கன்னிப் பெண்கள் தமக்கு கூடிய விரைவில் வரண் கிடைக்க வேண்டுமென துர்க்காதேவியை எண்ணி நோன்பிருந்து அதில் காரிய சித்தியும் பெற்றுள்ளார்கள். தெல்லிநகர் இன்று இந்திரலோகம் போலக் காட்சியளிக்கின்றது. எங்கு பார்த்தாலும் அரோகரா ஒலி வானைப் பிளக்கின்றது. பக்தர்கள் தங்கள் நேர்த்திக் கடன்களைச் செலுத்திக்கொண்டு இருக்கின்றார்கள். மறைந்த முன்னாள் தலைவரான செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் நேரடி வழிகாட்டலுடன் சிறப்புடன் திகழ்ந்த இந்த ஆலயம் தற்போது செஞ்சொற்செல்வர், ஆன்மிகப் பேச்சாளர் ஆறு.திருமுருகனுடைய தலைமையில் மிகச் சிறப்பாக பாரிபாலணம் செய்யப்படுவதுடன் மறைந்த தலைவருடைய செயற்பாடுகளும் மிகச் சிறப்பாக இடம்பெறுவதை காணக்கூடியதாக உள்ளது.

**துர்க்காதேவி மகளிர் இல்லம்**

இங்கு 'துர்க்காதேவி மகளிர் இல்லம்' என்று ஓர் இல்லம் மறைந்த தலைவரால் ஆரம்பிக்கப்பட்டு கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகள் சிறப்பாக இடம்பெற்றன. தற்போதும் அந்த மகளிர் இல்லம் சிறப்பாக நடைபெறுவதைக்காணக்கூடியதாக உள்ளது. மேலும் இந்த ஆலயத்துக்கு மெருகூட்டுவது போல் அழகான திருமண மண்டபம் அமையப்பெற்றிருப்பது வெகுசிறப்பாகும். திருவிழாக் காலங்களிலே அன்னதான மடத்திலே அடியவர்களுக்கு அன்னதானம் தினம்தோறும் வழங் கப்படுகின்றது.

எனவே இன்றைய தெய்வீக மணங்கமழும் அம்பாளின் தேர்த் திருவிழாவிலே கலந்துகொள்ளும் பக்தர்களுக்கு வல்வினை அகற்றி, நல்வாழ்வு அளித்து இந்த நாட்டிலே சாந்தி, சமாதானம் நிலவ அருள் பாலித்து மண்ணில் பிறந்த அனைவரும் இன்புற்று மண்ணில் நல்ல வண்ணம் வாழ அம்பாள் திருவருள் பாலிப்பாராக.



## துயர் களைவாய் துர்க்கையே....!

ஆணவத்தை அழித்திடுவாய் துர்க்கையே
ஆறுதலைத் தந்திடுவாய் துர்க்கையே
இன்னல்களைப் போக்கிடுவாய் துர்க்கையே
ஈன்றவரைக் காத்திடுவாய் துர்க்கையே
உன்னடியே நம்பிடுவோம் துர்க்கையே
ஊனமுற்று வெம்புகிறோம் துர்க்கையே
எங்களை ஏன் வாட்டுகின்றாய் துர்க்கையே
ஏனோ எமை ஆட்டுகின்றாய் துர்க்கையே
சங்கரன் போல் துயர்களைவாய் துர்க்கையே
ஒற்றுமையாக வாழ வைப்பாய் துர்க்கையே
ஓங்கு புகழ் தெல்லிப்பழை துர்க்கையே
துயர் களைவாய் துர்க்கையே....!!



வட்டூர் செல்வா, வட்டுக்கோட்டை

## ஒளியைத் தந்திடுவாய் தாயே நீ!

அன்னை அன்னை அன்னை என்றே
உனையே தினமும் பூசிக்கின்றேன்
உன் அருளும் ஆசியும் நிலைத்திடவே
உன் அன்பும் பாசமும் வேண்டுமம்மா

கண்ணே மணியே கற்பகமே
கருவே உருவே என் ஒளியே
இருளைப் போக்கி என்றென்றும்
ஒளியைத் தந்திடு தாயே நீ

அல்லும் பகலும் அழுகிடும் எம்
தொல்லைகள் போக அருள்செய்வாய்
எல்லாப் பிழையும் பொறுத்திடம்மா
ஒளியைத் தந்திடு தாயே நீ....

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



## தமிழர் வாக்குகளை வேட்டையாட பொய்யுரைக்கும் தெற்குத் தலைவர்கள்

அரசதலைவர் தேர்தலுக்கான அறிவிப்பு இனி எவ்வேளையிலும் வெளியிடப்படலாம். தேர்தல்கள் ஆணைக்குழுவின் நேற்றைய சந்திப்பில் தேர்தலுக்கான திகதி, வேட்பு மனுக் கோரலுக்கான திகதி என்பன ஓரளவு தீர்மானிக்கப்பட்டிருந்தாலும், அது எதிர்வரும் 21 ஆம் திகதிதான் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவுள்ளது.

தேர்தலுக்கான அறிவிப்பு வெளியாக முன்னரே, அரசதலைவர் வேட்பாளர் அறிவிப்புக்கள் வெளிவந்துவிட்டன. அது மாத்திரமல்லாமல் பரப்புரை நடவடிக்கைகளும் முட்டுச் சந்து வரையில் முடுக்கி விடப்பட்டுள்ளன. 19ஆவது திருத்தத்தின் ஊடாக அரசதலைவருக்கான அதிகாரங்கள் வெட்டிக் குறைக்கப்பட்டதாகத் திரும்பத் திரும்பச் சொல்லப்பட்டாலும், அரசதலைவர் கதிரைக்கான போட்டி அதிகாரக் குறைப்பு சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது.

மறுபுறம் வழமைபோன்று வாக்கு வேட்டைக்காக எந்தளவுக்குப் பொய்யுரைக்க முடியுமோ அதனை அரசியல் தரப்புக்கள் செய்யத் தொடங்கிவிட்டன.

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரசதலைவர் வேட்பாளர் கோத்தபாய, அரசியல் தீர்வு தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்துடன் பேசும்போது ஒரு நிலைப்பாட்டையும், ஈ.பி.டி.பியுடன் பேசும்போது இன்னொரு நிலைப்பாட்டையும் வெளிப்படுத்தியிருந்தார். இதற்கு மேலாக அவரது கட்சியைச் சேர்ந்த நாடாளு மன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே, கிளிநொச்சியில் மக்களைச் சந்தித்து புளுகு மூட்டையை அவிழ்த்து விட்டிருக்கின்றார்.

தமது கட்சி சார்பில் தமிழர் பகுதிகளில் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுபவர் வெற்றிபெறத் தவறினாலும் அவரை தேசியப் பட்டியல் ஊடாக உள்வாங்கி அமைச்சுப் பதவியையும் வழங்குவோம் என்று வாய்கூசாமல் சொல்லிவிட்டுச் சென்றிருக்கின்றார்.

மறுபுறம் சிங்கள – பௌத்தன் என்று தன்னை முதன்மைப்படுத்துவதில் பிரியப்படுகின்ற அமைச்சர் சஜித் பிரேமதாச, தமிழர்கள் மத்தியில், தமிழருக்கு ஆதரவான நிலைப்பாட்டை எப்போதும் எடுப்பவர் என்று அறியப்படுகின்ற அமைச்சர் மங்களசமரவீரவின் முதுகில் ஏறி தன்னை அடையாளப்படுத்த முனைகின்றார்.

இந்தப் போட்டியில் 20 ஆண்டுகளின் பின்னர் குதித்துள்ள மக்கள் விடுதலை முன்னணியோ, இவர்கள் எல்லோருக்கும் மேலாகச் செல்கிறது.

தேசிய மக்கள் சக்தி என்ற கூட்டின் சார்பில் மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திசாநாயக்க களமிறங்கியுள்ளார். அவரது கூட்டமைப்பின் பங்காளிகள் யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் பத்திரிகையாளர் சந்திப்பு நடத்தியிருந்தார்கள். ''இணைக்கப்பட்ட வடக்கு–கிழக்குக்கு சுயநிர்ணய உரிமையுடன் கூடிய தீர்வை முன்வைத்து அரசியல் நகர்வுகளை முன்னெடுக்கத் தயார்'' என்று அவர்கள் கூறியிருந்தனர். ஆனால், இதற்கு நேர் எதிரான நிலைப்பாட்டை அந்தக் கூட்டின் அரசதலைவர் வேட்பாளராகக் களமிறங்கியுள்ள அநுரகுமார வெளிப்படுத்தியுள்ளார்.

வடகிழக்கு இணைப்போ, கூட்டாட்சியோ வழங்கத் தயாரில்லை என்று அவர் தெட்டத் தெளிவாகக் கூறிவிட்டார்.

தமிழர் வாக்குகளை இலக்கு வைத்து, தமிழர்களைத் தம்பக்கம் இழுக்கக்கூடிய வாக்குறுதிகளை சிங்களக் கட்சிகள் மறுபடியும் முன்வைக்கத் தொடங்கிவிட்டன. எந்தப் பொய்யைச் சொல்லியாவது, தமிழர்களின் வாக்குகளைப் பெற்றுக்கொள்வதே அவர்களின் நோக்கமாக இருக்கின்றது.

சிங்களத் தலைவர்களுக்கு தமிழ் வாக்குகள் எவ்வளவு முக்கியமாக இருக்கின்றன என்பதும் இதனூடாக வெட்ட வெளிச்சமாகத் தெரிகின்றது. அப்படியொரு நிலமையில் அந்த வாக்குகளைப் பெறுமதியாக மாற்றுவதற்கு தமிழ்த் தலைமைகள் திட்டம் வைத்திருப்பது போல் தெரியவில்லை.

வழமைபோன்று கடைசி வரையில் இருந்து விட்டு, ஏதாவது ஒரு தரப்புடன் நிபந்தனைகளின்றி இணக்கத்துக்குச் சென்று அவர்களுக்கு வாக்களிக்கக் கோருவருதுதான் நடக்கப் போகின்ற தோ என்ற ஏக்கமும் இல்லாமல் இல்லை. இதனால் அனுபவித்த ஏமாற்றங்கள் போதும். இனியாவது கொஞ்சம் விழித்திருந்து, இராஜதந்திரத்துடன் காய்களை நகர்த்தினால் நன்று. இல்லாவிடின் வழமைபோன்று அடுத்த ஆட்சி மாற்றம் எப்போது வரும் என்று பார்த்துக்கொண்டு, இலவுகாத்த கிளிபோன்று இருக்கவேண்டியதுதான்.

# நாடாளுமன்ற அவமதிப்பை ஒருபோதும் ஏற்கவியலாது!

இந்துமதி

நாட்டின் மிக உயர்ந்த இடத்தை வகித்துக் கொண்டிருக்கும் நாடாளுமன்றம் தனது மதிப்பை மெல்ல மெல்ல இழந்துகொண்டிருப்பதை அண்மைய காலமாக அங்கு இடம்பெறுகின்ற வேண்டத்தகாத நிகழ்வுகள் எடுத்துக்காட்டுகின்றன.

நாடாளுமன்றத்தில் விவாதங்கள் இடம்பெறுவதும் குறிப்பிட்ட துறைக்குப் பொறுப்பான அமைச்சர்கள் எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களின் கேள்விகளுக்குப் பதிலளிப்பதும் வழக்கமாக இடம்பெறுகின்ற நிகழ்வுகளா கும். நாடாளுமன்றம் சுமுகமாக இயங்க வேண்டுமென்றால் ஆளும் தரப்பினரும் எதிர்க்கட்சியினரும் பொறுப்புணர்ந்து அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டும். ஆனால், இந்த நிலையை இங்கு காணமுடியவில்லை. நாடாளுமன்றத்தில் குழப்பங்களை ஏற்படுத்தி அதன் செயற்பாடுகளை மட்டுமல்லாது மதிப்பையும் சீர ழிக்கின்ற செயற்பாடுகளில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஈடுபடுகின்றனர். அண்மையில்கூட நாடாளுமன்றத்தில் பெரும் குழப்பநிலையொன்று காணப்பட்டது. ஆளும் தரப்பும் எதிர்த்தரப்பும் தமக்குள் முட்டி மோதிக் கொண்டனர். இதனால் சபையை ஒத்தி வைக்க வேண்டியதாயிற்று. சபா நாயகரைக் கூட உறுப்பினர்கள் மதிப்பதாகத் தெரியவில்லை. இதனால் நாடாளுமன்றத்தின் கறுப்புநாள் என மக்கள் விடுதலை முன்னணியினர் விமர்சிக்கும் அளவுக்கு நிலமை மோசமான கட்டத்தை எட்டி நின்றதைக் காண முடிந்தது.

### நாடாளுமன்றத்தின் மதிப்பை அனைவரும் காக்கவேண்டும்

நாடாளுமன்ற உறுப்பினர்களை மக்கள் தமது வாக்குப் பலத்தைக் கொண்டு தெரிவுசெய்து நாடாளுமன்றத்துக்கு அனுப்பி வைக்கின்றனர். தமது குறைகளையெல்லாம் அவர்களிடம் கூறி அவற்றுக்குத் தீர்வைக் காண வேண்டுமென்பதே அந்த மக்களின் எதிர்பார்ப்பாகவும் உள்ளது. இந்த எதிர்பார்ப்பை நிறைவு செய்யும் வகையில் நாடர்ளுமன்ற உறுப்பினர்கள் செயற்பட வேண்டும். நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வேதனம் உள்ளிட்ட வேறு கொடுப்பனவுகளாக மாதாந்தம் நான்கு லட்சம் ரூபாவுக்கு மேல் வழங்கப்படுவதாகவும் ஏராளமான பெறுமதி வாய்ந்த வரப்பிரசாதங்களை அவர்கள் அனுபவிப்பதாகவும் கூறப்படுகின்றது. இந்த நிலையில் பொறுப்புடன் செயற்பட வேண்டிய கடப்பாட்டை அவர்கள் கொண்டிருகின்றனர். நாட்டின் அரசமைப்பை உருவாக்கக் கூடிய அதிகாரம் நாடாளுமன்றத்திடமே உள்ளது. அரசமைப்பில் திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டுமானால் நாடாளுமன்றத்தின் ஒப்புதலைப் பெறவேண்டும். சட்டங்களை உருவாக்குகின்ற அதிகாரத்தையும் நாடாளுமன்றமே கொண்டிருக்கின்றது. இத்தகைய பெருமைகளைக் கொண்ட அந்த உயர்ந்த அமைப்பின் மதிப்பை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உள்ளது. அரச தலைவர்களாகப் பதவிவகித்த அனைவருமே நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்துள்ளனர். நாட்டின் முதலாவது அரச தலைவரான ஜே.ஆர்.ஜெயவர்த்தன, ஆர்.பிரேமதாச, சந்திரிகா குமாரதுங்க, மகிந்த ராஜபக்ச, மைத்திரிபால சிறிசேன ஆகியோர் நாடாளுமன்றத்தின் ஊடாகவே தமது அரசியல் வாழ்க்கையை நடத்திச் சென்றுள்ளனர்.

ஆனால், மகிந்த தரப்பின் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள கோத்தபாய இதற்கு விதி விலக்



காகக் காணப்படுகின்றார். அவர் நாடாளுமன்ற உறுப்பினராக ஒருபோதுமே பதவி வகித்ததில்லையென்பது குறிப்பிடத்தக்கது. இந்த நாட்டைப் பொறுத்தவரையில் நாடாளுமன்றத்தில் ஓர் அவை மட்டுமே இயங்கி வருகின்றது. இதில் 225 பேர் நாடாளுமன்ற உறுப்பினர்களாக உள்ளனர். அமைச்சர்கள், சபாநாயகர், தலைமை அமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர் அனைவருமே நாடாளுமன்ற உறுப்பினர்களாகவுள்ளனர். நாடாளுமன்றத்தில் அரைவாசிக்கும் மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட கட்சியால் ஆட்சியை அமைக்க முடியும். ஒன்றுக்கும் மேற்பட்ட கட்சிகள் ஒன்றிணைந்தும் ஆட்சியை அமைக்க முடியும். இந்த நாட்டைப் பொறுத்தவரையில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவரே தலைமை அமைச்சராகப் பதவி வகிக்க முடியுமென்ற எழுதாத விதியுள்ளது. எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கும் அவ்வாறானதொரு நிலையே காணப்படுகின்றது. இதற்கு விதிவிலக்காக அ.அமிர்தலிங்கமும் இரா.சம்பந்தனும் அந்தப் பதவியில் அமர்ந்தமை குறிப்பிடத்தக்கது.

### நாடாளுமன்ற உறுப்பினராவதற்கு கல்வித் தகைமை அவசியமாகவேண்டும்

அரசமைப்பின் பிரகாரம் இந்த நாட்டின் நாடாளுமன்றம் ஐந்து ஆண்டுகால ஆயுளைக் கொண்டது. நாடாளுமன்றத்தில் ஐந்து ஆண்டுகளை முழுமை செய்த நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தமக்குரிய ஓய்வூதியத்தைப் பெறுவதற்குத் தகுதியுடையவராகின்றார். அரச வேலையொன்றைப் பெறவேண்டுமென்றால் குறிப்பிட்ட சில கல்வித் தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும். ஆனால் நாடாளுமன்ற உறுப்பினராவதற்கு எந்தவிதமான கல்வித் தகைமையும் தேவையில்லையென்பது ஒரு குறைபாடாகவே காணப்படுகின்றது. இதை நிவர்த்தி செய்வது அவசியமானதாகும்.

நாடாளுமன்றத்தில் செங்கோலைத் தூக்கிச் செல்வதும் உறுப்பினர்கள் கீழ்த்தரமான வார்த்தைப் பிரயோகங்களில் ஈடுபடுவதும் ஒருவரோடொருவர் சண்டையிடுவதற்கு முயற்சிப்பதும் தர்க்குதலை மேற்கொள்வதும், சபாநாயகரின் கட்டளைகளை மதிக்காமல் செயற்படுவதும் சபை அமர்வுகளில் அடிக்கடி பங்குபற்றாமல் தவிர்த்து விடுவதும், உறுப்பினரொருவர் சபையில் பேசும்போது குறுக்கீடு செய்வதும், கூச்சல் குழப்பங்களில் ஈடுபடுவதும் எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாதது என்பதுடன் நாடாளுமன்ற விழுமியங்களை அழித்து விடுகின்ற செயற்பாடுகளாகும். மக்களின் வாக்குகளால் நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் அனைவரும் நாடாளுமன்றத்துக்கு உரிய மதிப்பை அளித்தல் அவசியமானதாகும். நாடாளுமன்றம் தொடர்ந்து அவமதிக்கப்படுமானால் இந்த நாட்டின் ஜனநாயகமே அழிந்துவிடும்.

# சிரியாவின் எதிர்காலம்?

ஜோர்ஜ்ஸ்ளெமாசோ, “போர் என்பது வெற்றியில் முடியும்பேரழிவுகளின்தொடர்ச்சி”என்பார். நவீன உள்நாட்டுப் போர்கள் பேரழிவுகளில்முடியும்குழப்பங்களின் தொடர்ச்சி.

சுஸ்தர்ஹேறால்ச்சருக்கு16வயது. அதிகாலையில்25கிலோமீற்றர்ஓடுகிறார். தோள்பட்டையில் துப்பாக்கி. கடந்த மாதம் வரை சுஸ்தர் மாணவி. இப்போது சிரியாவின் குர்து இனக் குழுக்களில் ஒன்றான குர்திஷ் இஸ்லாமிய விடுதலை முன்னணியின் வீராங்கனை. லட்சியம் சிரிய குர்திஸ்தான். பொது எதிரி பஷார் அல் அசாத்.

கல்லூரிப் படிப்பைப் பாதியில் கைவிட்டவர் அபு. இப்போது ‘இராக் சிரிய இஸ்லாமிய தேசம்’ அமைப்பின் ஜிகாதி. லட்சியம் இராக் சிரிய இஸ்லாமிய தேசம். பொதுஎதிரிபஷார்அல்அசாத்.

இப்படி நூற்றுக்கும் மேற்பட்ட ஆயுதக் குழுக்கள் வெவ்வேறு இனங்களைச் சேர்ந்தவை, முரண்பாடான இலக்குகளைக் கொண்டவை. அவற்றில் பலதங்களுக்குள்ளேயே மோதிக்கொள்பவை. ஒருசர்வாதிகார அரசுக்குஎதிராகக் காட்டுத்தனமாக ஆயுதப் போராட்டத்தில் இறங்கினால்?



### சிரயப் பேரழிவு

சிரியாவில்கடந்த31மாதங்களில்ஐ.நா. சபையின்கணக்குப்படி1.2லட்சம்பேர் கொல்லப்பட்டிருக்கிறார்கள். ஒரு கோடிப் பேர் அகதிகளாகியிருக்கிறார்கள். சமகாலத்தின் கொடூர வரலாறாகி இருக்கிறது சிரிய உள்நாட்டுப் போர். சிரியத் தாக்குதல்களில் மனித உயிர்களே முதன்மை இலக்குகள்.

சிரியமக்கள்தொகையில்59வீதமானவர்கள் சன்னிகள். 13 வீதமானவர்கள் ஷியாக்கள். தலா 10 வீதம் கிறிஸ்தவர்களும்குர்துக்களும். 1963ஆம்ஆண்டில் பாத் கட்சியின் கீழ் சிரியா வந்தது. 1971ஆம் ஆண்டில் ஹபீஸ் அல் அஸாத் அதிபரானார். ஒற்றையாட்சி. எதிர்க்குரல்களுக்கு ‘கைது, சித்தரவதை, கொலை’என்பதே நீதி. 1982 ஆம் ஆண்டில் ஹாமா போராட்டங்களின்போது மட்டும் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள்கொல்லப்பட்டார்கள். 2000ஆம் ஆண்டில் அவருடைய மறைவுக்குப் பின், மகன் பஷார் அல் அசாத்பதவியேற்றார். முந்தைய ஆட்சியின் நீட்சி. 2010ஆம் ஆண்டில் “உலகில் மனித உரிமைகள் துளியும் இல்லாத நாடுகளில் ஒன்று சிரியா” என்றது மனித உரிமைகள் கண்காணிப்பகம். அரபுவசந்தத்தின்தொடர்ச்சியாக 2011 மார்ச்சில் தொடங்கிய போராட்டங்கள் உள்நாட்டுப் போராக உருவெடுத்தன. போரின்மையநீரோட்டம் இன அரசியல்.

### சியாக்களுக்கு எதிரான போர்

அதிபர் அசாத், ஷியா இனத்தின் உட்பிரிவான அலாவியைச் சேர்ந்தவர். ஏனைய இனங்கள் ஒடுக்கப்படவில்லை என்றாலும், எண்ணிக்கையில் மிகச் சிறுபான்மையினரான அலாவிகளையேமுடிவெடுக்கும்பதவிகளில் அமர்த்தியிருக்கிறார் அசாத். பெரும்பான்மையினரானசன்னிகளிடையே வன்மத்தையும் குர்துக்கள் உள்ளிட்ட சிறுபான்மையினரிடையே அரசியல் ஏக்கத்தையும் இது வளர்த்திருந்தது. உள்நாட்டுப்போர்எல்லோருக்குமான வாய்ப்பாகி இருக்கிறது. 10 துப்பாக்கிகள் கிடைத்தால், ஒரு புதிய ஆயுதக்குழு. ஷியாக்கள், குர்துக்கள், கிறிஸ்தவர்களைக்குறிவைத்துசன்னி இனக் குழுக்கள் வேட்டையாடுகின்றன. வாய்ப்புள்ளஇடங்களில்எல்லாம் சன்னிகளைப் பழிதீர்க்கின்றனர் ஷியாக்களும் குர்துக்களும். கிறிஸ்தவர்கள் பதுங்குகிறார்கள்; தாக்குகிறார்கள்; பலியாகிறார்கள். ஒவ்வோர் இனத்துக்கும் பல அணிகள். ஒவ்வோர் அணியிலும் பல குழுக்கள்.

நவீன வரலாற்றில் ஸ்பெய்ன், லெபனான், போஸ்னியா உள்நாட்டுப்போர்களுக்குப் பின் அதிகமான வெளிநாடுகளின்தலையீடும்பயங்கரவாத இயக்கங்களின் நேரடிப் பங்கேற்பும் உள்ள போராகியிருக்கிறது சிரியப் போர். நேரடியாகவும்மறைமுகமாகவும்சிரிய அரசுப்படைகளுக்குஆதரவாகஈரான், ரஷ்யா, சீனா, வடகொரியா, பெலாரஸ், ஈராக், வெனிசுலா, அல்ஜீரியா ஆகியவையும் சிரிய எதிர்ப்புப் படைகளுக்கு ஆதரவாக அமெரிக்கா, இஸ்ரேல், பிரான்ஸ், இங்கிலாந்து, சவூதி அரேபியா, கத்தார், துருக்கி ஆகியவையும் பங்கேற்றிருக்கின்றன. அசாத்துக்கு ஆதரவாக ஹெஸ்புல்லா, ஹமாஸ் எதிராக முஸ்லிம் சகோதரத்துவ இயக்கம், அல்கொய்தா இறங்கியிருக்கின்றன.

அரபுப் போர்களுக்கும் சிரிய உள்நாட்டுப்போருக்கும் ஒரு முக்கிய வேறுபாடு உண்டு. அவை ஏகாதிபத்தியங்களின் வேட்டைக் களங்கள். இது இஸ்லாமிய சர்வதேசியத்தின்பரிசோதனைக்களம்.

### சிரியாவில் அமெரிக்காவின் நோக்கம் எத்தகையது?

அமெரிக்காவின்நோக்கம் இங்குஎண்ணெய் அல்ல (பன்னாட்டு எண்ணெய் உற்பத்தியில் சிரியாவின் பங்கு அரை சதவிகிதத்துக்கும் குறைவு) ஈரானுடன் நட்பு, இஸ்ரேலுடன்மோதல்எனும்அயலுறவைப்பேணும்அசாத்தை ஆட்சியிலிருந்துஅகற்றிஒருபொம்மைஅரசை நிறுவுவதன் மூலம் இஸ்ரேலைப் பலப்படுத்துவது.

ஈரானைத் தனிமைப்படுத்துவது. மத்திய ஆசியாவைத்தங்கள்முழுக்கட்டுப்பாட்டில் கொண்டுவருவது. ஆனால், அசாத்எதிர்ப்புநோக்கில்ஊக்குவிக்கப்பட்ட இந்தப் போரில், இஸ்லாமிய சர்வதேசியம் எடுத்திருக்கும் விஸ்வரூபம் மேற்குலகைக்கையைப்பிசையவைத்துள்ளது.

“ஒரே நாளில் 300 குண்டுகள் விழுந்தன. முதல்மூன்று குண்டுகள்விழுந்த சத்தத்திலேயே என் குழந்தைகள் துடிதுடித்து இறந்தனர். அன்றிரவு என் மனைவி இறந்தாள். காலையில் வெளியே பார்த்தபோது நான் மட்டும் ஒரு பைத்தியமாக இருந்தேன்.”

“ஹலபில் எங்கே குண்டு விழ வேண்டும்என்பதை இஸ்தான்புல்தீர்மானிக்கிறது. சிரியாவின் பல தலைமுறைச் சிறுபான்மையினரை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாகும் கூலிகள் சுட்டுக்கொல்கிறார்கள். இது எப்படி விடுதலைப்போராட்டம்ஆகும்?ஷியாக்கள் என்பதால் சக முஸ்லிம்களையே சன்னிகள் கொல்கிறார்கள். இவர்கள் எப்படி ஜிகாதிகள் ஆவார்கள்?”

“நான்முதல்போராட்டத்துக்குப்போனபோது என்னுடைய கனவு ஜனநாயக சிரியா. இப்போது அச்சமாக இருக்கிறது. போரில்அசாத்ஜெயித்தால்சர்வாதிகாரம் தொடரும். அசாத் தோற்றால் காட்டுமிராண்டிகள் கைகளில் நாடே சிதறும். சிரியா இப்போது நரகம்.”

குண்டுகள்சத்தத்தின்நடுவேபுதைகின்றனமனிதத்தின்குரல்கள். ‘கடைசியில் போர் எதையுமே சரிசெய்யவில்லை’ என்கிற அகதா கிறிஸ்டியின் வார்த்தைகள் நினைவுக்கு வருகின்றன. ■

## ஆசிரியருக்கான கடிதம்

### முதியவர்களின் வழிகாட்டல்கள் பிற்போக்குத்தனமாக அமையக்கூடாது!

கடந்த ஞாயிற்றுக்கிழமை மானிப்பாயில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த தனியார் பேருந்தொன்றில் இடம்பெற்ற சம்பவம் எனக்கு மிகுந்த சங்கடத்தைத் தந்தது.

இளம் பெண்ணொருவர் மானிப்பாயில் இறங்கினார். அவர் இறங்கும்போது கைப்பை ஒன்று பேருந்தில் இருந்து கண்டெடுக்கப்பட்டது. அந்தப் பையை தன்னுடையது என்று உரிமைகோரி உடைமைப்படுத்தினார் வயோதிபப் பெண்ணொருவர்.

பேருந்து ஆனைக்கோட்டைச் சந்தியை அடைந்ததும் பேருந்தை வழிமறித்து முச்சக்கர வண்டியொன்று வந்து நின்றது.

அதிலிருந்து இறங்கிய மேற்குறித்த இளம்பெண் பேருந்தில் தனது கைப்பை தவறவிடப்பட்டுள்ளது என்று நடத்துநரிடம் உரிமை கோரினார். வேறு வழியில்லாமல் வயோதிபப்பெண் அந்தக் கைப்பையை ஒப்படைத்தாள். இது தேவைதானா? முதியவர்களின் வழிகாட்டல்கள் இவ்வாறுதான் அமைய வேண்டுமா?

எஸ்.ஜெயா

## வாசகர்களே!

ஆசிரியருக்கான கடிதம் பகுதிக்கு வந்துசேர்கின்ற பல கடிதங்கள் எழுதுபவரின் சுயவிவரங்கள் இல்லாத காரணத்தால் பிரசுரிக்க முடியாத நிலையில் இருக்கின்றன. ஆகையால் தாங்கள் ஆசிரியருக்கு எழுதுகின்ற கடிதத்தில் உங்களுடைய பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் பயன்படுத்துபவராக இருந்தால் மின்னஞ்சல் முகவரி போன்றனவற்றைத் தவறாது குறிப்பிட்டு, அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். தங்களின் பெயர் விவரங்களை வெளிப்படுத்த வேண்டாம் என்றால் அது குறித்துக் குறிப்பிடுங்கள். மேற்குறித்த விடயங்கள் இணைக்கப்படாத கடிதம் பிரசுரிக்கப்படாது என்பதைக் கவனத்தில் கொள்க! எழுதுகின்ற விடயத்தை உறுதிப்படுத்தும் வகையிலான ஆவணங்கள் ஏதும் இருந்தால் அவற்றை இணைத்து அனுப்புவதும் சிறந்தது.

## பாதுகாப்புத் தடைகளை சேதப்படுத்திய விசமிகள்

யாழ்ப்பாணம், செப்.10
வலிகாமம், நீர்வேலி கந்தசுவாமி கோவிலின் கிழக்குப் புறமாகவுள்ள வீதிக்கு போடப்பட்ட பாதுகாப்புத் தடை வேலைகளை விசமிகள் சிலர் சேதப்படுத்தியுள்ளனர்.
அங்கிருந்த இரும்பிலான பொருள்களையும் களவாடிச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.
இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு இடம்பெற்றது.
அங்கிருந்த பொருள்களும் திருடப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.
எனினும், இந்த வீதிக்கு மீண்டும் போக்குவரத்துச் செய்ய முடியாத அளவுக்கு பாதுகாப்புத் தடை போடப்படவுள்ளது என்று கோவில் பரிபாலன சபையினர் தெரிவித்தனர். (கு-17)

# "டெங்கு அற்ற பாடசாலை" செயற்றிட்டம் வவுனியாவில்

வவுனியா, செப்.10
"டெங்கு அற்ற பாடசாலை" என்ற எண்ணக்கருவில், வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவால் பாடசாலைகளுக்கிடையில் வருடம் தோறும் நடத்தப்படுகின்ற செயற்றிட்டம் நேற்று ஆரம்பிக்கப்பட்டது.



14 பாடசாலைகளில் இந்தச் செயற்றிட்டம் மேற்கொள்ளப்படும். முதற்கட்டமாக சிறீராமபுரம் திருஞானசம்பந்தர் வித்தியாலயம், அண்ணாநகர் பரமேஸ்வரா வித்தியாலயம், நொச்சிமோட்டை இளநிலை உயர்தர வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் நேற்று ஆரம்பிக்கப்பட்டது.
இந்தச் செயற்றிட்டத்தில் பாடசாலைக்கு உள்ளே, வெளியே எவ்வாறான வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. பெற்றோர் பாடசாலைக்கு செய்யும் உதவிகள் போன்ற பல்வேறு விடயங்கள் ஆராயப்படும். மூன்று கட்டமாக போட்டிகள் நடத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
மேற்பார்வை பொது சுகாதாரப் பரிசோதகர் க.தியாகலிங்கம் தலைமையில் இடம்பெற்ற ஆரம்ப நிகழ்வில், மாவட்ட இடர் முகாமைத்துவ பிரிவினர், வவுனியா பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், சுற்றாடல் அதிகார சபையினர், வலயக் கல்விப் பணிமனையினர் கலந்து கொண்டனர். (க-110)



## அக்கராயன் வித்தியாலயத்தில் புதிய ஆசிரியர் விடுதி திறப்பு

கிளிநொச்சி, செப்.10
அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை திட்டத்தின் கீழ் கிளிநொச்சி அக்கராயன் மகா வித்தியாலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட ஆசிரியர் விடுதி நேற்றுத் திறக்கப்பட்டது.
நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் விடுதியைத் திறந்து வைத்தார்.
நிகழ்வில் வலயக் கல்வி அதிகாரிகள், ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.
கல்வி அமைச்சினால் ஒதுக்கப்பட்ட சுமார் 9 மில்லியன் ரூபா நிதியில் இந்த விடுதி அமைக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)



## சைவ பிரகாசா பாடசாலையில் கற்றல் வள நிலையம் திறப்பு

வவுனியா, செப்.10
வவுனியா சைவப் பிரகாசா ஆரம்பப் பாடசாலையில் கற்றல் வள நிலையம் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.
முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் மற்றும் விருந்தினர்கள் கட்டடத்தை நாடாவெட்டித் திறந்து வைத்தனர்.
பண்பு, அறிவு மற்றும் வலுமிக்க மனித நேய மாணவ சமுதாயத்தை உருவாக்கும் நோக்கில், கல்வி அமைச்சால் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை என்ற தேசிய கருத்திட்டத்தின் கீழ், அமைச்சின் 17 மில்லியன் ரூபா நிதி மூலம் இரண்டு மாடிகளைக் கொண்ட கற்றல் வள நிலையம் பாடசாலையில் அமைக்கப்பட்டுள்ளது.
அதிபர் தியாகசோதி யுவராஜா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், தெற்கு வலயக்கல்வி அதிகாரி மு.இராதகிருஸ்ணன், பிரதிக்கல்விப் பணிப்பாளர்களான சு.அமிர்தலிங்கம், பா.பாலசுந்திரன், அயல்பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர். (க-110)

## அனிஞ்சியன்குளம் பாடசாலையில் கற்றல் வள நிலையம் திறப்பு

மல்லாவி, செப்.10
அண்மையில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை எனும் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் முல்லைத்தீவு அனிஞ்சியன்குளம் தமிழ்க் கலவன் வித்தியாலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட ஆரம்பக் கல்வி கற்றல் வள நிலையம் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.
பாடசாலை அதிபர் திருமதி ந.விஜயராஜ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கலந்து கொண்டு நிலையத்தைத் திறந்து வைத்தார்.
நிகழ்வில் மாங்குளம் வலயக் கல்விப் பணிப்பாளர் மாலதி முகுந்தன், பிரதிக் கல்விப் பணியாளர் பிரதிவானந்தா, வணிக மன்றத்தினர், பெற்றோர்கள், மல்லாவிப் பொலிஸ் அதிகாரி ஆகியோர் கலந்து கொண்டனர். (க-74)





## ஓய்வுபெற்ற ஆசிரியருக்கு பாடசாலையில் மதிப்பளிப்பு

வவுனியா, செப்.10
வவுனியா, இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி ஆசிரியர் த. சிவகுமார் பாடசாலை சமூகத்தால் மதிப்பளிக்கப்பட்டார்.
சேவைக்காலத்தில் இருந்து அவர் ஓய்வுபெறுவதை அடுத்து, பாடசாலை சமூகத்தால் கடந்த வெள்ளிக்கிழமை மதிப்பளிக்கப்பட்டார்.
பாடசாலையின் அதிபர் அருட்சகோதரி செபமாலை ஜெபநாயகி தலைமையில் நிகழ்வு நடைபெற்றது.
மாணவர்களின் பாண்ட் வாத்திய அணிவகுப்புடன் அழைத்துச் செல்லப்பட்ட ஆசிரியருக்கு, புனித அந்தோனியார் ஆலயத்தில் ஆலயப் பங்குத்தந்தை அருட்பணி எஸ். ஜெயபாலன் தலைமையில் சிறப்புப் பிரார்த்தனைகள் மேற்கொள்ளப்பட்டன.
பாடசாலை ஆசிரியர் நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில் நிகழ்வு நடைபெற்றது. நிகழ்வில் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்துகொண்டனர். (க)

## மாணவர் மதிப்பளிப்பும் மரநடுகையும்

யாழ்ப்பாணம், செப்.10
முல்லைத்தீவு, யோகபுரம் மகா வித்தியாலயத்துக்குப் பெருமை சேர்த்த மாணவர்களுக்கான மதிப்பளிப்பு மற்றும் மரநடுகை இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு பாடசாலையில் இடம்பெறவுள்ளன.
நிகழ்வில் 2018 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்கள் மதிப்பளிக்கப்படவுள்ளனர்.
யோகபுரம் மகா வித்தியாலய பழைய மாணவர் அபிவிருத்தி ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நிகழ்வுகள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க)



## திறன்வகுப்பறை திறப்பு

முல்லைத்தீவு, செப்.10
புதுக்குடியிருப்பு, சிறீசுப்பிரமணிய வித்தியாசாலையில் அமைக்கப்பட்ட 9 ஆவது திறன்வகுப்பறை நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.
நிகழ்வில் முல்லைத்தீவு வலயக்கல்விப் பணிமனை கணக்காளர் க.கடம்பசோதி, வவுனியா கனினி வளமுகாமையாளர்கள் சு.பரமேஸ்வரன், தி.சுதர்சன், சிறுவர் நிதியம் நிறுவனத்தின் திட்டமுகாமையாளர் க.விமல், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மாணவர்கள் கலந்துகொண்டனர்.
தம்பிப்பிள்ளை ஜெகதாசன் ஞாபகார்த்தமாக சுகந்தி ஜெகதாசன் திறன்வகுப்பறைக்குரிய உபகரணங்களை வழங்கியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-222)

# எம்.பிக்களுக்கான 100 மில்லியனில் 25 வீதம் மானிப்பாய் தொகுதிக்கே

## சரவணபவன் எம்.பி உறுதியளித்தார்

யாழ்ப்பாணம், செப். 10

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மேலதிகமாக 100 மில்லியன் ரூபா நிதி கிடைக்கப்போகின்றது. அந்த நிதியில் எந்தக் கட்டுப்பாடுகளும் விதிக்கவில்லை என்றால், அதிலிருந்து 25 வீதத்தை மானிப்பாய் தொகுதிக்காக ஒதுக்குகிறேன் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார்.

மானிப்பாய் சந்தைக் கட்டடத் தொகுதியை நேற்றுமுன்தினம் திறந்து வைத்து உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது; நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதிகளின் மூலம் தற்போது அபிவிருத்திகள் நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கின்றன. நாடாளுமன்ற உறுப்பினர்களூடாக நிதிகள் செல்கின்றபோது பிரதேச சபைகளுக்கு வேலைச் சுமைகள் அதிகரித்துள்ளன. இப்போது மேலதிகமாக100 மில்லியன் ரூபா நிதி கிடைக்கப்போகின்றது. அந்த நிதி தொகுதிக்கா, அல்லது யாழ்ப்பாண மாவட்டத் தேர்தல் தொகுதிக்காக என்பது பற்றிய அறிவித்தல்கள் வரவில்லை. அதற்குரிய வேலைகள் வித்தியாசமானவை. அதில் கூடுதலாக வாழ்வாதாரம், வீட்டுக் கூரைகளை அமைப்பது, விளையாட்டுக் கழகங்களுக்கான ஜிம் அமைத்தல் போன்றன உள்ளடக்கப்பட்டுள்ளன. எனவே அந்த



இடத்தில் எமக்குக் கட்டுப்பாடுகள் விதிக்காது விட்டால் அந்த நிதியில் 25 வீதத்தை மானிப்பாய் தொகுதிக்கு ஒதுக்குகிறேன்.

நாங்கள் சலுகை அரசியலுக்கு போகவில்லை. அபிவிருத்தியின் தேவை எமக்கு உள்ளது. எந்தக் கட்டத்திலும், நாங்கள் முதலாவதாக எங்களுடைய அரசியல் உரிமைகளைத்தான் கேட்போம். அபிவிருத்திகளை வைத்து சலுகையாகக் கருதக்கூடாது. இதை நேரடியாகவே சொல்லிவிட்டோம். அவர்களுக்கும் அது தெரியும். அரசதலைவர் தேர்தலைப் பொறுத்துத்தான் இந்த அரசின் காலமுண்டு. வருகின்ற மாசிமாதம் அரச தலைவருக்கு அதிகாரங்கள் தானாகவே செல்கின்றன. அதன்பின் இந்த அரசை அவர் எப்பொழுதும் கலைக்கலாம். ஒருவேளை தொடர்ச்சியாக இந்த அரசு இருக்கக்கூடியதாக அமையுமாக இருந்தால் மீண்டும் அபிவிருத்திகளுக்குரிய நிதிகளைப் பெறக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளன.

நாங்கள் இப்போது எந்த முடிவும் எடுக்கவில்லை.

மானிப்பாய் மக்களுடன் நான் இணைந்து செயற்படுவேன். தவிசாளர் வியாபாரக் கட்டடம் ஒன்றுக்கு நிதிகோரியுள்ளார். அவற்றைப் பெறுவதற்கும் முயற்சிக்கின்றேன். பனை நிதியத்தின்மூலம் இந்த நிதியை எடுக்கலாமா என்று சிந்தித்துள்ளேன். அதன் மூலம் எடுக்க முடிந்தால் அதைப்பெற்றுத் தருவேன் - என்றார். (த-21)

---

# கணினி பாவிப்பது நன்றெனினும் அதன் பாதிப்புப் பற்றியும் எச்சரிக்கை வேண்டும்

## முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெரிவிக்கிறார்

யாழ்ப்பாணம், செப். 10

தற்காலத்தில் கணினி பாவிப்பதன் ஊடாக எவ்வளவோ பயனைப் பெற முடிந்தாலும் அதன் அடுத்த பக்கத்தையும் தெரிந்துகொள்ளவேண்டும் என்று இப்பொழுதிருந்தே எச்சரிக்கை செய்கின்றேன் என்று வடக்கு மாகாண சபை முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.



இலண்டன் கனகதுர்க்கைஅம்மன் ஆலய ஆதரவில் கணினிப் பயிற்சி நிலையைத் திறப்பு நிகழ்வு மதவாச்சி மன்னார் வீதியில், மன்னார், முள்ளிய பள்ளம் பகுதியில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'ஈமெயில்' நல்லதொரு தொலைத் தொடர்பாடல் ஊடகமாக இன்று பரிணமித்துள்ளது. கணினியின் நல்லஅம்சங்களுள் அதுவும் ஒன்று. அதைவிட கூகுள் ஊடாக உலகின் எந்தப் பகுதியாக இருந்தாலும் அதனுடன் தொடர்பு கொள்ளவும், அந்த இடங்கள் பற்றி அறிந்துகொள்ளவும் அங்கிருப்போருடன் தொடர்புகொண்டு கருத்துப்பரிமாறவும் கணினி வாய்ப்பளித்துவருகின்றது. கல்வியறிவுக்குத் தற்போது கணினி இன்றியமையாததாக மாறியுள்ளது.

மாணவர்கள் பாடம் எதுவாக இருந்தாலும் அதுபற்றிய மிக அண்மைய அறிவை, ஆராய்ச்சிகளின் முடிவுகளை ஒரு நொடியில் அறிய கணினி உதவுகின்றது.

நாங்கள் கணினி முன் இருக்கும் நிலை, சிலநேரங்களில் தலைவலியை, கண் பார்வையில் மந்தத்தை ஏற்படுத்துகின்றது. சிலநேரங்களில் சரியாக தூங்கமுடியாமல் அவஸ்தைப்படுகின்றோம். சிலருக்கு மனச் சோர்வையும் ஏக்கத்தையும் ஏற்படுத்துகின்றது. இவற்றால் மாணவ மாணவியரின் படிப்புப் பாதிக்கப்படுகின்றது. நாமாகச் சிந்தித்துச் செயலாற்றும் திறத்தைக்கூட நாம் சில தருணங்களில் பறிகொடுத்து விடுகின்றோம் என்று ஆய்வுகள் கூறுகின்றன.

எப்பொழுதும் வருமுன் காப்பவனே சிறந்தவன். இளையோர் கணினி பாவிப்பின் அடுத்த பக்கத்தையும் தெரிந்துகொள்ளவேண்டும் என்று இப்பொழுதிருந்தே எச்சரிக்கைசெய்கின்றேன். - என்றார். (த)

---

## முதியோர் விழிப்புணர்வு செயற்பாடு வவுனியாவில்

வவுனியா, செப். 10

பன்னாட்டு முதியோர் தினம் ஒக்ரோபர் முதலாம் திகதி உலகம் முழுவதும் கொண்டாடப்படவுள்ள நிலையில் இதனை முன்னிட்டு வவுனியா பாடசாலை மாணவர்களுக்கு முதியோர் தொடர்பான விழிப்புணர்வுச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள் என. சிதம்பரபுரம் ஸ்ரீ நாகராஜா வித்தியாலயத்தில் நேற்று விழிப்பு ணர்வுச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. (ம-110)

---

## அராலியூர் சுந்தரம்பிள்ளை காலமானார்

யாழ்ப்பாணம், செப்.10



ஈழத்தின் பிரபல நாடக ஆசிரியரும், நாடகக் கலைஞரும், எழுத்தாளருமான கலாபூசணம் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை தனது 86 ஆவது வயதில் நேற்று முன்தினம் காலமானார்.

யாழ்ப்பாணம் அராலி தெற்கை பிறப்பிடமாகக் கொண்ட சுந்தரம்பிள்ளை, யாழ்ப்பாணம் நீராவியடியில் நீண்டகாலமாக வசித்து வந்தார்.

இவர் சிறந்த வானொலி நாடகக் கலைஞர் ஆவார். இலக்கிய விமர்சன நூல்கள், இலக்கிய வழிகாட்டல், நாடக நூல்கள், நாவல்கள், கற்பித்தல் நூல்கள் எனப் பல நூல்களை எழுதியுள்ள இவர், சிறுகதைகளையும் எழுதியுள்ளார். கலைமாணி, கல்வியியல் டிப்ளோமா ஆகிய பட்டங்களைப் பெற்ற அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை ஆசிரியராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்.

நாடகங்கள் 500 வரை எழுதியுள்ள அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை, பன்னிரண்டு நாடகங்களை நூலுருவாக்கியுள்ளார். இலக்கிய விமர்சன நூல்கள் நான்கையும், இலக்கியம் படைக்க வழிகாட்டும் நூல்கள் மூன்றையும், இலக்கியம் கற்பிக்க வழிகாட்டும் நூல்கள் ஒன்றையும் வெளியிட்டுள்ளார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் தமிழ்ச்சேவை நடத்திய வானொலி நாடகம், எழுதும் போட்டியில் 2000 ஆம் ஆண்டு முதலாம் பரிசும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமும், தேசிய ஒருங்கிணைப்பு செயலகத்திட்ட பணியகமும் ஒருங்கிணைந்து 1998 ஆம் ஆண்டு நடாத்திய வானொலி நாடகம் எழுதும் போட்டியில் முதலாமிடமும் இவருக்குக் கிடைத்தது.

"முதலாம்பிள்ளை", எங்கள் நாடு", "இமயம்" ஆகிய நாடக நூல்களுக்கு வடக்கு - கிழக்கு மாகாண சபையின் பரிசில்கள் இவருக்குக் கிடைத்தன. இமயம் நாடக நூலுக்கு இலங்கை அரசின் சாகித்தியப் பரிசும் இவருக்குக் கிடைத்தது. 2007 ஆம் ஆண்டு இலங்கை வடமாகாண சபையின் ஆளுநர் விருதையும், 2001 ஆம் ஆண்டு இந்து சமயக் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் "கலாபூசணம்" விருதையும் அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை பெற்றுள்ளார்

இவரது முதலாவது சிறுகதை 1950 ஆம் ஆண்டு சுதந்திரன் பத்திரிகையில் 'கையொப்பம்' எனும் தலைப்பில் வெளியானது. இவரின் சிறுகதைகள் இலங்கையில் வெளிவரும் தேசியப் பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் வெளிவந்துள்ளன.

பல எண்ணிக்கையான சிறுகதைகளை இவர் எழுதியிருந்தாலும், சிறுகதைத் துறையை விட நாடகத்துறையிலேயே இவர் அதிக ஆர்வம் கொண்டிருந்தார்.

இவரது முதலாவது நாடகம் கடந்த 1954 ஆம் ஆண்டு டிசம்பர்31 இல் 'இழந்த காதல்' எனும் தலைப்பில் அராலி சரஸ்வதி வித்தியாசாலையில் அரங்கேற்றம் செய்யப்பட்டது. இந்த நாடகத்தின் நாடக ஆசிரியராகவும், கதாநாயகனாகவும் இவரே திகழ்ந்தார். 1959 ஆம் ஆண்டு ஆசிரியராகப் பணியேற்ற பின்னர், இவர் தனது சொந்த மண்ணான அராலியில் மேடை நாடகத் தொழிற்பாடுகளில் முழு மூச்சில் ஈடுபட்டார்.

இவரது முதலாவது வானொலி நாடகம் இலங்கை வானொலியில் "நானே ராஜா" எனும் தலைப்பில் 1980 ஆம் ஆண்டு ஒலிபரப்பப்பட்டது. இதனைத் தொடர்ந்து இவர் சுமார் 385 க்கும் மேற்பட்ட வானொலி நாடகங்களை இவர் எழுதியுள்ளார்.

இவர் ஆசிரியர் பணியிலிருந்து ஓய்வுபெற்ற பின்னர் முழுநேர வாசிப்பையும் எழுத்தையும் தனது இரு கண்களாகக் கொண்டு வாழ்ந்து வந்தார். (க)

# காணியைத் துப்புரவு செய்தவருக்கு எதிராக வனவளத்துறையினர் வழக்கு

## விசாரணைக்காக 3ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

தலைமன்னார், செப். 10

அரசு மக்களுக்கு என்று வழங்கிய காணியில் வீடு அமைக்கும் நோக்கில் காணியைத் துப்புரவு செய்துகொண்டிருந்தவருக்கு எதிராக வனவளத் திணைக்களத்தி னர் மன்னார் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். காணியைத் துப்புரவு செய்ததன் மூலமாக அரசுக்கு 5ஆயிரம் ரூபா இழப்பை ஏற்படுத்தியுள்ளனர் என்றும்- வனவளத் திணைக்களத்தினர் குற்றச்சாட்டியுள்ளனர்.

இந்த வழக்கு கடந்த வெள்ளிக்கிழமை நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் தாக்கல் செய்தனர். அது விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மன்னார், நானாட்டான் பிரதேச சபைக்கு உட்பட்ட கொம்பன் சாய்ந்த குளம் கிராமத்தில் 24 குடும்பங்களைச் சேர்ந்த தமிழர்கள் 1990 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலத்திலிருந்து வசித்து வந்துள்ளனர்.

அந்தப் பகுதிக் காணி அரச காணியாகக் காணப்பட்டபோதும் காணிக் கச்சேரி நடத்தப்பட்டு, அந்தப் பகுதியிலுள்ள காணிகள் இல்லாத மக்களுக்கு சட்ட ரீதியாகக் காணிகள் குடியிருக்கவென்று வழங்கப்பட்டு விட்டன. அந்தக் காணிகளை பொதுமக்களுக்குச் சொந்தமாகி விட்டதால் காணிகளைத் துப்புரவு செய்கின்றனர். அதன்போதே வன வளத் திணைக்களத்தினர் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

போர்க்காலத்தில் இவ்வாறான காணிகளை இராணுவத்தினர் சுவீகரித்து வைத்துள்ளனர். தற்போது வனவளத் திணைக்களம் மற்றும் தொல்பொருள் திணைக்களம் என பன பொது மக்களின் காணிகளைச் சுவீகரிப்பதில் தீவிர கவனம் செலுத்தி வருகின்றன. வனவளத் திணைக்களம் முன்வைத்துள்ள வழக்கில் காணிகள் மக்களுக்குச் சட்ட ரீதியாக வழங்கப்பட்டுள்ளன.

ஒருவருக்கு மட்டுமல்ல இன்னும் பலருக்கு எதிராகவும் வனவளத் திணைக்களத்தினர் வழக்குத் தொடுத்து, பொதுமக்களின் காணிகளைச் சுவீகரிப்பதில் தீவிர கவனம் செலுத்தி வருகின்றனர் என்று சட்டத்தரணி கருத்து முன்வைத்தார்.

வழக்கு மேலதிக விசாரணைக்காக எதிர்வரும் 3ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இதேவேளை - 24 குடும்பங்கள் சம்பந்தப்பட்டுள்ள இந்த வழக்கில், சகலருக்கும் பொதுவானதாக வழக்குத் தாக்கல் செய்யாது தனித்தனியேதான் வனவளத் திணைக்களத்தினர் வழக்குத் தாக்கல் செய்ய முற்படுகின்றனர். ஏன் என்று கேட்டபோது சட்டத்தரணி டினேசன் தெரிவித்ததாவது:

இது வனவளத் திணைக்களத்தினரின் திட்டமிட்ட சதி. தனித்தனியே வழக்குத் தாக்கல் செய்யப்படும் போது தண்டப்பணம் அதிகம் கிடைக்கும். சகலருக்கும் சேர்த்து ஒரேயொரு வழக்காகப் போடும் பொழுது ஒரு கிராமத்து மக்களுக்கு எதிரானதாகத் தெரியும். அது அரசுக்குச் சங்கடத்தை ஏற்படுத்தும். தனித்தனியே வழக்குத் தாக்கல் செய்யும்போது குழுக்கள் சேர வாய்ப்பில்லை.

காணிகளை வனவளத் திணைக்களம் கையகப்படுத்த விடாமல் தடுக்கும் முயற்சியில் முன்னின்று உழைப்பவர்களுக்கு மட்டுமே வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். (த-213)



## வாகன விபத்தில் உந்துருளியில் பயணித்தவர் காயம்

வவுனியா,செப்.10

உந்துருளியும்,முச்சக்கர வண்டியும் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகின. அதில் ஒருவர் படுகாயமடைந்தார். இந்த விபத்து வவுனியா வைரவபுளியங்குளத்தில் நேற்று நடந்தது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியாநகரில் இருந்து திருநாவற்குளம் நோக்கிச் சென்ற உந்துருளி தொடருந்து நிலைய வீதியில் சென்று கொண்டிருந்தபோது, அருகிலிருந்து வீதிக்கு ஏற முற்பட்ட முச்சக்கரவண்டியுடன் மோதி விபத்துக்குள்ளானது.

விபத்தில் உந்துருளியில் பயணித்த நபர் படுகாயமடைந்தார். அவர் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பாக வவுனியா போக்குவரத்துப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (க-110)



## எறியால்பிட்டி மயான வீதிக்கு 8 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

கொடிகாமம்,செப்.10

அல்லாரை எறியால் பிட்டி இந்து மயான வீதிச் சீரமைப்புப் பணிகள், சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் திருமதி பொ.மகேந்திரராணி தலைமையில் கடந்த வாரம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வீதி அபிவிருத்தி வேலைகளை சாவகச்சேரி பிரதேச சபையின் உபதவிசாளர் செ.மயூரன் ஆரம்பித்து வைத்தார்.

சாவகச்சேரி பிரதேச சபையின் உறுப்பினர்களான திருமதி பொ.மகேந்திரராணி, க.தம்பு ஆகியோரின் முயற்சியில், பிரதேச சபையின் வரவு-செலவுத்திட்ட நிதியிலிருந்து, 8லட்சம்ரூபா செலவில் இந்த வீதி சீரமைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-159)

# விக்கிக்குத் தண்டனைத் தீர்ப்பு எனின் அவருடைய அரசியல் முடிந்துவிடும்

*முன்னாள் அமைச்சர் டெனீஸ்வரன் கூறுகிறார்*

வவுனியா, செப். 10

நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் முன்னாள் முதலமைச்சர் தண்டனை பெறுவாராகவிருந்தால் அது அவரின் அரசியலுக்கு முற்றுப் புள்ளியாக அமையும் என்று வடக்கு மாகாண முன்னாள் அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

முன்னாள் முதலமைச்சரின் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவரின் கேள்விக்குப் பதிலளிக்கும் போது, அவர் மேலும் தெரிவித்ததாவது:

என்னை அமைச்சரவையிலிருந்து நீக்கியமைக்கு எதிராக இடைக்கால தடை உத்தரவும் வழங்கப்பட்டு, இறுதியான தீர்ப்பும் வழங்கப்பட்டுள்ளது. எனக்குச் சார்பாக வழங்கப்பட்டிருக்கின்ற அந்தத் தீர்ப்பு முதலமைச்சருக்குச் சார்பாக வந்திருந்தாலும்கூட நீதிமன்ற அவமதிப்பு வழக்கு என்பது முதலமைச்சருக்குக் காலைச் சுற்றிய பாம்பாகத்தான் இருக்கப் போகின்றது.

அந்தத் தீர்ப்பைக் கனம்பண்ணாது விட்டமையால் ஒரு இறுதித் தீர்ப்பை அவர் பெற வேண்டிய நிலை இருக்கின்றது. அந்த நீதிமன்ற அவமதிப்பு வழக்கிலிருந்து தப்பிக்க முடியாது. எவ்வாறு தற்போது எனக்குச் சார்பாக நீதிப்படி ஒரு தீர்ப்பு வழங்கப்பட்டதோ, அதேபோல் நீதிமன்ற அவமதிப்பு நடைபெற்றது என்பதையும் என்னால் ஆணித்தரமாக நிரூபிக்கமுடியும். முதலமைச்சர் வயதுபோன நேரத்தில் சிறைவாசம் செல்ல வேண்டும். அல்லது அவரைத் தண்டிக்க வேண்டும் அல்லது அவரின் அரசியல் பயணத்தை நிறுத்த வேண்டும் என்பது எனது நோக்கமல்ல. நீதிமன்றத் தீர்ப்பில் ஒருநாள் கூட அவர் தண்டனை பெறுவாராக இருந்தால் அவரது அரசியலுக்கு அது முற்றுப்புள்ளியாக அமையும்.

இவற்றையெல்லாம் யோசித்துத்தான் ஒரு தூரநோக்கோடு நான் இறங்கி, விட்டுக்கொடுத்துச் சென்றேன்.

அந்த நேரத்தில்கூட தான் நினைத்ததைச் செய்வேன் என்ற அவரது கர்வம் மேலோங்கியிருந்தமையால் நான் இறங்கிச் சென்றதைக்கூட உதாசீனம் செய்திருந்தார்.

ஆகவே இதற்கு மேல் இறங்கிச் செல்ல தயாரில்லை. அவருக்கு நீதிமன்றம் உரிய தீர்ப்பை வழங்கும்- என்றார். (த-ரி4)

## முதியோர் விழிப்புணர்வு செயற்பாடு வவுனியாவில்

வவுனியா, செப். 10

பன்னாட்டு முதியோர் தினம் ஒக்ரோபர் முதலாம் திகதி உலகம் முழுவதும் கொண்டாடப்படவுள்ளது.

இதனை முன்னிட்டு வவுனியா பாடசாலை மாணவர்களுக்கு முதியோர் தொடர்பான விழிப்புணர்வுச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சிதம்பரபுரம் ஸ்ரீ நாகராஜா வித்தியாலயத்தில் நேற்று விழிப்புணர்வுச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.(ம-110)




# கைத்தொழில் நிலையம் நாச்சிக்குடாவில் திறப்பு

கிளிநொச்சி.செப்.10

'உதவும் கரங்கள்' சிறு கைத்தொழில் நிலையம் கிளிநொச்சி ஜேம்ஸ்புரம், நாச்சிக்குடா தூய ஆவியார் ஆலய வளாகத்தில் கடந்த சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது. கிராம மட்டப் பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன், நோர்வே, இலண்டன் உதவும் கரங்கள் அமைப்பால் இந்த நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

அமைப்பின் உறுப்பினர்களான எட்வேட்பாலு, கோபிநாத், அலோசியஸ் ஆகியோரின் நினைவாக இந்த நிலையம் அமைக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உதவும் கரங்கள் அமைப்பின் பிரதிநிதிகள், குமுழமுனைப் பங்குத்தந்தை, நாச்சிக்குடா கிராம அலுவலர், கிராம மக்கள் திறப்புவிழாவில் கலந்துகொண்டனர். (க-222)

சிவில் பாதுகாப்புப் படைவசமுள்ள

# பண்ணைக் காணிக்காக இருதரப்பினர் போராட்டம்

வவுனியா, செப். 10

வவுனியா, போஹஸ்வாவே பகுதியில் சிவில் பாதுகாப்புப் படையினர் பயிர்ச்செய்கை மேற்கொள்ளும் விவசாயப் பண்ணைக் காணியை வழங்குமாறுகோரி, குடியேற்றப்பட்ட சிங்கள மக்கள் கடந்த வாரம் போராட்டம் செய்த நிலையில், அந்தக் காணியைத் தமக்கு வழங்குமாறு அந்தப் பகுதியில் பல வருடங்களாக வசிக்கும் சிங்கள மக்களும் நேற்றுமுன்தினம் போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டத்தில் பொலிஸார் பாதுகாப்பில் ஈடுபட்டிருந்தனர். போராட்டத்தின் பின்னர் அரசதலைவருக் கென்று மனு ஒன்றை அந்தப் பகுதி கமக்கார அமைப்புக்களிடம் வழங்கினர். (த-110)



## சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் அதிபர் விடுதி திறந்து வைப்பு

சாவகச்சேரி,செப்.10

அண்மையில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை" என்னும் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் அமைக்கப்பட்ட அதிபர் விடுதி நேற்று திறந்து வைக்கப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் விடுதியைத் திறந்து வைத்தார்.



கல்லூரி அதிபர் திருமதி ல.முகுந்தன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி) திருமதி சி.சிவநாதன், பாடசாலை அபிவிருத்திக் குழுவினர், கல்லூரியின் ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்துகொண்டனர்.

5 மில்லியன் ரூபா நிதியில் இந்த விடுதி அமைக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு-9)



## சமாதான நீதிவான் சங்கத்துக்கு புதிய நிர்வாகிகள் தெரிவு

வட இலங்கை சமாதான நீதிவான் சங்கத்தின் பொதுக்கூட்டம், மன்னார் உப்புக்குளம் வடக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் மன்னார் மாவட்டத்துக்கான சமாதான நீதிவான் சங்கத்துக்கான நிர்வாகிகள் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவராக எம்.சீ.எம்.றம்சீன், உபதலைவராகஐ.ஜேம்ஸ் பெஹழ், செயலாளராக எஸ்.பீ.லம்பேட், உதவிச்செயலாளராக ஏ.ஆர்.எம்.கன்சூர், பொருளாளராக ஏ.பத்திநாதன் ஆகியோருடன் பத்து, நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

கூட்டத்தில் முதன்மை விருந்தினராக வட இலங்கை சமாதான நீதிவான்கள் சங்கத் தலைவர் கலாநிதி கா.பீ. ஜெயவிந்தன், சிறப்பு விருந்தினராக சங்கச் செயலாளர் இரா.ஜெயக்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர். (சு-9)

## பற்சிகிச்சைக்கூடம் இன்று திறப்பு

யாழ்ப்பாணம், செப். 10

யாழ்ப்பாணம், புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரியில் கல்வி அமைச்சால் 'அண்மையிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை' செயற்றிட்டத்தின் கீழ் புதிதாக அமைக்கப்பட்ட பற்சிகிச்சைக் கூடம் திறப்பு நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணிக்கு பாடசாலை அதிபர் செல்லையா இளங்கோ தலைமையில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் கலந்துகொள்வார். (ம)

# பொக்கணை மாதிரிக் கிராமத்தை அமைச்சர் சஜித் திறந்துவைத்தார்

### கூட்டமைப்பு எம்.பிக்களும் பங்கேற்றனர்

யாழ்ப்பாணம், செப். 10

**வ**லி.கிழக்குப் பகுதிக்குட்பட்ட ஊரெழுவில் தேசிய வீடமைப்பு அதிகார சபை அமைத்த பொக்கணை மாதிரிக் கிராமத்தை வீடமைப்பு அமைச்சர் சஜித் பிரேமதாச நேற்றுத் திறந்துவைத்தார்.



தேசிய வீடமைப்பு அதிகார சபையின் நிதியுதவியில் 19 வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன.

நிகழ்வில் கல்வி இராஜாங்க அமைச்சர்விஜயகலாமகேஸ்வரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சோ. சேனாதிராசா, ஈ. சரவணபவன், த. சித்தார்த்தன், எம்.ஏ. சுமந்திரன் மற்றும் யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா. வேதநாயகன், வலி.கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஸ், கோப்பாய் பிரதேச செயலர், தேசிய வீடமைப்பு அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர் ரவீந்திரன், தலைமைத் தொழில்நுட்ப அலுவலர் ஜெயச்சந்திரன், தொழில்நுட்ப அலுவலர்கள், அந்தப் பகுதி கிராம அலுவலர், கிராம மக்கள், பயனாளிகள் பலரும் கலந்து கொண்டனர்.


காலை 8.30 மணிக்கு குறித்த கிராமத்துக்கு வந்த அமைச்சர் சஜித் பிரேமதாச அங்கு அமைக்கப்பட்ட கல்வெட்டைத் திரைநீக்கம் செய்தார். தொடர்ந்து பயனாளிகளின் வீடுகளுக்குச் சென்று அவற்றைத் திறந்து வைத்தார். மரக்கன்று ஒன்றையும் நட்டார். உதவிப் பொருள்கள், மற்றும் கண்ணாடிகளும் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு வழங்கிவைக்கப்பட்டன. வீட்டுத் திட்டப் பயனாளிகளுக்கான பத்திரத்தையும் கையளித்தார்.

**பண்பாடு தெரிந்த அமைச்சர்**

பயனாளிகளுக்கு வீடுகளைக் கையளிக்கும் போது அமைச்சர் தானே ஒவ்வொரு வீடுகளுக்கும் சென்று அந்த வீட்டின் நிலைமைகளைப் பார்த்து அவற்றைத் தனது கைகளால் திறந்துவைத்தார். வீட்டின் உள்ளே செல்லும் போது செருப்புடன் சென்ற அமைச்சர், சுவாமி அறைக்குள் போகும் போது, தனது செருப்பை வாசலில் கழற்றிவிட்டு உட்சென்றார். சுவாமிப் படங்களை வணங்கினார். பின்னர் கடவுளர்கள் யார் என்பது தொடர்பிலும் வினவினார். வீடுகள் கட்டப்பட்டது மகிழ்ச்சியா என்று பயனாளிகளின் தோளில் தட்டிக் கேட்டு மகிழ்ந்தார்.

**விளையாடி மகிழ்ந்த சஜித்**

அதன் பின்னர் மேடைநிகழ்வுகளில் பங்குகொண்டார். அந்த நிகழ்வுகள் நிறைவடைந்த பின்னர் மேடைக்கு அருகே துடுப்பாட்டத்தில் ஈடுபட்ட முத்தமிழ் விளையாட்டுக் கழக வீரர்களை அழைத்து உதைபந்து ஒன்றை அன்பளிப்பாக வழங்கினார்.



அங்கு அமைச்சர் உரையாற்றும் போது.

முத்தமிழ் விளையாட்டுக் கழக வீரர்கள், விளையாடுவதை நிறுத்திவிட்டு புறப்பட ஆரம்பித்தனர். எனினும் அவர்களை மறித்து, விளையாடுமாறும், தான் சிறிது நேரத்தில் வருவேன் என்றும் அறிவித்தார். அதன்படி அவர்களுடன் மைதானத்துக்குள் இறங்கிய அமைச்சர் உதைந்தாட்டத்தில் ஈடுபட்டார். சிறிது நேரத்தில், அதை நிறுத்திவிட்டு, துடுப்பாட்டத்தில் ஈடுபடப் போவதாகத் தெரிவித்த அமைச்சர் துடுப்பாட்டத்திலும் ஈடுபட்டார். அமைச்சருடைய துடுப்பாட்டத் திறமையை அங்கிருந்தவர்கள் ரசித்தனர். கடும் வெயில் உச்சியைப் பிளக்கும்போதும், அமைச்சர் சாதாரண மனிதராக விளையாடினார்.

**செல்பிக்கு கட்டுப்பட்ட அமைச்சர்**

விளையாட்டை நிறைவு செய்து கொண்டு மற்றொரு நிகழ்வுக்காகப் புறப்பட்ட அமைச்சரை தேசிய வீடமைப்பு அதிகார சபையின் தொழில்நுட்ப உதவியாளர்கள் வழிமறித்தனர். அவருடன் தம்படம் (செல்பி) எடுக்கமுயன்றனர். அமைச்சர் அதற்கு ஒத்துழைப்பு வழங்கினார். அனைத்து பணியாளர்களும் தங்களிடமிருந்த அலைபேசியில் அமைச்சருக்கு அருகில் நின்று தம்படம் எடுத்துக்கொண்டனர். அமைச்சரும் நகைச்சுவைகள் கூறியவாறு தம்படம் எடுத்தார். (து-21)

# மேலதிக கொடுப்பனவுகளை பணியாளருக்கு வழங்கலாம்

### கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் தெரிவிப்பு

கூட்டுறவுப் பணியாளர்களுக்கு மேலதிகமான ஊக்குவிப்பு கொடுப்பனவுகளை சங்கங்கள் வழங்க முடியும். கூட்டுறவு ஊழியர் ஆணைக் குழுவின் அனுமதியைப் பெற்று இந்த ஊக்குவிப்பு கொடுப்பனவுகளை சங்கப் பணியாளர்களுக்கு வழங்குவதை நடைமுறைப்படுத்த முடியும் என்று வடக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் தெரிவித்தது.

கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சுற்றறிக்கையில்கூட இது தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. சங்கக்கிளைநிலையங்களில்மாதாந்தம் அதிக வியாபாரம் மேற்கொள்வோருக்கும் ஏனைய பணித்தொகுதிக்கும்கூட மாதாந்தம் ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளை சங்கங்கள் தாராளமாக வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

கூட்டுறவுப் பணியாளர்களின் கொடுப்பனவு விடயங்களில் கூட்டுறவுச் சங்கங்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும். பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய நிலுவையில் உள்ள கொடுப்பனவுகளும் விரைவாக வழங்கப்பட வேண்டும். கூட்டுறவு அமைப்புக்கள் சில பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய நிலுவையில் உள்ள கொடுப்பனவுகளை வழங்காமல் இருப்பது குறித்துத்திணைக்களம் ஆராய்ந்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த-17)

## நாயுடன் மோதியது உந்துருளி: இளைஞன் படுகாயம்

அளவெட்டி,செப்.10
குறுக்கே சென்ற நாயுடன், உந்துருளி மோதி விபத்துக்குள்ளாகியது. அதில் உந்துருளியில் பயணித்த இளைஞன் படுகாயமடைந்தார்.
இந்த விபத்து தையிட்டி பிள்ளையார் கோவிலடியில் நேற்றுமுன்தினம் இரவு 8.45 மணியளவில் நடந்துள்ளது.
விபத்தில் படுகாயமடைந்தவர் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (க-36)

# மாற்றுத் திறனாளிகளுக்கு சேகரிக்கப்பட்ட பணத்தையும் விட்டுவைக்காத ஆசாமிகள்

*கரவெட்டிப் பிரதேச செயலகத்தில் சம்பவம்*

*யாழ்ப்பாணம், செப். 10*

மாற்றுத் திறனாளிகளுக்காக உண்டியலில் சேகரிக்கப்பட்ட பணம் காணாமல் போயுள்ளது. இந்தச் சம்பவம் கரவெட்டி பிரதேச செயலகத்தில் கடந்த வாரம் இடம்பெற்றுள்ளது.

கரவெட்டி பிரதேச செயலகத்தின் வரவேற்புப் பகுதியில், மாற்றுத் திறனாளிகளுக்கு உதவுவதற்காக பணம் சேகரிக்கும் உண்டியல் வைக்கப்பட்டிருந்தது. இதில் பிரதேச செயலகத்துக்கு வருகை தரும் பொதுமக்கள் உள்ளிட்ட பலரும் தம்மால் இயன்ற சிறிய தொகை நிதியையாவது அதில் போட்டு வந்தனர்.
இந்த நிலையில் கடந்த வாரம், உண்டியலிருந்த நிதி திடீரென காணாமற் போயுள்ளது.
பிரதேச செயலகத்தில் மறைகாணிகளும் (சிசிரிவி) இல்லாமையால், யார் அந்த நிதியை எடுத்தார்கள் என்பது இதுவரை கண்டறியப்படவில்லை.
மாற்றுத்திறனாளிகளுக்கு சேகரிக்கும் பணத்தையும் திருடும் ஈனச் செயல் தொடர்பில் பொதுமக்கள் விமர்சனம் வெளியிட்டுள்ளார்கள். (ஒ.5)



## “கிராமஎழுச்சி” செயற்றிட்டத்தில் மாணவர்களுக்கு நூலகம்

வவுனியா,செப்.10
இளைஞர் சேவைகள் மன்றத்தின் “கிராம எழுச்சி” செயற்றிட்டத்தில் வவுனியா நெடுங்கேணி துவரங்குளத்தில் மாணவர்களுக்கான நூலகம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது.
துவரங்குளம் லக்கி ஸ்டார் இளைஞர் கழகத்தால் இந்த நூலகம் அமைக்கப்பட்டுள்ளது.
வவுனியா நகர சபையின் உறுப்பினரும், தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மாவட்ட முன்னாள் தலைவருமான சுந்தரலிங்கம் காண்டீபன் நூலகத்தைத் திறந்து வைத்தார்.
நிகழ்வில் உரையாற்றிய நகரசபை உறுப்பினர் சு.காண்டீபன் தெரிவித்ததாவது:
“வவுனியா வடக்கு வலயத்தின் மிகவும் பின்தங்கிய பகுதிகளான பட்டிகுடியிருப்பு, மற்றும் துவரங்குளத்தில், இந்த நூல் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. நூலகத்தை அமைத்த இளைஞர்களின் முயற்சி பாராட்டதக்கது. நூல் நிலையத்துக்கு தினசரி பத்திரிகைகளைப் போடுவதற்கான முயற்சிகளை வவுனியா வடக்கு பிரதேச சபையுடன் இணைந்து முன்னெடுப்ப தற்கு முயற்சிக்க வேண்டும் - என்றார்.
கழகத்தின் தலைவர் சி.யசோதரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், வவுனியா பட்டிக்குடியிருப்பு அ.த.க. பாடசாலையின் அதிபர் கே.பாஸ்கரன், மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி ஐ.சுஹானி, நிஸ்கோ பணிப்பாளர் தே.அமுதராஜ், இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீகரன் கேசவன், வவுனியா வடக்குப் பிரதேச இளைஞர் சேவை அதிகாரி இல்காம், வவுனியா மாவட்ட சம்மேளன உபதலைவர் குணவர்மன், பட்டிக்குடியிருப்பு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் அ.மகாலிங்கம், துவரங்குளம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் செ.கோபாலசிங்கம், கிராம சமுர்த்தி சங்கத் தலைவர் ம.அருந்தவராசா, லக்கி ஸ்டார் இளைஞர் கழக செயலர் சி.வினோதினி, பொருளாளர் அ.கஜந்தன் மற்றும் இளைஞர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (க- 222,110)

# 200 மில்லியன் ரூபா பெறுமதியான வேலைகள் செயற்படுத்தப்படுகின்றன

*அமைச்சின் செயலர் சிவஞானசோதி தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், செப். 10
வடக்கு மாகாண அபிவிருத்திக்கான நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 200 மில்லியன் ரூபா பெறுமதியான வேலைத்திட்டங்கள் அனுமதிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரங்கள், மீள்குடியேற்றம், மறுவாழ்வு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளையோர் விவகாரங்கள் அமைச்சர் என்ற வகையில் ரணில் விக்கிரமசிங்க இதைச் செயற்படுத்துகிறார் என்று அவருடைய அமைச்சின் செயலர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.
யாழ்ப்பாண மாவட்டத்தில் குருநகர் கடற்றொழில் சங்கத்தால் முன்வைக்கப்பட்டவேலைத்திட்டங்களில் எரிபொருள் நிலையம், மீன்பிடி உபகரணங்களுக்கு 30.3 மில்லியன் ரூபா, காரைநகர் மீன் உற்பத்திகளைப் பதப்படுத்தல் மற்றும் பெறுமதிசேர்ப்பு ஆகியவற்றுக்கு 5.2 மில்லியன் ரூபாவும், அச்சுவேலியில் போத்தலில் கள் மற்றும் பதநீர் அடைக்கும் இயந்திர உபகரணங்களுக்கு 1.3 மில்லியன் ரூபாவும் பால் சார்ந்த உற்பத்திகளைப் பதப்படுத்தல் பெறுமதி சேர்க்கை போன்றவற்றுக்கு லிப்கோ கூட்டுறவுச் சங்க வேலைத்திட்டங்களுக்கு 6.4 மில்லியன் ரூபாவும் மரவேலை தொடர்பான இயந்திர வசதிகளுக்கு நீர்வேலி காமாட்சி அம்பாள் கூட்டுறவுச் சங்கத்துக்கு 3.5 மில்லியன் ரூபாவும் நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய் செய்வதற்கான இயந்திர உபகரணங்களுக்கு 7.7 மில்லியன் ரூபாவும் ஊர்காவற்றுறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க மீன்பிடி பெறுமதி சேர்க்கை விநியோக வசதிகளுக்கு 13.9 மில்லியன் ரூபாவும் சாவகச்சேரி கருப்பட்டி உற்பத்திகளுக்கான நவீன தொழில்நுட்ப வசதிகளுக்கு பனை அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்துக்கு 10 மில்லியன் ரூபாவும், பதநீர் மற்றும் கள் போத்தலில் அடைப்பதற்கான நவீன இயந்திர உபகரணங்களுக்கு 8 மில்லியன் ரூபாவும், ஊர்காவற்றுறையில் பதநீர் மற்றும் கள் போத்தலில் அடைப்பதற்கான நவீன இயந்திர உபகரணங்களுக்கு 8 மில்லியன் ரூபாவும் சண்டிலிப்பாய் பதநீர் மற்றும் கள், நீர்வேலி வாழைநார் அடிப்படையிலான உற்பத்திகள் உள்ளடங்கலாக 102.89 மில்லியன் ரூபா பெறுமதியான கருத்திட்டங்கள் இந்த வாரத்தில் நடைமுறைப்படுத்தப்படுகின்றன என்று அமைச்சின் செயலர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.
கிளிநொச்சி மாவட்டத்தில் அக்கராயன் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க வெதுப்பக அபிவிருத்திக்கு 2.7 மில்லியன் ரூபாவும் பளை பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்துக்கு தேங்காய் எண்ணெய் செய்வதற்கான இயந்திர உபகரணங்களுக்கு 1.9மில்லியன் ரூபாவும் பூநகரி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க மீன் பதப்படுத்தும் இயந்திர உபகரணங்களுக்கு 2.1 மில்லியன் ரூபாவும் திருவையாறு கமத்தொழில் கூட்டுறவுச் சங்க பங்காண்மையுடன் இணைந்த பழச்சாறு, ஜாம் உற்பத்திகளுக்காக 6.78 மில்லியன் ரூபாவும் பளை, கௌதாரிமுனை, முக்கொம்பன், பெண்கள் அமைப்பு செயற்படுத்தும் திட்டத்துக்கு ஒரு மில்லியன் ரூபாவுமாக 17.33 மில்லியன் ரூபா பெறுமதியான கருத்திட்டங்கள் இந்த வாரத்தில் செயற்படுத்தப்படுகின்றன.
வவுனியா மாவட்டத்தில் நெடுங்கேணி பனை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் செயற்படுத்தும் பழச்சாறு உற்பத்தி செய்யும் உபகரணங்களுக்கு 7.3 மில்லியன் ரூபா ஒதுக்கீடுசெய்யப்பட்டு இந்த வாரத்தில் பணிகள் இடம்பெறுகின்றன.
முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்று பனைஅபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தால் செயற்படுத்தப்படும் பதநீர் மற்றும் கள் போத்தலில் அடைக்கும் உபகரணங்களுக்கு 8 மில்லியன் ரூபாவும் புதுக்குடியிருப்பு பதநீர் மற்றும் கள் போத்தலில் அடைக்கும் உபகரணங்களுக்கு 8மில்லியன் ரூபாவும், கரைதுறைப்பற்று பழச்சாறு அடைக்கும் உபகரணங்களுக்கு 2.5 மில்லியன் ரூபா உள்ளடங்கலாக புளியமுனைக் கடலை பதப்படுத்தும் உபகரணங்களுக்கு 1.5 மில்லியன் ரூபாவும், முல்லைத்தீவு மேற்கு பனைஅபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் செயற்படுத்தும் பனம் பழச்சாறு பதப்படுத்துவதற்கான உபகரணங்களுக்கு 12 மில்லியன் ரூபாவும் அபிச்சியன் குளம் கால்நடை உற்பத்தி பதப்படுத்தலுக்காக 2.2 மில்லியன் ரூபாவும் 33.05 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.
மன்னார் மாவட்டத்தில், மன்னார் கிழக்கு மற்றும் தலைமன்னாரில் பழச்சாறு பிரித்தெடுக்கும் உபகரணம் மற்றும் பனங்களி பிரத்தெடுக்கும் உபகரணங்களுக்காக 16.69 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த முதலீட்டு உதவி நிகழ்ச்சித்திட்டங்கள் உற்பத்திகளை உயர்த்தி, போரால் பாதிக்கப்பட்ட வடக்கு மாகாண மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு அடித்தளமாக அமையும். என்று அமைச்சின் செயலர் வே.சிவஞானசோதி தெரிவித்தார். (து)

## முல்லையில் சில இடங்களில் இன்று மழைபெய்ய வாய்ப்பு!

யாழ்ப்பாணம், செப். 10
முல்லைத்தீவு மாவட்டத்தில் இன்று பிற்பகல் 2 மணிக்குப் பின்னர் சில இடங்களில் மழை பெய்வதற்கு வாய்ப்புள்ளது என்று இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.
இது தொடர்பில் அந்தத் திணைக்களம் நேற்று விடுத்த அறிவிப்பில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:
மேல், சப்ரகமுவ, மத்திய, தென் மற்றும் வடமேல் மாகாணங்களில் பல தடவைகள் சிறிதளவில் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.
ஊவா மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் முல்லைத் தீவு மாவட்டத்திலும் சில இடங்களில் பிற்பகல் 2 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன்கூடியமழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.
வடக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களிலும் திருகோணமலை மாவட்டத்திலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40 தொடக்கம் 50 கிலோ மீற்றர் வரை அதிகரிப்பு ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும்.
இடியுடன் கூடிய மழை பெய்யும் நேரங்களில் கடற்பகுதிகளில் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 70 தொடக்கம் 80 கிலோ மீற்றர் வரை அதிகரித்த வேகத்தில் பலமான காற்று வீசுவதுடன் அக்கடற்பிரதேசங்கள் மிகவும் கொந்தளிப்பாகவும் காணப்படும்- என்றுள்ளது. (ம)

# பயிற்சிபெற்ற ஆசிரியர்கள் மட்டுமே பாடசாலைகளில் இருக்க வேண்டும்!

## ரணில் இடித்துரைப்பு

கொழும்பு, செப். 10

பாடசாலைகளில் எதிர்காலத்தில் பயிற்சிபெற்ற ஆசிரியர்கள் மட்டுமே இருக்கவேண்டும். இவ்வாறு தெரிவித்தார் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க.


நாடு முழுவதும் நேற்று 500 பாடசாலைக் கட்டடங்கள் திறந்து வைக்கப்பட்டன. கஹதுடுவவில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே ரணில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது நடைமுறைப்படுத்தப்படும் கல்விசார் வேலைத்திட்டங்களை இன்னும் 10 வருடங்களுக்கு முன்னெடுத்துச் செல்ல முடியுமாயின் நாட்டில் சிறந்த கல்வி முறைமை உருவாகும். இந்த சவாலை பொறுப்பேற்று கல்வி அபிவிருத்தியின் வளர்ச்சிக்காக கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் முன்னெடுக்கும் அர்ப்பணிப்பையும் முயற்சியையும் பாராட்டுகின்றேன். அத்துடன் பாடசாலை கட்டமைப்பை பௌதிக வளங்களினால் முழுமைப்படுத்தி மனித வளங்களுடன் அபிவிருத்தி செய்வதற்கு அதிகளவில் கவனம் செலுத்தியது தற்போதைய அரசே.

எதிர்காலத்தில் பாடசாலைகளில் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் மாத்திரமே இருக்க வேண்டும். வாகனத்தைச் செலுத்துவதற்கு சாரதி அனுமதிப்பத்திரம் இருக்க வேண்டியது கட்டாயமாகும். அதேபோன்று வகுப்பறையை பொறுப்பேற்கும் ஆசிரியர்கள் பயிற்சியுடன் கூடிய ஆசிரியராக இருக்க வேண்டியது கட்டாயமாகும். 20ஆம் நூற்றாண்டுக்கு உட்பட்ட கல்வி 21ஆம் நூற்றாண்டில் வாழும் மாணவர்களுக்கு பொருந்தாது.

எனவே எதிர்கால தொழில் உலகுக்கு ஏற்ற வகையில் கல்வியை நவீனமயப்படுத்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளது - என்றார். (ம)



# ஆங்கில மொழி நாடகத்தில் அல் இக்பால் ம.வி முதலிடம்

வவுனியா, செப். 10

வடக்கு மாகாணத்துக்கு உட்பட்ட தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற ஆங்கில மொழி நாடகப் போட்டியில் வவுனியா அல் இக்பால் மகா வித்தியாலயம் முதலிடம் பெற்றது.

குறித்த பாடசாலையில் நேற்று நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான வெற்றிக் கேடயம் மற்றும் சான்றிதழ் வழங்கப்பட்டன. பாடசாலையின் அதிபர் ஏ.கே. உபைத் அவற்றை வழங்கினார்.

கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் ஜோன்கீல்ஸ் நிறுவனம் மாணவர்களின் ஆங்கில மொழியறிவை விருத்தி செய்யும் நோக்கில் வடக்கு மாகாணத்துக்கு உட்பட்ட தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் இதை நடத்தியது.

வவுனியா அல் இக்பால் மகா வித்தியாலயம் முதலிடம் பெற்றதுடன், நடைபெற்ற நாடகங்களில் சிறந்த நடிகராகவும் அல் இக்பால் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த ரி.எம். சபீக் தெரிவு செய்யப்பட்டு, வெற்றிக் கேடயத்தைப் பெற்றுக் கொண்டார். நிகழ்வில் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர். (த-ரி4)



# பொருள்கள் வழங்கிவைப்பு

வவுனியா, செப். 10

சுந்தரபுரத்தில் வசிக்கும் இரு பிள்ளைகளின் தந்தையான முதியவர் ஒருவர் காசநோயால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் நிலையில் அவரின் குடும்பத்தினருக்கு ஒரு தொகுதி உதவிப்பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டன.

சிங்கப்பூர் வாழும் தங்கமலர் ஜெயராஜ் என்பவரின் நிதியுதவியில் மேற்படி பொருள்கள் கையளிக்கப்பட்டன. (ம-110)

# 500 பாடசாலைக் கட்டடங்கள் திறந்தமை கல்வித் துறையில் புதிய அத்தியாயமே

## கல்வி அமைச்சர் அகிலவிராஜ் தெரிவிப்பு

கொழும்பு, செப். 10

ஒரே நாளில் நாடு முழுவதும் 500 பாடசாலைக் கட்டங்கள் திறக்கப்பட்டமை கல்வித்துறையில் ஏற்படுத்தப்பட்ட புதிய அத்தியாயமே இவ்வாறு தெரிவித்தார் கல்வி அமைச்சர் சட்டத்தரணி அகில விராஜ் காரியவசம். நாடு முழுவதும் நேற்று 500 பாடசாலைக் கட்டடங்கள் திறந்து வைக்கப்பட்டன. கஹதுடுவவில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில்கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அகிலவிராஜ் இவ்வாறு தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த ஆட்சிக் காலத்தில் பல்வேறு வேலைத்திட்டங்களுக்காக அடிக்கல் நடப்பட்ட போதும் அதற்கான நிர்மாணப்பணி களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. கல்விக்காக வரலாற்றில் இதுவரையான காலப்பகுதியில் அதிகளவிலான நிதி முதலீடு செய்து பெரியளவிலான அபிவிருத்தி திட்டங்களை நாட்டின் பாடசாலை கட்டமைப்புக்கு அர்ப்பணிப்புச் செய்வதற்கு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க வழங்கிய ஆதரவும் வழிகாட்டலுமே முக்கிய காரணம். கல்வித் துறையின் புரட்சிகரமான செயற்பாடுகளில் புதிய அத்தியாயத்தினை ஏற்படுத்தும் வகையில் அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை வேலைத்திட்டத்தின் கீழ் மூன்றாம் கட்டமாக 500 புதிய பாடசாலை கட்டடங்கள் இன்று மாணவர்களிடம் கையளிக்கப்படுகின்றன. 10 ஆயிரம் மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது - என்றார். (ம)

# தேசிய விவாதப் போட்டியில் சென்.ஜோன்ஸ் கல்லூரி வெற்றி

யாழ்ப்பாணம்,செப்.10

அகில இலங்கைத் தமிழ்த்தின விவாதப் போட்டியில் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி முதலிடம் பெற்றுள்ளது.

இசுருபாயவில் உள்ள கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் போட்டி இடம்பெற்றது.

கல்லூரியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அணியில் மாணவர்களான வேல்நம்பி சதுசிகன், டிலோன்ரத்னா, டேவிற் லிவிங்ஸ்ரன், ரமேஸ், ஆதித்தன் ஆகியோர் பங்கேற்றனர்.

விவாதப் போட்டிக்கான பொறுப்பாசிரியராக ஆசிரியர் சிங்கராஜா செந்தூரன் செயற்பட்டிருந்தார்.

9 மாகாணங்களுக்கு இடையில் நடத்தப்பட்ட போட்டியில் வடக்கு மாகாணத்திலிருந்து பங்குபற்றிய சென். ஜோன்ஸ் கல்லூரி இறுதிப் போட்டியில் பங்குபற்றி முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை- இசை மற்றும் நடனம் சார்ந்த போட்டிகள் எதிர்வரும் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறும் ஏனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் புதிய கட்டடங்கள் நேற்றுத் திறப்பு

முல்லைத்தீவு,செப்.10

கல்வி அமைச்சால் "அருகில் உள்ள பாடசாலை" சிறந்த பாடசாலை எனும் திட்டத்தில் முல்லைத்தீவு ,புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் அமைக்கப்பட்ட வகுப்பறைகள், ஆசிரியர் விடுதி, அதிபர் விடுதி, சிற்றுண்டிச் சாலை என்பன நேற்றுத் திறந்து வைக்கப்பட்டன.

விருந்தினர்கள், பாடசாலை வாசலில் இருந்து பாடசாலை மாணவர்களின் இன்னிய இசை அணிவகுப்புடன் வளாகத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராசா மற்றும் ஏனைய



விருந்தினர்கள் இணைந்து கட்டடங்களைத் திறந்து வைத்தனர்.

பாடசாலை முதல்வர் நேவிற்ஜீவராசா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முல்லைத்தீவு வலயக் கல்விப்பணிப்பாளர் உமாநிதி புவனராஜா, வடமாகாண செயற்றிட்ட பொறியியலாளர் ஜே.வாசுதேவன், கட்டடங்கள் திணைக்கள நிறைவேற்றுப் பொறியியலாளர் மு.விவேகானந்தம், புதுக்குடி யிருப்புப் பிரதேச சபை உப தவிசாளர் க. ஜெனமே ஜெயந், பிரதேச சபை உறுப்பினர் சி.குகநேசன், பாடசாலை அபிவிருத்தி சங்க அங்கத்தவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.

மூன்று கோடி 55 இலட்சம் ரூபா நிதியில் இந்தக் கட்டடங்கள் அமைக்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-ரி3)

## ஜே.வி.பியினதும் கூட்டமைப்பினதும் கொள்கைகள் ஒன்றே

*ரத்நாயக்க கருத்து*

கொழும்பு, செப். 10

ஒரே கொள்கைகளையுடைய மக்கள் விடுதலை முன்னணியும் தமிழ் தேசியக் கூட்டமைப்பும் இணைந்து செயற்படுவதற்கு சிறந்த வாய்ப்பு ஏற்பட்டுள்ளதென நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

கூட்டமைப்பின்பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் இந்திய ஊடகமொன்றுக்கு வழங்கியிருந்த நேர்காணலில், கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாத அரசியல் நாடகத்துக்குப் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் மக்கள் விடுதலை முன்னணியும் அரசியல் பக்கத்தில் ஒன்றாக நிற்கும் இருகட்சிகள் என்றும் -இது வரவேற்கத்தக்க மாற்றம் என்றும் பலர் எம்மிடம் கூறினார்கள். அத்தகைய சக்திகளுடன் ஒன்றாக வருவதை இம்முறை அரச தலைவர்தேர்தலில்காணலாமென என்னால் கூற முடியாது. ஆனால்நீண்ட கால அடிப்படையில் பார்க்கும்போது, அதுவே செல்வதற்கான பாதை, என்று குறிப்பிட்டிருந்தார்.

சுமந்திரனின் இந்தக் கருத்து தொடர்பாக பதிலளிக்கும்போதே, பிமல் ரத்நாயக்க மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சுமந்திரனின் நிலைப்பாட்டை நாம் ஏற்றுக் கொள்கின்றோம். மக்கள் விடுதலை முன்னணியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஒரு நேர்த்தியான கொள்கையின் அடிப்படையில் அரசியல் செயற்பாடுகளை முன்னெடுக்கின்றன.

ஆனால், ஏனைய கட்சிகள் எவ்வித கொள்கைகளுமற்ற விதத்திலேயே செயற்படுகின்றன. ஆகையால், கொள்கையின் அடிப்படையில் செயற்படும் கட்சிகள் ஒன்றிணைந்து செயற்படுவது இலகுவானதாகும். மேலும் கூட்டமைப்பினர் இதுவரை ஆதரவு வழங்கிய கட்சிகள் அனைத்துமே அவர்களது வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. மக்கள்விடுதலை முன்னணியும் கூட்டமைப்பும் இணைந்த பயணம் அரச தலைவர் தேர்தலில் இருந்தே ஆரம்பிக்க வேண்டும் - என்றார். (ஒ.5)

# ரணில் களமிறங்கினால் தோல்வியடைவது உறுதி

## அடித்துக் கூறுகின்றார் மைத்திரி

கொழும்பு, செப். 10



அரச தலைவர் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்க போட்டியிட்டால் படுதோல்வியடைவது உறுதி. இவ்வாறு அரச தலைவரும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

"ஐக்கிய தேசியக் கட்சியின் யாப்புக்கு அமைவாக அரச தலைவர் வேட்பாளர் நான்தான். இருப்பினும், எமது கட்சியின் அரச தலைவர் வேட்பாளரை உரிய நேரத்தில் அறிவிப்பேன்" என்று தலைமை அமைச்சரும், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமானரணில்விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார். இது தொடர்பில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த அரசு வீழ்ச்சிப் பாதையில் செல்வதற்கு ரணிலே பிரதான காரணம். கடந்த அரசு கொலைக் கலாசாரத்தை அரங்கேற்றியது. இந்த அரசு ஊழல், மோசடி கலாசாரத்தை வேரூன்றச் செய்தது. இதற்கெல்லாம் துணைபோன ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர், அரச தலைவராக ஆசைப்படுவது பகல் கனவாகும்.

இவர் அரச தலைவர் தேர்தலில் போட்டியிட்டால் படுதோல்வியடைவது நிச்சயம். இது அனைவருக்கும் தெரிந்த விடயம்.

அரச தலைவர் தேர்தலில் பல தடவைகள் இவர் போட்டியிட்டு படுதோல்வியடைந்தவர். அப்படியான ஒருவர் இன்னொரு தடவையும் போட்டியிட நினைப்பது வெட்கக்கேடான விடயம் - என்றார். (ஒ.5,22)



## டோகா அரசதலைவர் இலங்கை வருகிறார்

கொழும்பு, செப். 10

டோகோ அரச தலைவர் எஸோஸிம்னாநாஸ்ஸிங்பே நான்கு நாள் உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டு எதிர்வரும் 13ஆம்திகதிஇலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

அவர் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த உள்ளிட்ட முக்கிய அரசியல்வாதிகள்சிலரை சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்என்றுகொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (ம)

## கோத்தாவுக்கு எதிராக விசாரணை!

கொழும்பு, செப். 10

பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள முன்னாள் பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்ச, 2005 ஆம் ஆண்டு அமெரிக்கக் குடிமகனாக இருந்தபோது அம்பாந்தோட்டை மெதமுலன வாக்காளர் இடாப்பில் பெயர் உள்வாங்கப்பட்ட விதம் மற்றும் தற்போது அவர் இலங்கை கடவுச் சீட்டொன்றினை பெற்றுக்கொண்ட விதம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

குற்றப் புலனாய்வுப் பிரிவின் சிறப்புக் குழுவொன்று இது தொடர்பில் விசாரணைகளை நடத்தி வருவதாக பொலிஸ் தலைமையகத் தகவல்கள் தெரிவித்தன. பொலிஸ் தலைமையகத்துக்கு கிடைக்கப்பெற்றுள்ள இருவேறு முறைப்பாடுகளுக்கு அமைய இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

எவ்வாறாயினும் இரட்டைக் குடியுரிமையை அகற்றிக்கொண்டதாக, இந்த இலங்கை கடவுச் சீட்டைப் பெற்றுக் கொள்வதற்காக கோத்தபாய ராஜபக்சவால் ஆவணங்கள் சில சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும், அதன் நம்பகத்தன்மையை உறுதி செய்துகொள்ளவும், மேலதிக தகவல்களை வெளிப்படுத்தவும் உள் நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்தனவிடமும் விசாரணை செய்து, வாக்குமூலத்தைப் பதிவு செய்ய குற்றப் புலனாய்வுப் பிரிவு திட்டமிட்டுள்ளதாக அறியமுடிகின்றது. (ஒ.5)

## கல்வி தமிழர்களின் சொத்து அதில் அரசியல் வேண்டாம்!

*ஐ.தே.க.அமைப்பாளர் கணேசமூர்த்தி தெரிவிப்பு*

கொழும்பு, செப். 10

எப்போதும் கல்வியில் அரசியலைக் கலக்கக் கூடாது. கல்வி அனைவருக்கும்வேண்டியதுஎமது சமு தாயத்தின் முதுகெலும் பாகவுள்ளது. அது தமிழ்மக்களினதுசொத்து. 1950ஆம் ஆண்டு காலங்களில் இலங்கையிலுள்ள அமைச்சுக்களில் உள்ள செயலர்களாக 60 வீதமானவர்கள் தமிழர்கள்தான் இருந்துள்ளார்கள். இவ்வாறு தெரிவித்தார் ஐக்கிய தேசியக் கட்சியின் பட்டிருப்புத் தொகுதி அமைப்பாளர் சோ.கணேசமூர்த்தி.

பட்டிருப்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார் அவர். அவர் மேலும்தெரிவித்ததாவது:

இன்று 500 பாடசாலைகள் இலங்கை முழுவதும் திறந்து வைக்கப்பட்டுள்ளன. அதற்காக 65 ஆயிரம் மில்லியன் ரூபா இந்தத் திட்டத்துக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இதில் 18 ஆயிரம் செயற்றிட்டங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன - என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)

## ஆபாசப் படங்கள் பரவுவதைத் தடுக்க சிறப்புப்பிரிவு அமைக்கப்பட வேண்டும்

### ஹிருணிகா வலியுறுத்தல்

கொழும்பு, செப். 10

இணையத்தளங்களில் ஆபாசப்படங்கள் பரவுவதைத் தடுக்க சிறப்புப் பிரிவு அமைக்கப்பட வேண்டுமென நாடாளுமன்றத்தில் தனிநபர் பிரேரணை சமர்ப்பித்துள்ளார் ஐ.தே.கவின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா.

ஹிருணிகா சமர்ப்பித்த இந்தப் பிரேரணையில், குற்றவியல் புலனாய்வுத் துறையினுள் இந்த சிறப்புப் பிரிவை அமைக்க வேண்டுமென முன்மொழிந்துள்ளார். "ஆபாசக் காணொலிகளை உருவாக்கி, விநியோகித்து, வைத்திருக்கும் நபர்களை விசாரிக்க புலனாய்வுத் துறைக்குள் சிறப்புப் பிரிவு அமைக்கப்பட வேண்டும். ஏனெனில் இந்த நபர்களால் மக்களின் தனியுரிமை பாதிப்படைந்துள்ளது. பெண்கள் பெரும்பாலும் சிரமத்திற்கு ஆளாகிறார்கள். பல்வேறு ஆபாச காணொலிகள் தற்போது இணையத்தில் ஏராளமாகப் பரப்பப்படுகின்றன" என்று தனது பிரேரணையில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

2010ஆம் ஆண்டில் பொலிஸ் பெண்கள் மற்றும் குழந்தைகள் பணியகம் சமர்ப்பித்த அறிக்கையைத் தொடர்ந்து உள்ளூர் நடிகர்கள் மற்றும் நடிகைகள் தோன்றும் 100க்கும் மேற்பட்ட ஆபாச வலைத்தளங்கள் மற்றும் உள்ளூர் திரைப்படங்களுக்கு தடை விதித்து நீதிமன்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

2017ஆம் ஆண்டில் உலகின் மிகப்பெரிய ஆபாச வலைத்தளங்களில் ஒன்று அதன் உலகளாவிய பார்வையாளர்களின் புள்ளிவிவரங்களை வெளியிட்டது. இதில் முந்தைய ஆண்டைவிட அதிக அளவில் ஆபாசப் படங்களைப் பார்க்கும் நாடுகளின் பட்டியலில் இலங்கை உயர்ந்த இடத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## இலங்கைக் கடற்படைக்கு விசாகப்பட்டினத்தில் பயிற்சி

கொழும்பு, செப். 10

இந்திய -இலங்கை கடற்படையினருக்கு இடையிலான, கூட்டு கடற் போர்ப் பயிற்சி இந்தியாவின் விசாகப்பட்டினம் கடற்பகுதியில் ஆரம்பமாகியுள்ளது.

இரண்டு நாடுகளின் கடற்படைகளும் ஏழாவது ஆண்டாக இந்த கூட்டு கடற்போர்ப் பயிற்சிகளை மேற்கொண்டுள்ளன.

கடந்த 7ஆம் நாள் ஆரம்பமாகிய இந்தக் கூட்டுப் பயிற்சி, எதிர்வரும் 14ஆம் திகதி வரை தொடர்ந்து இடம்பெறவுள்ளது.

கடற்படையின் சிந்துரால மற்றும் சுரனிமல ஆகிய போர்க்கப்பல்கள், இந்தக் கூட்டுப் பயிற்சிக்காக கடந்த சனிக்கிழமை விசாகப்பட்டினத்தை சென்றடைந்தன.

இவற்றில் உள்ள 323 கடற்படையினர் இந்த கூட்டுப் பயிற்சியில் பங்கேற்கின்றனர்.

உலங்குவானூர்தி நடவடிக்கைகள் உள்ளிட்ட பரந்துபட்ட கடற்படை ஒத்திகைகளைக் கொண்டதாக இந்தக் கூட்டுப் பயிற்சி அமையவுள்ளது. (ஒ.5)

## கோதுமையை அதிகவிலைக்கு விற்பதற்கு முற்றாகத் தடை

*மீறுவோரை இனங்காண நடவடிக்கைகள்*

கொழும்பு, செப். 10

கோதுமை மாவை அதிக விலையில் விற்பனை செய்யும் வர்த்தகர்களைச் சுற்றிவளைக்கும் நடவடிக்கைகள், மேலும் கடுமையாக்கப்பட்டுள்ளதாக பாவனையாளர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

இவ்வாறான வர்த்தகர்கள் தொடர்பில் அறிவிப்பதற்கு, தொலைபேசி இலக்கம் ஒன்றும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக, பாவனையாளர் விவகாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் எம்.எஸ்.எம். பௌஸர் குறிப்பிட்டுள்ளார்.

பொதுமக்கள், 1977 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு, அதிகவிலையில்கோதுமை மாவை விற்பனை செய்யும் வர்த்தகர்கள் தொடர்பில் அறிவிக்க முடியும்.

இதேவேளை- கோதுமை மாவை அதிக விலையில் விற்பனைசெய்த 50க்கும் மேற்பட்ட வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஞாயிற்றுக்கிழமை நாடு தழுவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்ட சுற்றி வளைப்பின்போதே குறித்த வர்த்தகர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

வெள்ளிக்கிழமை நள்ளிரவு முதல் கோதுமை மாவின் விலையை 5 ரூபாவினால் அதிகரிப்பதற்கு பிறிமா மற்றும் செரண்டிப் நிறுவனங்கள் நடவடிக்கை எடுத்திருந்தன. எனினும், பாவனையாளர் விவகார அதிகார சபையின் அனுமதியின்றியே விலை அதிகரிக்கப்பட்டது.

அத்தியாவசியப் பொருளாக கோதுமை மா, பெயரிடப்பட்டதன் பின்னர் தமது அனுமதியின்றி அதன் விலையை அதிகரிக்க முடியாது. இதன் பிரகாரம், தொடர்ந்தும் கோதுமை மா ஒரு கிலோகிராம் 87 ரூபாவுக்கே விற்பனை செய்யப்பட வேண்டும். தமது அனுதியின்றி கோதுமை மாவின் விலையை அதிகரித்த நிறுவனங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாகவும், திணைக்களப் பணிப்பாளர் நாயகம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (ம)

*இலங்கை சிங்கள - பௌத்த நாடில்லை என்ற*

# சஜித்தை மங்கள சமரவீர தூக்கிப் பிடிப்பது எதற்கு?

## இப்படிக் கேள்வி எழுப்புகிறார் விமல் வீரவன்ச

*கொழும்பு, செப். 10*



*இலங்கை சிங்கள - பௌத்த நாடில்லை என்று கூறிய மங்கள சமரவீர, சிங்கள - பௌத்தன் என்று தன்னைக் கூறிக்கொள்ளும் சஜித் பிரேமதாசவை தோளில் தூக்கி வைப்பதன் நோக்கம் என்ன? இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார், மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச.*

தேசிய சுதந்திர முன்னணியின் 3 ஆவது தேசிய மாநாடு கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இந்த மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் தற்போதுள்ள அரசு பயங்கரவாதத்துக்கு இடமளித்த ஓர் அரசாகவே காணப்படுகின்றது.

இது சிங்கள- பௌத்த நாடு அல்ல என கூறிய அமைச்சர் மங்கள சமரவீரதான் இன்று சிங்கள - பௌத்தன் என்று தன்னைக் கூறிக்கொள்ளும் அமைச்சர் சஜித் பிரேமதாசவை, தனது தோளில் வைத்து தாங்கி வருகிறார். இது ஏன்? இந்த நடிப்புக்கள் எதற்காக? சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவான மாநாட்டில் உரையாற்றும் அவரது ஆதரவாளர்கள், அமைச்சர் ரிசாட் பதியுதீனின் ஆதரவும் சஜித் பிரேமதாசவுக்குத்தான் உள்ளதாகக் கூறிவருகிறார்கள்.

இவர்களின் நோக்கம்தான் என்ன? அடிப்படைவாதத்தை மீண்டும் நாட்டில் ஏற்படுத்தவே இவர்கள் தற்போது நாட்டின் அதிகாரத்தைக் கோருகிறார்கள். இதனை தோற்கடிக்கும் வல்லமை எம்மிடமுள்ளது. புத்திஜீவிகள்தான் இந்த நாட்டின் அதிகாரத்துக்கு வரவேண்டும். வேலை செய்து நிரூபித்த் ஒரு தலைவரே எமக்கு வேண்டும். இதற்காகத்தான் நாம் கோத்தபாயவைத் தெரிவு செய்துள்ளோம் - என்றார். (ஒ.5)

## அரசதலைவரின் செலவை இயன்றவரை குறைப்பேன்

*வேட்பாளர் அநுர குமார கருத்து*

கொழும்பு, செப். 10



நான் அரச தலைவரானால், அரச தலைவருக்காக மேற்கொள்ளப்படும் தேவையற்ற செலவுகளைக் குறைப்பேன். இவ்வாறு தெரிவித்தார் அரச தலைவர் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களில் ஒருவரான அநுரகுமார திஸாநாயக்க. அநுராதபுரத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அங்கு அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:

இந்த நாட்டின் மிகவும் மோசமான பதவியாகவே அரச தலைவர் பதவி காணப்படுகிறது.

தேசிய சொத்துக்களை அழிக்கும் ஒரு பதவியாகவே இந்தப் பதவி காணப்படுகிறது. இதனால், மக்களின் கோடிக் கணக்கான பணம் விரயமாக்கப்படுகிறது? இதிலிருந்து நாம் இந்த நாட்டை மீட்டெடுக்க வேண்டும். அடுத்த தலைமுறையினருக்கு சிறந்ததொரு நாட்டை நாம் வழங்கவேண்டும். மதுபானசாலை உரிமையாளர்களுக்கு நாம் நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைக்க முடியாது. அத்தோடு, போதைப்பொருள் வர்த்தகத்துடன் தொடர்புடைய பல அரசியல்வாதிகள் இங்கு இருக்கிறார்கள். இதுபோன்றவர்களுக்கு சொத்துக்கள் எவ்வாறு வந்தன என்பதை ஆராய வேண்டும். நாம் ஆட்சிக்கு வருவது யாரையும் பழிவாங்க அல்ல. ஆனால், இந்த நாட்டை தூய்மைப்படுத்த எந்தவொரு செயற்பாட்டையும் மேற்கொள்ளத் தயார்ாகவே இருக்கிறோம். இதனை தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியில் மட்டுமே மேற்கொள்ள முடியும். மக்கள் மீது தற்போது சுமத்தப்பட்டுள்ள இந்த பாரத்தை இறக்கி வைக்கவேண்டிய தருணம் வந்துவிட்டது. எனவே, இந்த செயற்பாட்டை மேற்கொள்ள நாமும் தயாராகவே இருக்கிறோம் -என்றார். (ம)

# வடகிழக்கில் சஜித்துக்கு ஆதரவு பெருகுகிறதாம்

கொழும்பு, செப். 10

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையின் ஆசீர்வாதத்துடன் கட்சியின் பிரதித் தலைவரான அமைச்சர் சஜித் பிரேமதாச அரச தலைவர் தேர்தலில் வேட்பாளராகக் களமிறங்குவார் என்ற நம்பிக்கை எமக்குண்டு. கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க சஜித் பிரேமதாசவுக்குத் துரோகமிழைக்க மாட்டார் என்ற நம்பிக்கையும் எமக்குண்டு. இவ்வாறு சஜித் ஆதரவு அணியைச் சேர்ந்த அமைச்சர் அஜித் பி. பெரேரா தெரிவித்தார்.

"ஐக்கிய தேசியக் கட்சியின் யாப்புக்கு அமைவாக அரச தலைவர் வேட்பாளர் நான்தான். இருப்பினும், எமது கட்சியின் அரச தலைவர் வேட்பாளரை உரிய நேரத்தில் அறிவிப்பேன்" என்று தலைமை அமைச்சரும், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார். இது தொடர்பில் அமைச்சர் அஜித் பி. பெரேரா கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய தேசியக் கட்சியின் அரச தலைவர் வேட்பாளர் சஜித் பிரேமதாசவே என்பதில் நாம் உறுதியாக இருக்கின்றோம். இதில் விட்டுக்கொடுப்புக்கு இடமில்லை. கட்சியின் தலைவர் இந்த விடயத்தில் மனட்சாட்சியுடன் செயற்பட வேண்டும்.

சஜித் பிரேமதாசவுக்கான மக்கள் ஆதரவு தினந்தோறும் பெருகிக்கொண்டே செல்கின்றது. வடக்கு-கிழக்கு மக்களில் பெரும்பாலானோர் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவாகவே இருக்கின்றார்கள். இதிலிருந்து சஜித்தின் வெற்றி உறுதி செய்யப்பட்டுள்ளது என்றார். (ஒ.5,22)

# ஐ.தே.கவில் எவர் களமிறங்கினாலும் கோத்தபாய மண்கவ்வுவது நிச்சயம்!

*ராஜித திட்டவட்டமாகத் தெரிவிப்பு*

கொழும்பு, செப். 10

ஐக்கிய தேசியக் கட்சியின் அரச தலைவர் வேட்பாளர் தொடர்பில் இதுவரை இறுதி முடிவு எடுக்கப்படவில்லை. எனினும், ஐக்கிய தேசியக் கட்சியில் எவர் போட்டியிட்டாலும் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ச தோல்வியடைவது நிச்சயம். இவ்வாறு அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

போர்க்குற்றச்சாட்டுக்களுக்கும் கொலைக் குற்றச்சாட்டுக்களுக்கும் உள்ளாகியுள்ள நபர்தான் கோத்தபாய ராஜபக்ச. இவர் எந்தத் துணிவுடன் அரச தலைவர் தேர்தலில் களமிறங்குகின்றார் என்று தெரியவில்லை. எனினும், இவரின் தோல்வி ஏற்கனவே எழுதி வைக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் அரச தலைவர் வேட்பாளர் விவகாரம் தொடர்பில் கட்சிக்குள் அதன் கூட்டணிக்குள் சில கருத்து முரண்பாடுகள் இருக்கின்றமை உண்மைதான். அதனால்தான் வேட்பாளர் விடயம் தொடர்பில் இதுவரை இறுதி முடிவு எடுக்கப்படவில்லை. அவசரப்பட்டு முடிவுகளை எடுக்க முடியாது. பொறுமையாக நிதானமாக இருந்துதான் முடிவுகளை எடுக்க வேண்டும்.- என்றார். (ஒ.5,22)

## அதிகார ஆசை பிடித்த கூட்டமைப்பு

*சாடுகிறார் கம்மன்பில*

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், அதிகளவு அதிகாரங்கள் இருக்க வேண்டும் என்பதற்காகவே மக்களை முன்னிலைப்படுத்தி இனப்பிரச்சினை இருப்பதாக சித்தரிக்கின்றார்கள் என்று பிவித்துறு ஹெல உறுமயவின் பொதுச் செயலரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் தேசிய இனப்பிரச்சினை இருப்பதாக கூறுவதே அப்பட்டமான பொய்யாகும். நாடு முழுவதும் மூவின சமூகத்தினரும் ஒற்றுமையுடனேயே இருக்கின்றார்கள்.

பல உயிர்கள் தியாகம் செய்யப்பட்டதன்பின்னர், அமையப்பெற்ற மாகாண சபையை உரிய முறையில் பயன்படுத்தி மக்கள் சேவையை முன்னெடுக்கவில்லை. அவ்வாறு முன்னெடுத்திருந்தால் இரண்டு ஆண்டுகளாக அந்த மாகாண சபைக்குத் தேர்தல் நடத்தப்படாமல் இருக்கையில், மக்கள் வீதிக்கிறங்கி மாகாண சபையைக் கோரி போராடியிருப்பார்கள். அவ்வாறு நடைபெறவில்லை.

அதன்மூலம் அதிகாரப் பகிர்வு அவசியமில்லை என்பதே வெளிப்படுகின்றது. கூட்டமைப்பினருக்கே அதிகாரப் பகிர்வு அவசியமாகின்றது. அந்தக் கோரிக்கை கூட தமது அரசியலை மேற்கொள்வதற்கே அவர்களால் முன்வைக்கப்படுகின்றது-என்று கூறினார். (ஒ.5)

# முரளிதரனின் கருத்துக்கு உலகெங்கும் கண்டனம்!

கொழும்பு, செப். 10

2009ஆம் ஆண்டு போர் முடிவுக்கு வந்த, விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்ட நாளே எனது வாழ்க்கையின் மிக முக்கியமான நாள் என இலங்கையின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் தெரிவித்திருந்த நிலையில் அவரின் கருத்துக்கு சமூக ஊடகங்களில் பரவலாகக் கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன.

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாயவின் மாநாடு கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய முரளிதரன் 'சமாதான பேச்சுக்களின் போது விடுதலைப் புலிகளுக்கு வாய்ப்பு கிடைத்தது. ஆனால் அவர்கள் அப்பாவிகளை கொலை செய்தனர். விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்ட நாள் எனது வாழ்வின் முக்கியமான நாள்' எனக் கூறியிருந்தார். அவரின் இந்தக் கருத்துக்கே உலகளவில் கண்டனங்கள் குவிந்து வருகின்றன. (ம)

## இலங்கையின் பல மாவட்டங்களில் தேசியப் பாடசாலைகள் அமையும்!

### அமைச்சர் இராதாகிருஷ்ணன் தகவல்

கொழும்பு, செப். 10

எதிர்வரும் காலங்களில் கல்வி அமைச்சு இலங்கையில் பல மாவட்டங்களிலும் தேசிய பாடசாலைகளை உருவாக்குவதற்கான வேலைத்திட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளது இவ்வாறு தெரிவித்தார் சிறப்புப் பிரதேசங்களுக்கான அபிவிருத்தி அமைச்சரும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித்தலைவருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன்.

கல்வி அமைச்சால் முன்னெடுக்கப்படும், 'அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை' எனும் வேலைத்திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்ட ஹற்ரன் ஹைலன்ஸ் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள புதிய கட்டடங்கள் நேற்று மாணவர்களின் பாவனைக்காக கையளிக்கப்பட்டது. இந்த நிகழ்விலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மலையக வரலாற்றில் இதுவரை காலமும் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்திகளைவிட இந்த அரசால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற அபிவிருத்தி அதிகம் என்பதை எவராலும் மறுக்க முடியாது. குறிப்பாக மலையக பாடசாலைகளில் பெரிய அபிவிருத்திகள் இந்த அரசின் மூலம் முன்னெடுக்கப்படுவது வரவேற்புக்குரியது. எதிர்வரும் காலங்களில் இன்னும் அதிகமான அபிவிருத்திகளை செய்ய வேண்டும் என்பதே என்னுடைய எதிர்பார்ப்பு - எதிர்காலத்தில் நாடு முழுவதும் இன்னும் அதிகளவான தேசியப் பாடசாலைகள் அமைக்கப்படும் என்றார். (ம)

## நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும்

யாழ்ப்பாணம், செப்.10

யாழ்ப்பாணம் புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரியின் நிறுவுநர் தினமும், பரிசளிப்பு விழாவும் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும்.

பாடசாலை அதிபர் செல்லையா இளங்கோ தலைமையில் நடைபெறும் நிகழ்வில், முதன்மை விருந்தினராக கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், சிறப்பு விருந்தினராக கல்லூரியின் பழைய மாணவரும் அணுவிஞ்ஞானியுமான கலாநிதி வே. இலகுப்பிள்ளை ஆகியோர் கலந்து கொள்வார். நினைவுப் பேருரையைகும்புறுப்பிட்டிய மருத்துவமனையின் பொறுப்பதிகாரி மருத்துவர் வசந்தமாலா ரவீந்திரா, வெளியீட்டுரையை ஓய்வுநிலை அதிபர் வைரவநாதர் ஆறுமுகம், மதிப்பீட்டுரையை வலிகாமம் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் கணபதிப்பிள்ளை சந்திரலிங்கம் ஆகியோர் நிகழ்த்துவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## தலைவர் படத்துடன் ஒரு பாடல் இந்திய திரைப்படத்துக்கு தடை

யாழ்ப்பாணம், செப். 10

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் உருவப்படம் மற்றும் பெரியாரின் உருவப்படம் என்பனவற்றை ஒரு பாடல் காட்சியில் பின்னணியாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட 'ஜிப்ஸி' திரைப்படத்துக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திரைப் படத்தில் ஜீவா உட்படப் பலர் நடித்துள்ளனர். தமிழகத்தின் வந்தவாசி சட்டமன்ற உறுப்பினர் அம்பேத்குமார் இந்தத்திரைப்படத்தின் தயாரிப்பாளர். 'குக்கூ' மற்றும் 'ஜோக்கர்' திரைப்படங்களின் இயக்குநர் ராஜுமுருகனின் அடுத்த படைப்பாக 'ஜிப்ஸி' படம் அமைந்துள்ளது.

திரைப்பட உருவாக்கம் முடிந்து தணிக்கைக் குழுவுக்கு அனுப்பப்பட்டபோது, படத்தில் சர்ச்சைக்குரிய கருத்துக்கள் இருக்கின்றன எனக்கூறி தணிக்கைச் சான்றிதழ் மறுக்கப்பட்டுள்ளது. மேல்முறையீடு செய்தும் சான்றிதழ் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் மக்கள் நலனுக்காகப் போராடும் தலைவர்களைப் பாடல் காட்சிகளில் முன்னிறுத்தி காட்சி அமைக்கப்பட்டிருந்தது. இயக்குநர், மற்றும் அந்தப் பாடல் காட்சிகளில் நீதிமன்றிலிருந்து சட்டத்தை எதிர்த்துப் பாடுவதாகவும்காட்சி அமைத்து அதன்பின்னணியில்பெரியார், தேசியத் தலைவர் பிரபாகரன் போன்ற தலைவர்களையும் காட்சிப்படுத்தியிருந்தார்.

தற்போதுபடக்குழுமும்பை தணிக்கைத் தீர்ப்பாயத்தை அணுகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. தணிக்கைச் சான்றிதழ் மறுக்கப்பட்டதற்கு படத்தில்ஆர்.எஸ்.எஸ். இன் வலதுசாரி கருத்தியலை விமர்சிக்கும் காட்சிகள் இடம்பெற்றுள்ளமையே காரணமாகக் கூறப்படுகிறது.

இயக்குநர் ராஜுமுருகனின் சமூகப் பற்றும் படைப்புச் சிந்தனையின் நேர்மையும் நாடறிந்தது. தனது ஜோக்கர் படத்தின் மூலம் அரசியல் மற்றும் சமூகத் தளத்தில் புரையோடிப்போன வறட்டு அதிகார, ஊழல் போக்கை தோலுரித்ததோடு, எளிய மக்களின் வாழ்வியல் நெருக்கடிகளை தமது படைப்புக்களின் வழியே தொடர்ந்து பேசி வருபவர். ஜோக்கர் படைப்புக்காக தேசிய விருதையும் பெற்றவர். (து)

## சு.க. உறுப்பினர்களுக்கு வலை விரிக்கும் மொட்டு

கொழும்பு, செப். 10

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களை சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியில் இணைந்து கொள்ளுமாறு அக்கட்சியின் முன்னாள் தலைவரும், பேராசிரியருமான ஜி.எல்.பீரிஸ் அழைப்பு விடுத்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐ.தே.க. மற்றும் ஜே.வி.பி. என்பன தங்கள் கட்சிகளை பலப்படுத்துவதற்காக ஏனைய கட்சிகளுடன் பேச்சுக்களில் ஈடுபட்டு வருகின்றன. அந்தவகையிலேயே மக்கள் விடுதலை முன்னணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அழைப்பு விடுத்திருந்தது - என்றார். (ஒ.5)

# மொட்டைக் கைவிடமுடியாதென்றால் கூட்டணி ஒருபோதும் சாத்தியமில்லை

### சு.க. செயலர் தயாசிறியும் விடாப்பிடி

கொழும்பு, செப். 10

பொதுச் சின்னத்தின் கீழ் களமிறங்க பொதுமக்கள் முன்னணியினர் சம்மதம் தெரிவிக்காவிட்டால், கூட்டணி சாத்தியப்படாதென சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

ஹெட்டிபொல பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கோத்தபாய ராஜபக்ச, மொட்டுச் சின்னத்தை தவிர்த்து வேறொரு சின்னத்தில், பொதுச் சின்னத்தில் தேர்தலில் போட்டியிட முடியாது என்று கூறியிருந்தார். இவ்வாறானதொரு நிலையிலேயே தயாசிறி மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

என்மீது தற்போது சிலர் வேண்டுமென்றே குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகிறார்கள். எவ்வாறாயினும், நான் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர் என்ற ரீதியில்தான் கருத்துக்களை வெளியிட்டு வருகிறேன்.

இலங்கையின் கடந்த கால அரசியல் வரலாற்றை எடுத்துக்கொண்டால், கூட்டணியொன்று அமைக்கப்படும்போது பிரதானக் கட்சியொன்றின் சின்னத்துடன் அந்தக் கூட்டணி எந்தவொரு தேர்தலிலும் களமிறங்கியதில்லை. மாறாக பொதுச் சின்னமொன்றே பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஏனையக் கட்சிகளுக்கு பாதிப்பு ஏற்படும் என்பதால்தான் அவ்வாறான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. தற்போது சுதந்திரக் கட்சி பொதுமக்கள் கூட்டணி தொடர்பான பேச்சுக்கள் இடம்பெற்று வருகின்றன.

இதன்போது, நாம் பொதுவான சின்னமொன்றில் களமிறங்குவது தொடர்பாகவே தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறோம். எமக்கு தாமரை மொட்டுச் சின்னத்தில் வாக்குக் கேட்க முடியாது. இதனை சுதந்திரக் கட்சியின் ஆதரவாளர்களும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியை எமது சின்னமான கை சின்னத்தில் களமிறங்குமாறும் எம்மால் கேட்க முடியாது. இதனாலேயே பொதுச் சின்னத்துக்குச் செல்ல வேண்டும் என்று நாம் கோரிவருகிறோம். சிறுபான்மையினருக்கு மிகவும் பழக்கப்பட்ட வெற்றிலை சின்னத்தில் களமிறங்குவதே சிறந்ததாக இருக்கும் என்று நாம் கருதுகிறோம்.

இதனை அவர்கள் ஏற்றுக்கொள்ளாவிட்டால் சுதந்திரக் கட்சி என்ற ரீதியில் தனியாகத்தான் தேர்தலில் களமிறங்க வேண்டியேற்படும்– என்றார். (ஒ.5)

# கருத்தரிப்பில் தமிழர்கள் கடைசியிலேயே உள்ளனர்

## தமிழினம் அழிந்துகொண்டிருக்கின்றது என்று எச்சரித்துக் கூறுகிறார் சிவமோகன் எம்.பி.

வவுனியா, செப்.10

இலங்கையில் தமிழ், சிங்கள, முஸ்லிம் பெண்களின் கருத்தரிப்பு வீதங்கள் முறையே 1.2, 1.4, 4.6 ஆகக் காணப்படுகின்றது. எமது இனம் அழிவை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது என்பதை நாம் இப்போதே புரிந்துக்கொள்ளவேண்டும். மிகவும் குறைந்த வீதத்தில் உள்ள மக்களும் நாங்கள்தான். இதைப் புரிந்து செயற்படவேண்டும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் எச்சரித்துள்ளார். வவுனியா சைவப் பிரகாச ஆரம்பப் பாடசாலையில் கற்றல் வளநிலையத்தை நேற்றுத் திறந்துவைத்து உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஏனைய வகையில் மட்டுமன்றி, மருத்துவ ரீதியாகச் சொல்லும்போது கூட தமிழினம் அழிவை நோக்கித் தான் சென்றுகொண்டிருக்கிறது. இதை உணர்ந்து செயற்படவேண்டியது ஒவ்வொருவரினதும் கடமை.

**கல்வி என்ற ஆயுதம்**

தற்போது தமிழர்களின் கையிலுள்ள இறுதி ஆயுதம் கல்வி. அதன் மூலம் தான் தமிழ் மொழி பேசுபவர்கள் மீண்டெழ முடியும். வீடு, வாழ்வாதாரம் முக்கியம் என்றாலும் அவற்றை விட முக்கியமானது கல்வி. அதை எந்தக் காரணம்கொண்டும் கைவிட்டு விடக்கூடாது.

**இனத்தை அழிக்கவே நூலகம் எரிக்கப்பட்டது**

ஒரு இனத்தை அழிக்க வேண்டுமானால் அந்த இனத்தின் கல்வியில் கை வைக்க வேண்டும். அதனால் தான் தமிழர்களின் இருப்பை உருக்குலைப்பதற்காக எமது கலாசார விழுமியங்கள், வரலாறுகளை தாங்கிநின்ற பொக்கிசமான யாழ்ப்பாண நூலகம் வன் கொடுமையாளர்களால் எரிக்கப்பட்டது.

**மொழியைத் தொலைக்காதீர்**

ஒரு இனம் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமானால் அது தன்னுடைய கலாசாரம், மொழியைப் பேணிக்காக்க வேண்டும். இல்லாவிடில் அந்த இனம் அழிந்ததாகவே முடியும். இன்று வெளிநாட்டு மோகத்தால் தமிழர்கள் தமது மொழியைத் தொலைத்துக்கொண்டிருக்கிறார்கள். கலாசார ரீதியான நிகழ்வுகளை வளர்க்கும் செயற்பாடுகளை புலம்பெயர் நாடுகளில் கடைப்பிடித்தாலும் தமது பிள்ளைகள் மூலம் மொழியைத் தொலைத்துகொண்டிருக்கின்றனர்.

**ஜப்பான் முன்னுதாரணம்**

போரால் அழிவைச் சந்தித்த ஜப்பான் நாட்டிடம் உங்களுக்கு என்ன தேவை என்று அமெரிக்கா கேட்டபோது:



எமக்குத் தொழில்நுட்பக் கல்வி வேண்டும் என்றே கோரினார்கள். அதனால்தான் இன்று பொருளாதாரத்தில் அது உலக நாடுகளுக்குப் போட்டியாக விளங்குகின்றது.

நாமும் அழிவைச் சந்தித்த இனம். ஆனால் எங்கு சென்றாலும் எமக்கு வீடு தாருங்கள்.

வாழ்வாதாரம் தாருங்கள் என்றுதான் எமது மக்கள் கேட்கிறார்கள். அந்த நிலை மாற்றப்பட்டவேண்டும். எம்மை நாம் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமானால் கல்வியை நோக்கி எமது பிள்ளைகளை முன்னிறுத்த வேண்டும் - என்றார்.

(து-110)

# சாத்தியமற்ற உறுதிமொழிகளை வழங்குவதைத் தவிர்க்கவேண்டும்

*அரசியல்வாதிகளைக் கோருகின்றார் முன்னாள் முதலமைச்சர் நஸீர் அகமட்*

மட்டக்களப்பு, செப். 10

சாத்தியமற்ற உறுதிமொழிகளை வழங்குவதை அரசியல் தரப்பினர் தவிர்க்க வேண்டும். இவ்வாறான உறுதிமொழிகளை வழங்குபவர்கள் குறித்து பொதுமக்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும் என கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நஸிர் அகமட் வலியுறுத்தியுள்ளார்.

சமகால தேர்தல்களம் தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது:

நாடு தற்போதிருக்கும் நிலையில் பொதுமக்களுக்குரிய சேவைகளை வழங்க ஏழரை லட்சம் தொடக்கம் 8 லட்சம் பேர் வரையிலான அரச ஊழியர்கள் தேவைப்படுகின்றனர் எனக் கணிப்பிடப்படுகிறது. எனினும் 15 லட்சம் பேர் தற்போது அரச சேவையில் உள்ளனர் என்கிறது தரவு. உலகிலேயே அதிக அரச ஊழியார்கள் பணிபுரியும் நாடுகளில் ஒன்றாகவும் இலங்கையும் இருக்கின்றது.

இந்த நிலையில், எதிர்வரும் அரச தலைவர் தேர்தல்குறித்த பரப்புரைகள் ஆரம்பமாவதற்கு முன்னரே இதில் களமிறங்கும் தரப்புகளிடமிருந்து அரச தொழில் வாய்ப்புகள் தொடர்பில் சாத்தியமற்ற உறுதிமொழிகள் வழங்கப்படுகின்றன. இவை நாளாவட்டத்தில் மேலும் அதிகரிக்கும் வாய்ப்புகள் இருக்கின்றன.

தத்தமது வெற்றியை மட்டும் கருத்தில் கொண்டு சொல்லப்படும் இது போன்ற உறுதி மொழிகள் குறித்து மக்கள் அவதானமாக நடந்து கொள்ள வேண்டும். குறிப்பாக சிறுபான்மை மக்கள் மிகவும் ஆழமாகச்சிந்தித்து முடிவுகளை மேற்கொள்ள வேண்டும்.

ஏனெனில் 2015ஆம் ஆண்டு நாட்டின் வரலாற்றில் முதன்முறையாக இந்தநாட்டை ஆட்சி செய்த இரண்டு பிரதான கட்சிகள் இணைந்து கூட்டு அரசை அமைத்தன. இந்த தேசிய அரசின் மூலமாக தமது அரசியல் அபிலாசைகள் நிறைவேற்றப்படும் என தமிழ்பேசும் சமூகங்கள் பெரிதும் நம்பிக்கை கொண்டு செயற்பட்டன். இதற்கு உறுதிதரும் விதத்தில் நாடாளுமன்றம் அரசமைப்புச் சபையாக மாற்றப்பட்டு, அதில் அங்கத்துவம் கொண்டுள்ள கட்சிகளின் பிரதிநிதிகள் உள்வாங்கப்பட்டு, குழுக்கள் உருவாக்கப்பட்டு இனப்பிரச்சினை தீர்வுக்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

ஈற்றில் நடந்தது என்ன? 'பழைய குருடி கதவை திறவடி' என்ற நிலையில் அனைத்து செயலிழந்து போயின. இதற்கு முக்கிய காரணியாக அமைந்தவை அனைத்து கட்சிகளும் தலைமைகளும் தத்தமது இருப்பைத் தக்கவைத்துக் கொள்வதற்கான சுயலாப அரசியலில் இறங்கியமையாகும்.

இந்த நடைமுறையானது சிறுபான்மை மக்களின் பிரச்சினைக்குத் தீர்வுகள் எட்டப்படும் என்ற நம்பிக்கையை அடியோடு தகர்த்து இனியும் இவர்களை நம்பலாமா? என்ற கேள்வியையே எழச்செய்துள்ளது. இந்த நிலையில் எதிர்வரும் அரச தலைவர் தேர்தல் களமானது வாக்குறுதிகளை வழங்கினால் அதை மக்கள் நம்பி ஏற்றுச் செயற்படுவார்கள் என்ற நிலையை முற்றாக ஒதுக்கித்தள்ளியுள்ளது என்பதை கவனத்தில்கொள்ள வேண்டும். எனவே வழங்கப்படும் உத்தரவாதங்கள் உறுதியுள்ளவையாக, உத்தரவாதம் தரும் ஏற்பாடுகளைக் கொண்டவையாக இருக்கும் பட்சத்திலேதான் தமது ஆதரவைத்தர மக்கள் முன்வருவார்கள் என்ற நிலை யை ஏற்படுத்தியுள்ளது. எனவே மக்களை மடையர்களாக்கும் உத்தரவாதங்களை வழங்குவதை வேட்பாளர்களும் அவர்களை சார்ந்தோரும் நிறுத்திவிட்டு ஆரோக்கியமான உத்தரவாதங்களை வழங்கி நிரந்தரமான அதிகாரப் பகிர்வு கிடைப்பதற்கான வழிவகைளை மேற்கொள்ள வேண்டும்- என்றுள்ளது.

(ம)

# பாவோதல் போட்டியில் ஆத்மிகா இரண்டாமிடம்

சாவகச்சேரி,செப்.10

தேசிய மட்ட தமிழ்த் தினப் போட்டியில் சாவகச்சேரி மகளிர் கல்லூரி தரம் 10 ஐச்சேர்ந்தமாணவி சனாதனன் ஆத்மிகா பாவோதல் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய மட்டத்தில் பாடசாலை மாணவர்களிடையே கொழும்பில்நேற்று முன்தினம் இந்தப் போட்டிகள் நடைபெற்றன.

(க-9)

# ஆசை வார்த்தைக் கோசங்களை தமிழர் இனியும் நம்பமாட்டார்கள்

*கூட்டமைப்பின் சாந்தி எம்.பி. தெரிவிப்பு*

முல்லைத்தீவு, செப். 10

தேர்தல் காலம் ஆரம்பித்துள்ளதால், தமிழர்களின் புரையோடிப்போயுள்ள உரிமைப் பிரச்சினை மற்றும் சுயநிர்ணய உரிமையைப் பெற்றுத்தருவோம் என்ற கோசங்களை தமிழ் மக்கள் இனியும் நம்பத் தயாரில்லை. சிங்களதேசம் இதைப் புரிந்துகொண்டால்சரி.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறீஸ்கந்தராசா தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் கல்வி அமைச்சின் “அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை” திட்டத்தில் அமைக்கப்பட்ட கட்டடத் திறப்பு நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

புதுக்குடியிருப்புப் பகுதியில் கிராம எழுச்சித்திட்ட நிதியில் இந்த ஆண்டு ஓதுக்கீடு செய்யப்பட்ட நிதியில் 62 வேலைத்திட்டங்கள் 320 இலட்சம் ரூபா செலவில் செயற்படுத்தப்படுகின்றன. மீள்குடியேற்ற அமைச்சின் நிதியில் 16 திறன் வகுப்பறைக் கட்டடத்துக்கான நிதியில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரிக்கும் திறன் வகுப்பறை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறெல்லாம் நிதி ஒதுக்கினால், தமிழ் மக்களை ஏமாற்றிவிட முடியும் என்று 70 ஆண்டுகளாக நினைத்துக்கொண்டிருந்த அரசுபோல் இந்த அரசும் இருந்துவிடமுடியாது.

மைத்திரிபால சிறிசேன அரசதலைவராக வருகின்றபோது, கை தருகின்ற பொழுது, தமிழ் இனத்தின் புரையோடிப்போய் இருக்கின்ற பிரச்சினையைத் தீர்த்து வைப்பேன் என்ற கோசத்துடன் வந்தார். ஆனால் அவரும் ஏமாற்றிவிட்டார்.

இது தொடர்ந்து நடைபெறமுடியாது. இப்பொழுது பருவகால விளைச்சல் ஆரம்பித்துள்ளது. வழமைபோல் தேர்தல்கால பரப்புரைகளில் தமிழர்களின் புரையோடிப்போயுள்ள உரிமைப் பிரச்சினை, சுயநிர்ணய உரிஂமயைப் பெற்றுத்தருவோம் என்ற கோசங்களை மட்டும் தமிழ் மக்கள் இனி நம்பத் தயாரில்லை என்பதைச் சிங்களதேசம் புரிந்து கொள்ளவேண்டும் - என்றார்.

(த-ரி3)

சுகாதாரத் தொண்டர்கள் விவகாரம்

# வட மாகாண சபை தீர்மானித்த 957 பேருக்கு நியமனம் வழங்குக

## வட மாகாண சபை முன்னாள் உறுப்பினர்கள் அமையம் வலியுறுத்து

யாழ்ப்பாணம், செப்.10

வடக்கு மாகாண சபையின் தீர்மானத்துக்கு அமைவாக சுகதாரத் தொண்டர்களுக்கான நியமனம் 957 பேருக்கு வழங்கப்பட வேண்டும். ஆளணி தேவைப்பட்டால் முறையான கோரல்களின் மூலம் நியமனங்களை வழங்க வேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவனிடம் வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர்கள் அமையத்தின் சார்பாக வேண்டுகோள் விடுக்கின்றேன்.

இவ்வாறு வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.

நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

வடக்கு மாகாண சபையால் முன்னரே எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக, 2015ஆம் ஆண்டு வடக்கு மாகாண சுகாதார அமைச்சராக இருந்த பா.சத்தியலிங்கம் வடக்கு மாகாணத்தில் உள்ள 820 சுகாதாரத் தொண்டர்களுக்கு நியமனம் வழங்க வேண்டும் என்று சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவுக்குக் கடிதம் மூலம் தெரிவித்திருந்தார். வடக்கு மாகாண சபையில் எடுக்கப்பட்ட தீர்மானம் தொடர்பாக அன்றைய ஆளுநருக்கும் தெரியப்படுத்தப்பட்டிருந்தது.

820 சுகாதாரத் தொண்டர்கள் தொடர்பாக வடக்கு மாகாண சபை அறிந்து, ஆராய்ந்து முடிவு எடுத்திருந்தது. அதன்பின்னர் மருத்துவமனைகளிலும் உடற்கூற்று பரிசோதனை நிலையங்களிலும் கடமையாற்ற ஆண் தொழிலாளர்கள் தேவை என்பதன் அடிப்படையில் 137 பேர் உள்வாங்கப்பட்டனர். மொத்தமாக 957 பேருக்கு மேலதிகமாக உள்வாங்கப்பட்டவர்கள் இரு வருட சேவையை நிறைவு செய்திருக்க வாய்ப்பு இல்லை.

இந்த 957 பேருக்கும் நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டு நியமனம் வழங்கப்பட வேண்டும் என்பதே எமது ஏகமனதான கோரிக்கை. ஒரு சபை ஆய்ந்தறிந்த விடயங்களை, அந்த அடிப்படையில் ஆராய்ந்து நடைமுறைப்படுத்த வேண்டும் என்று ஆளுநரிடம் கோரவுள்ளோம். இதற்கு மேலதிகமாக நியமனம் வழங்க வேண்டியிருப்பின் அவற்றை முறைப்படியாகக் கோர வேண்டும். 957 பேருக்கும் நியமனங்கள் வழங்கப்பட்ட பின்னரே அவ்வாறான நியமனங்கள் வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்த விரும்புகின்றோம்.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட வடக்கு மாகாண சபையின் 38 உறுப்பினர்களின் ஏகமனதான தீர்மானத்தை நிறைவேற்றத் தயங்குவது, கவலைக்குரிய விடயமாகும் - என்றார். (ஏ-106)

முக்கிய தேர்தல் காலங்களில்

## முகப்புத்தகம் ஊடாக இடம்பெறும் வன்முறையைக் கட்டுப்படுத்தப் பேச்சு

யாழ்ப்பாணம், செப். 10

தேர்தல் காலத்தில், முகப்புத்தகம் ஊடாக இடம்பெறும் சட்ட மீறல்கள், போலியான தகவல்கள் மற்றும் வன்முறையைத் தூண்டும் தகவல்களைப் பரப்புவதைக் கட்டுப்படுத்துவது பற்றிப் பேசப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவின் அதிகாரிகளுக்கும் முகப்புத்தக நிறுவன உயர் அதிகாரிகளுக்குமிடையே இந்தச் சந்திப்பு நேற்று இடம்பெற்றது.

நாட்டின் முக்கிய தேர்தல்கள் மூன்றுக்கான காலங்கள் நெருங்கும் நிலையில் தேர்தல் காலத்தில் இடம்பெறும் முகப்புத்தக அத்துமீறல்களைக் கட்டுப்படுத்த தேர்தல்கள் ஆணைக்குழு நடவடிக்கை எடுக்கவுள்ளது.

இதன் பிரகாரம் உள்ளூர் ஊடகங்கள் மட்டுமன்றி முகப்புத்த கங்களின் ஊடான போலிப் பரப்புரைகள் மற்றும் வன்முறைத்தகவல்களை வெளியிட்டால் அல்லது ஒரு மதத்தவர்களுக்கு எதிரான கருத்துக்களைப் பரப்புவது போன்ற செய்திகளை வெளியிடும் முகப் புத்தகங்களின் பதிவுகளை உடனடியாக நீக்குவது தொடர்பிலும் அதன் உரிமையாளர்கள் மற்றும் இயக்கும் இடங்கள் போன்ற தகவல்களைத் திரட்டுவது தொடர்பிலும் ஆராயப்பட்டது.

இதன் அடிப்படையில் வன்முறையான மற்றும் மதத்தவர்களுக்கு எதிரான கருத்துக்கள் முகப்புத்தகத்தில் பதிவேற்றப்பட்டால் ஆணைக்குழுவின் அறிவுரை வரும் வரை காத்திராது உடனடியாகவே அந்த முகப்புத்தக நிறுவனமே நடவடிக்கை எடுக்கும் என்று முகப்புத்தக நிறுவனம் சார்பில் கலந்துகொண்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

செய்திகள் மற்றும் விளம்பரங்கள் தொடர்பில் ஆணைக்குழுவின் அறிவுரை பின்பற்றப்படும் எனவும் உறுதியளித்தனர்.

இதேபோன்று தேர்தல் கால குற்றச்சாட்டுகளுக்காக நியமிக்கப்படும் விசாரணைக் குழுக்களால் முன் வைக்கப்படும் குற்றச் சாட்டுகளை ஆராய்ந்தும் நடவடிக்கை மேற்கொண்டு, கட்டுப்படுத்தப்படும் எனவும் தெரிவித்தனர்.

இதேநேரம் முகப் புத்தகம் மற்றும் இணையத்தளங்களின் ஊடாக இடம்பெறும் மோசடிகளை இனங்காணும் நோக்கில் இந்தியாவிலிருந்து தகவல் தொழில்நுட்ப அதிகாரி ஒருவரும் சந்திப்புக்கு அழைக்கப்பட்டிருந்

## சிப்பாயைத் தாக்கினாரென இளைஞன் கைதானார்

முல்லைத்தீவு, செப். 10

வீதியில் காவல் பணியிலிருந்த சிப்பாயைத் தாக்கினார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று புதுக்குடியிருப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு வீதி மந்துவில் பகுதியில் நேற்றுமுன்தினமிரவு இது இடம்பெற்றது.

போதையில் சென்ற இளைஞர் குழு ஒன்று வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டு, படையினர் மீது தாக்குதல் நடத்தியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. இது பற்றிப் படையினர் புதுக்குடியிருப்புப் பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தனர். அதைத் தொடர்ந்து ஆனந்தபுரத்தைச் சேர்ந்த இளைஞன் நேற்றுக் கைதுசெய்யப்பட்டார்.

அவர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (த-ரி3)



## மேலதிக செயலராக பிரதீபன் பதவியுயர்வு

முல்லைத்தீவு, செப். 10

புதுக்குடியிருப்புப் பிரதேச செயலராகக் கடமையாற்றி வந்த ம.பிரதீபன் முல்லைத்தீவு மாவட்ட மேலதிக செயலராகப் பதவியுயர்வு பெற்றுள்ளார்.

நேற்று அவர் தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

இதுதவிர, ஏற்கனவே மாவட்ட மேலதிக செயலராகக் கடமையாற்றி வந்த கோ.தனபாலசுந்தரம் இடமாற்றலாகிச் சென்ற நிலையில், அவருக்குப் பிரிவுபசார நிகழ்வு முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்றது.

அதில் அவருக்கு முல்லைத்தீவு மாவட்டச் செயலர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் நினைவுச் சின்னம் வழங்கி மதிப்பளித்தார். (த-ரி3)

## கைகலப்பை தடுக்கச் சென்றவர் போத்தலால் தாக்குண்டு காயம்

அளவெட்டி.செப்.10.

குழுக்களுக்கிடையிலான கைகலப்பைத் தீர்த்து வைக்கச் சென்றவர் சோடாப் போத்தலால் தலையில் தாக்கப்பட்ட நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தத் தாக்குதல் சம்பவம் சுன்னாகம் நாகம் திரையரங்குக்கு அருகில் நேற்றுமுன்தினமிரவு இடம்பெற்றது.

காயமடைந்தவர் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில்சேர்க்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (த-36)

## ரணில் - சஜித் சந்திப்புடன் சிக்கல் தீரும்

கொழும்பு, செப்.10

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், அமைச்சர் சஜித் பிரேமதாசவுக்கும் இடையிலான சந்திப்பின் மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கும் என்று அமைச்சர் அஜித் மான்னப்பெரும தெரிவித்தார்.

நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேர்தலுக்கு தயார் என்பது மக்களுக்கு சேவையாற்ற தயார் என்பதே ஆகும். சிறி லங்கா பொதுமக்கள் முன்னணி சர்வாதிகாரக் கட்சியாகும். ,எந்த வாய்ப்புக்களும் இன்றி அவர்களுடைய வேட்பாளரை இலகுவில் அறிவித்து விட்டார்கள். ஐ.தே.கவில் அப்படி இல்லை. வேட்பாளருக்கான விருப்பை யார் வேண்டுமானாலும் முன்வைக்கலாம். அந்த ஜனநாயக உரிமை கட்சிக்குள் பேணப்படுகின்றது - என்றார். (ஏ)



## தொழில்நுட்ப ஆய்வுகூடம் வவுனியாவில் திறப்பு

வவுனியா, செப். 10


வவுனியா, தமிழ் மத்திய மகாவித்தியாலய தொழில்நுட்ப ஆய்வுகூடம் நேற்று முற்பகல் திறந்து வைக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் தா.அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெற்ற திறப்பு நிகழ்வில், தொழில்நுட்ப ஆய்வு கூடத்தை முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகனும் பாடசாலை அதிபரும் திறந்து வைத்தனர்.

சிறப்பு விருந்தினராக வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் முத்து இராதகிருஷ்ணன் கலந்துகொண்டார். வலயக்கல்விப் பணிமனை அதிகாரிகள், ஆசிரியர்கள், மாணவர்களும் இதில் கலந்து கொண்டிருந்தனர். பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றிருந்தன. (த-ரி4)

# மாடுகளைப் பயன்படுத்தி தற்கொலைத் தாக்குதல்!

## ஐ.எஸ்.ஐ.எஸ். புதிய உத்தி



லண்டன், செப்.10

தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களுக்கு மாடுகளைப் பயன்படுத்தும் புதிய உத்தியை ஐ.எஸ்.ஐ.எஸ் ஆயுததாரிகள் நடைமுறைப்படுத்த முயன்றுள்ளனர்.

ஈராக்கில் மாடுகளுக்குத் தற்கொலை அங்கிகளை மாட்டி அவற்றை மக்கள் அதிகளவில் வாழும் குடிமனைப் பகுதிகளுக்கு அனுப்பியுள்ளனர் அங்குள்ள ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுததாரிகள். பின்னர் தானயங்கி (ரிமோட் கொண்ட்ரோல்) ஊடாக அவற்றை வெடிக்க வைத்துள்ளனர்.

ஈராக்கின் அல் இஸ்லாப் பகுதியில் கடந்த சனிக்கிழமை இத்தகைய சம்பவங்கள் இரண்டு பதிவாகின. தற்கொலை அங்கிகள் பொருத்தப்பட்ட இரண்டு மாடுகளும் சாவடைந்துள்ளதுடன் அருகில் இருந்த வீடுகளும் இந்தத் தாக்குதலால் சேதம் அடைந்தன. ஆயினும் மனித உயிர்களுக்கு எது வித சேதமும் ஏற்படவில்லை என தியால மாகாண பொலிஸ் தலைமை அதிகாரி காலிப் அல் அடியா ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுததாரிகளுக்கு ஆளணி பற்றாக் குறை ஏற்பட்டுள்ளது, அதன் காரணமாகவே அவர்கள் இந்த உத்தியைக் கையாண்டுள்ளனர் என்று அவர் மேலும் குறிப்பிட்டார். 2003 ஆம் ஆண்டில் அல் குவைதா இயக்கத்தினர் இறந்த மிருகங்களின் உடல்களுக்குள் குண்டுகளை மறைத்து வைத்து மக்கள் அவற்றை நெருங்கும் போது வெடிக்குமாறு செய்தமையும், 2013 ஆம் ஆண்டில் ஆப்கானில் தலிபான்கள் கழுதையின் மேல் குண்டுகளை வைத்து அதை ஐ.நா. படைகள் இருந்த இடத்துக்கு அனுப்பி வெடிக்கச் செய்தமையும் குறிப்பிடத்தக்கது.


## புர்கினா பாசோவில் தாக்குதல்கள் 29 பேர் சாவு!



வாகடுகோ, செப்.10

ஜிகாதி ஆயுததாரிகளின் வன்முறை அதிகரித்து வரும் மேற்கு ஆபிரிக்க நாடான புர்கினா பாசோவில் நடந்த இருவேறு தாக்குதல்களில் 29 பேர் கொல்லப்பட்டதாக அந்த நாட்டு அரசு தெரிவித்தது. அந்த நாட்டின் பார்சலோகோ நகர வர்த்தகர்கள் பயணித்த வாகனத்தைக் குறிவைத்து வெடிகுண்டு வீசப்பட்டு இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் 15 பேர் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டனர். இதுதவிர அதே நகரில் இராணுவத்துக்கும் ஆயுததாரிகளுக்கும் இடையே நடந்துவரும் போரால் இடம்பெயர்ந்த மக்களுக்கு உணவு கொண்டு சென்ற வாகனங்கள் தாக்கப்பட்டன. இதில் 14 பேர் சாவடைந்தனர். சாவடைந்தவர்களில் பலர் வாகனச் சாரதிகள். இந்தத் தாக்குதல் சம்பவங்களுக்குப் பிறகு அங்கு இராணுவப் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது. தாக்குதல் நடத்தியவர்கள் தேடப்பட்டு வருகின்றனர்.

## ஈரான், சிரிய எல்லையில் தாக்குதல் 18 பேர் சாவு!



டமாஸ்கஸ், செப்.10

சிரியாவில் கிழக்குப் பகுதியில் போர் வானூர்திகள் நடத்திய தாக்குதலில் ஈரான் ஆதரவு ஆயுததாரிகள் 19 பேர் சாவடைந்தனர். சிரியாவின் கிழக்குப் பகுதியில் ஈரானின் எல்லையில் அமைந்துள்ள பவ்கோமால் நகரின் மீது போர் வானூர்திகள் நடத்திய தாக்குதலிலேயே இவர்கள் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்துள்ளனர். இதை சிரியாவின் போர் கண்காணிப்பு குழுவும் உறுதி செய்தது.

ஈரான், சிரிய எல்லையில் உள்ள ஈரான் இராணுவத் தளத்தை மையமாகக் கொண்டு இந்தத் தாக்குதல் நடந்துள்ளதாக செய்திகள் வெளியாகி உள்ளன. இந்தத் தாக்குதலை யார் நடத்தினார்கள் என்ற தகவல் இதுவரை வெளியாகவில்லை.

## புயல் பாதிப்பு

டொரியன் புயல் கனடாவை தாக்கியதில் 5 இலட்சம் மக்கள் பாதிப்படைந்துள்ளனர். பஹாமஸ் தீவைத் தாக்கிய டோரியன், வலுவிழுந்து நகர்ந்து அமெரிக்கா, கனடாவைத் தாக்கியது. இதனால் கனடாவில் 5 இலட்சம் பேர் பாதிக்கப்பட்டனர்.



பஹாமஸ் தீவுகளில் டொரியன் புயல் தாக்கியழித்த பகுதி ஒன்றின் நிலை.

## ஹொங்கொங் விவகாரத்தில் எவரும் தலையிடக்கூடாது

### சீன ஊடகம் எச்சரிக்கை




பீஜிங், செப்.10

சீனாவின் ஒருபகுதிதான் ஹொங்கொங். அதை யாராவது பிரிக்க முயன்றால் அந்த முயற்சி வேரோடு அறுக்கப்படும் என்று சீனாவின் அரச ஊடகம் செய்தி வெளியிட்டது. இந்த விவகாரத்தில் வேறு நாடுகளின் தலையீடு இருப்பதைக் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற போராட்டம் எடுத்துக்காட்டுகிறது என்றும் – அந்த ஊடகம் சுட்டிக்காட்டியது. இந்தப் போராட்டத்தின்போது போராட்டக்காரர்கள் ஹொங்கொங்கில் உள்ள அமெரிக்கத் தூதரகத்துக்குச் சென்று, தங்களுடைய போராட்டத்தில் அமெரிக்க அரச டொனால்ட் ட்ரம்ப் தலையிட்டுச் சீனாவிடம் பேச்சு நடத்த வேண்டும் என வேண்டுகோள் விடுத்தனர்.

இதனை அடிப்படையாகக் கொண்டே சீனாவின் அரச ஊடகம் மேற்குறிப்பிட்ட செய்தியை வெளியிட்டுள்ளது.

ஹொங்கொங் போராட்டம் தியானன்மென் படுகொலை போன்ற சம்பவத்துக்கு வழிவகுக்கும் என்று அமெரிக்க அரச தலைவர் டொனால்ட் ட்ரம்ப் சுட்டிக்காட்டியிருந்த நிலையிலேயே சீன ஊடகம் இவ்வாறு எச்சரிக்கைச் செய்தி வெளியிட்டது.

# பிரான்சில் கடும் வெப்பம் ஆயிரத்து 435 பேர் சாவு!

பாரிஸ்,செப்.10

ஐரோப்பிய நாடான பிரான்சில் இந்த ஆண்டு ஜீன் மற்றும் ஜூலை மாதங்களில் வீசிய வெப்பக் காற்றின் தாக்கத்தால் ஆயிரத்து 435 பேர் சாவடைந்ததாக அந்த நாட்டின் சுகாதாரத்துறை அமைச்சர் ஆன்யஸ் புசாங் தெரிவித்தார்.

இவ்வாறு சாவடைந்தவர்களில் அதிகமானவர்கள் 75 வயதுக்கு மேற்பட்டவர்கள் என்றும் அவர் கூறினார். பிரான்சில் கடந்த ஜுன் மாதத்தில் இதுவரை



இல்லாத அளவுக்கு 46 டிகிரி செல்சியஸ் வெப்ப நிலை பதிவாகியது. இதனால் அங்கு பல முறை சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்ட தோடு, பாடசாலைகள் மூடப்பட்டதுடன் பொது நிகழ்ச்சிகளும் நிறுத்தப்பட்டன. இதைப்போலவே ஐரோப்பிய நாடுகளான பிரிட்டன், பெல்ஜியம், ஜேர்மனி, லக்சம்பெர்க், நெதர்லாந்து ஆகிய நாடுகளிலும் வெப்பநிலை அதிகரித்திருந்தது. ஆனால், இதனால் ஏற்பட்ட சாவுகள் குறித்த அதிகாரபூர்வ தரவுகளை, பிரான்ஸ் நாட்டைத்தவிர வேறு எந்த நாடுகளும் வெளியிடவில்லை.

இந்த ஆண்டு வரலாற்றில் இல்லாத அளவுக்கு ஐரோப்பிய நாடுகளில் வெப்பக் காற்று வீசியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ட்ரம்பின் பதிவுக்கு தலிபான்கள் பதில்!

டோகா,செப்.10

தலிபான்களுடனான பேச்சுக்களை நிராகரிப்பதாகத் தனது கீச்சகப் பக்கத்தில் அமெரிக்க அரச தலைவர் ட்ரம்ப் பதிவிட்டிருந்த நிலையில், அதற்குப் பதிலளிக்கும் முகமாக தலிபான்களின் முக்கிய தளபதி சபி உல்லா முஜாகிட், "இன்னும் பல அமெரிக்க சிப்பாய்களின் உயிர்கள் பறிக்கப்படும்" எனப் பதில் அளித்துள்ளார். "கட்டாரின் டோகா நகரில் உள்ள தலிபான்களின் அரசியல் பேச்சாளர் சுகயில் சகின் தனது கீச்சகப் பக்கத்தில் 'கட்டார் அரசின் அனுசரணையுடன் இரண்டு தரப்புக்களுக்கும் இடையிலான பேச்சுக்களுக்கான சகல ஏற்பாடுகளும் முழுமையாகிவிட்ட நிலையில் ட்ரம்ப்பின் இந்த முடிவு எங்களுக்கு ஏமாற்றத்தைக் கொடுத்துள்ளது, ஆயினும் அவர் போர் புரிவதையே தெரிவு செய்தால் நாங்களும் இறுதி வரை போராடுவோம்" என்று பதிவேற்றியுள்ளார்.



1973ஆம் ஆண்டு, சிலி நாட்டில் இராணுவ ஆட்சிக் கவிழ்ப்பின் 46ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் அணிவகுப்பு அண்மையில் இடம்பெற்றது. அந்த அணிவகுப்பில் ஆர்ப்பாட்டம் செய்த ஒருவரைப் பொலிஸார் தடுக்கின்றனர்.

# பாலத்துக்குள் கவிழ்ந்தது பஸ் 14 பேர் பரிதாபச் சாவு!

## மொராக்கோவில் துயரச் சம்பவம்




றபட்,செப்.10

பாலத்தின் மீது பயணித்துக் கொண்டிருந்தபோது பேருந்து ஒன்று அந்தப் பாலத்துக்குள் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இந்தச் சம்பவம் மொராக்கோவில் நடந்தது. இதில் 14பேர் சாவடைந்தனர்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது:

மொராக்கோவின் தென்கிழக்குப் பகுதியில் உள்ள எர்ராச்சிடியா மாகாணத்தில் கடந்த சில நாள்களாகக் கடும் மழை பெய்து வருகிறது. இதன் விளைவாகப் அங்குள்ள பகுதிகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில், அங்குள்ள பாலம் ஒன்றின் மீது சென்று கொண்டிருந்த ஒரு பேருந்து வெள்ளப் பெருக்கில் சிக்கிப் பாலத்தில் இருந்து கீழே வீழ்ந்தது.



இதனாலேயே இந்தச்சாவுகள் சம்பவித்தன.

கவிழ்ந்த பேருந்தில் இருந்து மீட்கப்பட்ட 27 பயணிகள் அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டனர். காயமடைந்தவர்களின் நிலை கவலைக்கிடமாகவுள்ளதால் சாவுகள் அதிகரிக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

# பிரிட்டனின் எண்ணெய்க் கப்பல் விரைவில் விடுவிக்கப்படும்

கைப்பற்றப்பட்ட பிரிட்டனின் கப்பலைவிரைவில்விடுவிக்கவுள்ளதாக ஈரான் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து ஈரான் அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: 'பிரிட்டனின் கப்பல் 'ஸ்டெனா இம்பெரோ' கப்பல் எதிர் வரும் நாள்களில் விடுவிக்கப்படும். இது தொடர்பான சட்ட நடைமுறைகள் முடிந்துவிட்டன என்றது. இதை ஈரானின் அயலுறவுத் துறை அமைச்சர் அப்பாஸும் உறுதி செய்தார்.

[illegible]

அணு ஆயுத சோதனையில் அமெரிக்கா - ஈரான் இடையே மோதல் அதிகரித்து வரும் நிலையில், வளைகுடாப் பகுதியில் பதற்றம் நிலவி வருகிறது. ஜூலை மாதம் 19ஆம் திகதி பிரிட்டன் நாட்டுக் கொடியுடன் ஹோர்மோஸ் நீரியைப் பகுதியைக் கடந்து சென்று கொண்டிருந்த 'ஸ்டெனா இம்பெரோ' என்ற எண்ணெய்க் கப்பலை ஈரான் அரசு கைப்பற்றியது.

அதிலிருந்த மாலுமிகளை விடுவித்தது. தற்போது கப்பலையும் விடுவிக்கவுள்ளதாக அறிவித்துள்ளது. ஜிப்ரால்டர் பகுதியில் வைத்துப் பிரிட்டன் கைப்பற்றிய ஈரானின் கப்பலைப் பிரிட்டன் விடுவித்துள்ளமையும் குறிப்பிட த்தக்கது.

## சிக்ஸர்...

நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்த அமைச்சர் சஜித், வீட்டுத் திட்டத்தை மக்களிடம் கையளித்தார். அங்குள்ள மைதானத்தில் துடுப்பாட்டம், உதைபந்தாட்ட விளையாட்டுக்களில் ஈடுபட்டார். அதன்பின்னர் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவித்தபோது: அரச தலைவர் தேர்தல் தொடர்பாக அமைச்சரிடம் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர்.

அரச தலைவர் தேர்தலில் களமிறங்கப் போகின்றேன். அதில் மாற்றுக் கருத்து இல்லை. தேர்தல் அறிவிக்கப்படட்டும். களமிறங்கி இங்கு துடுப்பாட்டத்தில் “சிக்ஸ்” அடித்து விடுகின்றேன். அதைப் பார்க்கத்தானே போகிறீர்கள் என்று சிரித்தவாறு கூறினார்.

அதேவேளை, நிகழ்வில் மேடையில் உரையாற்றிய அமைச்சர் சஜித், நான் சொன்னதைச் செய்து காட்டுவேன், வாயால் வத்தாளைக் கிழங்கு நடுபவன் நான் அல்ல என்றும் குறிப்பிட்டார்.

அண்மையில் அமைச்சர் சஜித் பிரேமதாச தொடர்பாகக் கருத்துத் தெரிவித்திருந்த எதிர்க்கட்சித் தலைவரும், சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் தலைவருமான மகிந்த ராஜபக்ச, வாயால் எது வேண்டுமானாலும் பேசலாம் என்று கூறியிருந்தார். (எ-21)

## ஒருமித்த...

கிழக்கில் தேசிய வீடமைப்பு அதிகார சபையால் அமைக்கப்பட்ட பொக்கணைக் கிராமத்தைப் பயனாளிகளிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. அதற்காக யாழ்ப்பாணம் வந்திருந்த அமைச்சரிடம், ‘உதயன்’ ஊடகவியலாளர் கேள்வி எழுப்பியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர் சஜித் பிரேமதாச வடக்கு பல தடவை வருகை தந்துள்ளார். அவர் வீட்டுத் திட்டங்களைக் கையளிக்கும்போது அபிவிருத்தி பற்றியும், வீட்டுத் திட்டங்கள் உருவாக்கப்படுவது தொடர்பாகவும் கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றார். தற்போது அரச தலைவர் தேர்தலுக்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பாக தானே அரச தலைவர் வேட்பாளராகக் களமிறங்குவேன் என்று அறிவித்துள்ள அவர், தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினையான இனப்பிரச்சினை தொடர்பாக வடக்கில் கருத்துத் தெரிவிப்பதைத் தவிர்த்திருந்தார். தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பாக அவரது நிலைப்பாடு என்ன என்று வினவியபோதே அமைச்சர் சஜித் பிரேமதாச நேற்று மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஒருமித்த இலங்கைக்குள் அதிகாரங்களைப் பகிர்வதே எனது நோக்கம். அதற்காக நான் பாடுபடுவேன். அதி கூடிய அதிகாரங்களை வழங்குவேன் என்று அவர் தெரிவித்தார்.

2015ஆம் ஆண்டு நடைபெற்ற அரச தலைவர் தேர்தலில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன வெற்றிபெற்று கூட்டு அரசு ஒன்று உருவாக்கப்பட்டது. அப்போது தலைமை அமைச்சரும், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க ஒருமித்த நாட்டுக்குள் அதிகாரப் பகிர்வு வழங்கப்பட்டு, அரசியல் தீர்வு வழங்கப்படும் என்று தெரிவித்திருந்தார். எனினும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. தற்போது ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பாக அரச தலைவர வேட்பாளராகக் களமிறங்குவேன் என்று தெரிவித்துள்ள அமைச்சர் சஜித் பிரேமதாசவும் அவ்வாறே தெரிவித்துள்ளார். (எ-21)

## ஐக்கிய...

அபிவிருத்தி அதிகார சபையின் நிதி உதவியுடன் அமைக்கப்பட்ட வீட்டுத் திட்டம் நேற்றுப் பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டது. அங்கு பயனாளிகளுக்கு உதவிப் பொருள்களும் வழங்கப்பட்டன. அப்போது நடைபெற்ற சம்பாசணையில் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனிடம், அமைச்சர் சஜித் பிரேமதாச இவ்வாறு சிரிப்புடன் தெரிவித்தார்.

உதவிப் பொருள்களைக் கையளித்துக் கொண்டிருந்த சஜித் பிரேமதாச, கிளிநொச்சியிலும் வீட்டுத் திட்டம் கையளிக்கும் நிகழ்வு உள்ளது, வருவீர்கள் தானே? என்று இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனிடம் வினவினார். அவர் ஆம் என்று கூறினார். அங்கிருந்த ஊடகவியலாளர்களிடமும் அமைச்சர் இந்தக் கேள்வியைக் கேட்டார். அப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த எவராவது உள்ளனரா? என்று அமைச்சர் சுற்றும் முற்றும் பார்த்தார். அவர்கள் சென்றுவிட்டனர் என்று இராஜாங்க அமைச்சர் விஜயகலா, அமைச்சர் சஜித்துக்குக் கூறினார்.

அப்போது அமைச்சர் சஜித் சிரித்தவாறு, ஐக்கிய தேசியக் கட்சியும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஒன்றுதான், வெவ்வேறு அல்ல என்று இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனுக்குக் கூறினார். (எ-21)

## ஐ.தே.க.வின்....

யின் பிரதித் தலைவரும், அமைச்சருமான சஜித் பிரேமதாச.

தற்போது அரச தலைவர் தேர்தல் களம் சூடுபிடித்துள்ளது. சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி, மக்கள் விடுதலை முன்னணி என்பன தமது அரச தலைவர் வேட்பாளரை அறிவித்துள்ளன. ஐக்கிய தேசியக் கட்சி தனது வேட்பாளரை இன்னமும் அறிவிக்கவில்லை.

அரச தலைவர் தேர்தல் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இருந்து பல கருத்துக்கள் நாளாந்தம் வெளிவந்தவண்ணம் உள்ளன. தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச, சபாநாயகர் கரு ஜயசூரிய, சரத் பொன்சேகா என ஊகங்கள் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. இவர்களின் அமைச்சர் சஜித் பிரேமதாச தானே ஐக்கிய தேசியக் கட்சியின் அரச தலைவர் தேர்தல் வேட்பாளர் என்று பகிரங்கமாகத் தெரிவித்து வருகின்றார். தனக்கு வலுச் சேர்க்கும் வகையில் ஆதரவுக் கூட்டங்களையும் நடத்தி வருகின்றார். ஆனால் இந்த விடயத்தில் தலைமை அமைச்சரும், கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க பகிரங்கமாக எதையும் தெரிவிக்கவில்லை. இதனால் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன என்று கூறப்படுகின்றது.

நேற்று அமைச்சர் சஜித் பிரேமதாச யாழ்ப்பாணம் வந்திருந்தார். அவர் வலிகாமம் கிழக்கில் அமைக்கப்பட்ட வீடமைப்புத் திட்டத்தை மக்களிடம் கையளித்தார். அதன்பின்னர் அவரிடம் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நான் தேர்தலில் களமிறங்குவேன். அதில் மாற்றமில்லை. ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பாகவே களமிறங்குவேன், தனித்துச் செல்ல வேண்டிய அவசியமில்லை. நான் கட்சியின் பிரதித் தலைவர். அதனால் அந்தக் கட்சியில் இருந்து வேட்பாளராக வருவதில் பிரச்சினை இல்லை. அதைக் கட்சி மட்டுமல்ல, மக்களும் பார்த்துக் கொள்வார்கள் என்று அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவித்தார். (எ-21)

## மாவீரர்...

கள் அமைப்பினால் மாவீரர் வாரம் நவம்பர் மாதம் 21ஆம் திகதி தொடக்கம் 27 ஆம் திகதி வரையில் கடைப்பிடிக்கப்படுகின்றது. அந்தக் காலப் பகுதியிலேயே இலங்கையின் அரச தலைவரைத் தெரிவு செய்வதற்கான தேர்தலும் நடத்தப்படவுள்ளது.

அரச தலைவர் தேர்தல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக தேர்தல்கள் ஆணைக்குழுவின் கூட்டம் நேற்றுக் கூட்டப்பட்டது.

அரச தலைவர் தேர்தலுக்கான வேட்புமனுக் கோரும் திகதி, அரச தலைவர் தேர்தல் நடத்தும் திகதி என்பவற்றை எதிர்வரும் 21ஆம் திகதி உத்தியோகபூர்வமாக அறிவிப்பது என்று நேற்றைய கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

அரச தலைவர் தேர்தல் சட்டத்துக்கு அமைவாக, அரச தலைவர் தேர்தலுக்கான அறிவித்தல் வெளியிடப்பட்ட நாளிலிருந்து 21 நாள்களுக்கு மேற்படாமலும், 16 நாள்களுக்கும் குறையாமலும் உள்ள ஓர் இடைப்பட்ட காலத்தில்வேட்புமனுத்திகதி குறிப்பிடப்படவேண்டும். வேட்புமனுக் கோரப்படுகின்ற தினத்திலிருந்து 4 வாரங்களுக்கு குறையாமலும், 6 வாரங்களுக்கு மேற்படாமல் இடைப்பட்ட திகதியில் அரச தலைவர் தேர்தல் நடத்தப்பட வேண்டும். இதற்கு அமைவாக, நவம்பர் மாதம் 21ஆம் அல்லது 23ஆம் திகதியில் தேர்தல் நடத்தப்படக்கூடும் என்று தெரியவருகின்றது. (ஓ,5,105)

## கட்டி...

உள்ளன. அந்த வீடுகளுக்கான நிதி முழுமையாக வழங்கப்படவில்லை. அந்த நிதிகளை விரைவாக வழங்குங்கள்.

இவ்வாறு அமைச்சர் சஜித் பிரேமதாசவிடம் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கோரிக்கை விடுத்ததார்.

யாழ்ப்பாணம், வலிகாமம் கிழக்கில் அமைக்கப்பட்ட வீட்டுத் திட்டம் மக்களிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டது. அமைச்சர் சஜித் பிரேமதாச நிகழ்வில் கலந்து கொண்டு வீடுகளைக் கையளித்தார். அந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே, இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

அமைச்சர் சஜித் பிரேமதாசவின் திட்டங்கள் மிகத் துரிதமாக முன்னேறிக் கொண்டிருக்கின்றன. சில அரச நடைமுறைகளால் வீடுகளைக் கட்டி முடிப்பதற்கு மக்களுக்கு கிடைக்க வேண்டிய நிதி முழுமையாகக் கொடுக்கப்படவில்லை. அனைத்துப் பிரதேச செயலர் பிரிவிலும் இதுதான் நிலமை. இது தொடர்பில் அமைச்சரிடம் கேட்டுள்ளேன். விரைவில் அது சரி வரும் என்று அவர் கூறியுள்ளார். கொடுக்கப்பட்ட வீட்டுத் திட்டங்கள் எல்லாம் நிச்சயமாக இந்த வருடத்துக்குள் நிறைவடையும். அதன்பின்னரே புதிய திட்டங்கள் ஆரம்பிக்கப்படும் என்று அமைச்சர் கூறியிருக்கிறார்.

இந்த அரசால் செய்யப்பட்டுவரும் ஒழுங்கான, சிறந்த திட்டம் இந்த வீட்டுத் திட்டமே. நாங்கள் இன்னமும் பல விடயங்களைக் கேட்கின்றோம். இங்கு பல தொழிற்சாலைகள் முன்னர் இருந்தன. அதனால் வேலை வாய்ப்புக்களும் இருந்தன. ஆனால் இப்போது அந்தத் தொழிற்சாலைகள் இல்லை. கடும் பிரயத்தனத்தின் பின்னர் இப்போது பலாலியில் வானூர்தி நிலையம் அமைக்கப்படுகின்றது. ஒவ்வொன்றையும் அரசுக்கு இடித்துரைத்தே பெற வேண்டியுள்ளது.

பலர் கேட்கின்றனர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ன செய்தது என்று?. சுருக்கமாகக் கூறுகின்றேன். ஒவ்வொரு கூட்டங்களிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கொடுத்த நெருக்குதல்களால்தான் பல விடயங்கள் நடந்துள்ளன. காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன. முன்னர் எத்தனை அரசியல் கைதிகள் சிறைகளில் இருந்தனர்? இப்போது எத்தனை பேர் உள்ளனர்?. அவர்களை விடுவிப்பதற்கும் நாடாளுமன்ற அமர்வுகளிலும், கூட்டங்களிலும் பேசப்பட்டுக் கொண்டிருக்கின்றது. ஆனால் பயன் கிடைத்தவுடன் கூறுவதே சம்பந்தன் ஐயாவின் நடைமுறையாக உள்ளது. என்ன செய்ய வேண்டுமோ அது செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றது. விரைவில் அவற்றின் பயன்களை அடைவீர்கள். நம்பிக்கையாக இருங்கள் - என்றார். (எ-21)

## வடக்கு - கிழக்கு...

அந்த இயக்கத்தின் சார்பில் சில புத்திஜீவிகள் யாழ்ப்பாணத்துக்கு நேற்றுமுன்தினம் வருகை தந்து பல தரப்புக்களையும் சந்தித்திருந்தனர். இதன் பின்னர் பத்திரிகையாளர் சந்திப்பு நடத்தினர்.

பத்திரிகையாளர் சந்திப்பில், பிரிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மாகாணங்களை மீளவும் இணைத்து, கூட்டாட்சி முறையிலான அதிகாரப் பரவலாக்கத்துடன், சுயநிர்ணய உரிமையுடன் கூடிய தீர்வைப் பெற்றுத்தர நாங்கள் முயற்சிப்போம். இது தொடர்பான அழுத்தங்களை இப்போதே மக்கள் விடுதலை முன்னணியிடம் கொடுக்க ஆரம்பித்துள்ளோம். எனவே தமிழ் மக்கள் மக்கள் சக்தியின் அரச தலைவர் வேட்பாளரை ஆதரிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.

இது தொடர்பில் மக்கள் சக்தியின் அரச தலைவர் வேட்பாளர் அநுரகுமாரவை தொடர்பு கொண்டு கேட்டபோது, மக்கள் சக்தியில் பல அமைப்புக்கள் உள்ளன. மக்கள் சக்தி இயக்கம் மக்கள் விடுதலை முன்னணியை தலைமையாகக் கொண்டு போட்டியிடுகின்றது. இந்த இயக்கத்தை ஆதரிக்கின்ற பல அமைப்புக்களைச் சேர்ந்தவர்களும் பல கருத்துக்களையும் சொல்லலாம். ஆனால் அது மக்கள் விடுதலை முன்னணியின் கருத்தாகவோ, எனது கருத்தாகவோ அமையாது.

வடக்கு - கிழக்கு இணைப்பு பிரிக்கப்பட வேண்டும்என்று நீதிமன்றத்தை நாடியது எமது கட்சியே. நாம் இப்போதும் அதே நிலைப்பாட்டில்தான் இருக்கின்றோம். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட முடியாது. கூட்டாட்சித் தீர்வை வழங்க முடியாது. புதிய அரசமைப்பு உருவாக்கத்தின்போது எமது கட்சி சார்பில் முன்வைக்கப்பட்ட யோசனையில், நாட்டில் உள்ள அனைவருக்கும் சம உரிமை என்பதையே வலியுறுத்தியிருந்தோம். அதுதான் எமது நிலைப்பாடு - என்றார். (ஓ,5,22)

## அரசியல்வாதிகள்,...

ஊடகவியலாளர்கள். இன, மத, மொழியைப் பயன்படுத்தி அவர்கள் பிரபல்யமடைகின்றனர். இவர்கள் இரு தரப்பினரும் இல்லாதிருந்தால் இந்த நாடு நன்றாக இருக்கும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் இலங்கை அணியின் முன்னாள் சுழல் பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு நேற்றுக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்துள்ளதாவது:

நான் கூறியவற்றில் பெரும்பகுதி இன, மொழி, மதம் பார்க்காமல் அனைவரும் இலங்கையர்களாக வாழ வேண்டும் என்பதே. மதத்தை வைத்து, இனத்தை வைத்து உருவாக்கப்பட்டுள்ள சிறுபான்மைக் கட்சிகளை விட்டிருக்கக் கூடாது. அவை இந்த நாட்டில் பிரிவினையை ஏற்படுத்தியுள்ளன. சிறுபான்மை முஸ்லிம் கட்சி, தமிழ்க் கட்சி என்று இருக்கின்றன. தமிழரசுக் கட்சி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் போன்றன இருக்கின்றன. தமிழ் நாட்டில் அவ்வாறு இருக்கின்றனவா?. சிங்களக் கட்சிகள் பௌத்த கட்சிகள் என்று பெயரிட்டுள்ளனவா?.

என்னிடம் கேட்கப்பட்டபோது நான் அவ்வாறான கட்சிகள் இருக்கக் கூடாது என்று கூறினேன். ஒழுங்காக வேறு பெயரிட்டு மூன்று இனங்களும் கட்சியில் சங்கமமாக வேண்டும். அனைத்து மதங்களும் சமமாக வேண்டும். அதுவே நாட்டுக்கான கட்சி.

இவர்கள் என்ன நினைக்கின்றார்கள் என்றால் இவ்வாறான கட்சிகளை வைத்துக் கொண்டு நாலைந்து ஆசனங்களைப் பெற்றுக் கொண்டு அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக் கொண்டு அவர்களை உயர்த்திக் கொள்வது மட்டுமே. அதனால் மக்களுக்குப் பயனில்லை.

என்னிடம் நேற்று (நேற்றுமுன்தினம்) கேட்கப்பட்ட கேள்விக்கே பதிலளித்தேன். யார் அரச தலைவராக வர வேண்டும் என்று பெயரைக் கூறுங்கள் என்று கேட்டனர். பெயரைக் கூற முடியாது. தேசிய பாதுகாப்பை யார் உறுதி செய்கின்றாரோ அவருக்கே வாக்களிப்பேன் என்று கூறினேன். விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டமை தொடர்பான எந்த வார்த்தையையும் பிரயோகிக்கவில்லை.

நான் அரசியலுக்கு வரப்போவதும் இல்லை, நாட்டை ஆளப் போவதும் இல்லை. நான் கூறியதால்தான் விடுதலைப் புலிகள் அழிந்தார்களா?. நான் கூறுவது வேதவாக்கு இல்லை - என்றார்.

கோத்தபாய ராஜபக்சவின் வியத்கம அமைப்பின் கலந்துரையாடல் கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. அதில் பங்கேற்று உரையாற்றிய முத்தையா முரளிதரன், சமாதான பேச்சுக்களின் போது தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு வாய்ப்பு கிடைத்தது. ஆனால் அவர்கள் அப்பாவிகளை கொலை செய்தனர். 2009ஆம் ஆண்டு போர் முடிவுக்கு வந்து. தமிழீழ விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்ட நாளே எனது வாழ்க்கையின் மிக முக்கியமான நாள். மக்களுக்கு யார் பாதுகாப்பு வழங்குவார் என்பதே இந்தத் தேர்தலில் முக்கியம். அவ்வாறான தலைவருக்கே நான் வாக்களிப்பேன் என்று கூறியிருந்தார். அது பலத்த சர்ச்சைகளைத் தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது. (எ)



# மெய்வன்மைப் போட்டியில் யாழ். மாவட்டம் முதலிடம்

யாழ்ப்பாணம், செப்.10
வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் நடத்தப்படும் வடக்கு மாகாண மெய்வன்மைப் போட்டியில் 94 தங்கப் பதக்கங்கள், 57 வெள்ளிப் பதக்கங்கள், 43 வெண்கலப் பதக்கங்கள் உட்பட மொத்தமாக 194 பதக்கங்களைப் பெற்று யாழ்ப்பாண மாவட்டம் சம்பியனானது.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட வடக்கு மாகாண மெய்வன்மைப் போட்டிகள் கடந்த சனி,ஞாயிற்றுக்கிழமைகளில் இடம்பெற்றது. இதில் யாழ்ப்பாண மாவட்டம் 94தங்கப் பதக்கங்கள், 57வெள்ளிப் பதக்கங்கள், 43வெண்கலப் பதக்கங்கள் உட்பட மொத்தமாக 194பதக்கங்களைப் பெற்று முதலாம் இடத்தையும்,34 தங்கப் பதக்கங்கள், 43வெள்ளிப் பதக்கங்கள், 49 வெண்கலப் பதக்கங்கள் உட்பட மொத்தமாக 126 பதக்கங்களைப் பெற்று முல்லைத்தீவு மாவட்டம் இரண்டாமிடத்தையும், 27 தங்கப் பதக்கங்கள், 29 வெள்ளிப் பதக்கங்கள், 32வெண்கலப் பதக்கங்கள் உட்பட மொத்தமாக 88 பதக்கங்களைப் பெற்று கிளிநொச்சி மாவட்டம் மூன்றாமிடத்தையும், 19 தங்கப் பதக்கங்கள், 23 வெள்ளிப் பதக்கங்கள், 42 வெண்கலப் பதக்கங்கள் உட்பட மொத்தமாக 84 பதக்கங்கள் பெற்று வவுனியா மாவட்டம் நான்காம் இடத்தையும்,18 தங்கப் பதக்கங்கள், 32 வெள்ளிப் பதக்கங்கள், 25 வெண்கலப் பதக்கங்கள் உட்பட மொத்தமாக 75 பதக்கங்களைப் பெற்று மன்னார் மாவட்டம் ஐந்தாம் இடத்தையும் பெற்றன. (23)

### உயரம் பாய்தலில்

## ஹெரினா சாதனையுடன் தங்கம் வென்றார்



யாழ்ப்பாணம்.செப்.10
வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் நடத்தப்படும் வடக்கு மாகாண மெய்வன்மைப் போட்டியில் பெண்களுக்கான உயரம் பாய்தல் போட்டியில் யாழ்ப்பாண மாவட்டத்தின் சார்பில்கலந்துகொண்டசி.ஹெரினா புதிய சாதனையுடன் தங்கப்பதக்கத்தைக் கைப்பற்றினார்.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் நடத்தப்படும் வடக்கு மாகாண மெய்வன்மைப் போட்டியில், கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற பெண்களுக்கான உயரம் பாய்தல் யாழ்ப்பாண மாவட்டத்தின் சார்பில் கலந்துகொண்ட சி.ஹெரினா 1.56 மீற்றர் தூரம் பாய்ந்து புதிய சாதனையுடன் தங்கப் பதக்கம் வென்றார்.

கடந்த 9 வருடங்களுக்கு முன்னர் வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட வடக்கு மாகாண மெய்வன்மைப் போட்டியில் பெண்களுக்கான உயரம் பாய்தல் போட்டியில் யாழ்ப்பாண மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய வி. கஜிதா 1.55 மீற்றர் தூரம் பாய்ந்து நிலைநாட்டிய சாதனையை சி. ஹெரினா முறியடித்தார்.

மன்னார் மாவட்டத்தின் சார்பில் கலந்துகொண்ட றூபசஜன்சி 1.35 மீற்றர் தூரம் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தையும், மன்னார் மாவட்டத்தின் சார்பில் கலந்துகொண்டதுசிக்கா1.30 மீற்றர் தூரம் பாய்ந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (23)



### தேசிய மட்ட வலுதூக்கலில்

## வைத்தீஸ்வராக் கல்லூரிக்கு நான்கு பதக்கங்கள்

யாழ்ப்பாணம்.செப்.10
இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட வலுதூக்கல் போட்டியில் யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரி இரு தங்கப் பதக்கங்கள், ஓர் வெள்ளி, ஓர் வெண்கலம் உட்பட நான்கு பதக்கங்களைக் கைப்பற்றியது.

இலங்கை பாடசாலைகள் வலுதூக்கும் சம்மேளனம் நடத்திய தேசிய மட்ட வலுதூக்கல் போட்டி நேற்று கேகாலை ராஜகிரிய மகா வித்தியாலய உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இதில் யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியை பிரதிநிதித்துவம் செய்த கே.ஜெசின் 16 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் 93 கிலோ எடைப் பிரிவில் 270 கிலோ பளுவைத் தூக்கி தங்கப் பதக்கத்தையும், 18 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் 57 கிலோ எடைப் பிரிவில் எஸ். வைசாலினி 150 கிலோ பளுவைத் தூக்கி தங்கப் பதக்கத்தையும், எம். சோபனா 84 கிலோ எடைப் பிரிவில் 173 கிலோ பளுவைத் தூக்கி வெள்ளிப் பதக்கத்தையும், 18 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் எம். பிரணவன் 210 கிலோ பளுவைத் தூக்கி வெண்கலப் பதக்கத்தையும் சுவீகரித்தனர். (422)

### சம்மட்டி எறிதலில்

## பிராகாஸ்ராஜ் சாதனையுடன் தங்கம்

யாழ்ப்பாணம்.செப்.10
வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் நடத்தப்படும் வடக்கு மாகாண மெய்வன்மைப் போட்டியில் ஆண்களுக்கான சம்மட்டி எறிதல் போட்டியில் யாழ்ப்பாண மாவட்டத்தின் சார்பில் கலந்துகொண்ட எஸ்.பிராகாஸ்ராஜ் புதிய சாதனையுடன் தங்கப்பதக்கத்தைக் கைப்பற்றினார்.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட வடக்கு மாகாண மெய்வன்மைப் போட்டி ஆண்களுக்கான சம்மட்டி எறிதல் போட்டியில் யாழ்ப்பாண மாவட்டத்தின் சார்பில் கலந்துகொண்ட எஸ்.பிராகர்ஸ்ராஜ் புதிய சாதனையுடன் தங்கப் பதக்கத்தை வென்றார்.

இவர் கடந்த வருடம் 36.12 மீற்றர் தூரம் எறிந்து நிலைநாட்டிய தனது சாதனையை நடப்பு வருடத்தில் 42.15 மீற்றர் தூரம் எறிந்து மீண்டும் புதிய சாதனையுடன் தங்கப்பதக்கத்தைக் கைப்பற்றினார்.

வவுனியா மாவட்டத்தின் சார்பில்கலந்துகொண்ட சி.ஜெனோசன் 33.88 மீற்றர் தூரம் எறிந்து வெள்ளிப்பதக்கத்தையும்,யாழ்ப்பாண மாவட்டத்தின் சார்பில் கலந்துகொண்ட வி. ஜதார்த்தனன் 30.12 மீற்றர் தூரம் எறிந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (23)



தேசிய மட்ட வலு தூக்கலில்

# கன்னிப் பதக்கம் வென்றது கிளி/பூநகரி ஸ்ரீவிக்னேஸ்வரா



யாழ்ப்பாணம்,செப்.10
இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட வலு தூக்கல் போட்டியில் கிளிநொச்சி ஸ்ரீவிக்னேஸ்வரா வித்தியாலயத்தைப் பிரதிநிதித்துவம் செய்த ர.பிரவீஸ் தனது பாடசாலைக்கான கன்னி வெண்கலப் பதக்கத்தை பெற்றுக் கொடுத்தார்.
இலங்கை பாடசாலைகள் வலு தூக்கும் சம்மேளனம் நடத்திய தேசிய மட்ட வலு தூக்கல் போட்டிகள் நேற்று கேகாலை ராஜகிரிய மகா வித்தியாலய உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றது.
இதில் 18 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் 53 கிலோ எடைப் பிரிவில் கிளி/பூநகரி ஸ்ரீவிக்னேஸ்வரா வித்தியாலயத்தைப் பிரதிநிதித்துவம் செய்த ர.பிரவீஸ் 230 கிலோ பளுவைத் தூக்கி வெண்கலப் பதக்கத்தைக் கைப்பற்றினார். இந்த வெண்கலப் பதக்கம் இந்தப் பாடசாலையின் முதலாவது தேசிய மட்ட பதக்கம் என்பது குறிப்பிடத்தக்கது. (422)

100 மீற்றர் ஓட்டத்தில்

# எம்.பிறேமதாச தங்கம் வென்றார்



யாழ்ப்பாணம்,செப்.10
வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் நடத்தப்படும் வடக்கு மாகாண மெய்வன்மைப் போட்டியில் ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் மன்னார் மாவட்டத்தின் சார்பில் கலந்து கொண்ட எம்.பிறேமதாச புதிய சாதனையுடன் தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.
யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட வடக்கு மாகாண மெய்வன்மைப் போட்டி ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் மன்னார் மாவட்டத்தின் சார்பில் கலந்து கொண்ட எம்.பிறேமதாச புதிய சாதனையுடன் தங்கப்பதக்கத்தைக் கைப்பற்றினார்.
இவர் கடந்த வருடம் 11 செக்கனில் ஓடி முடித்து நிலைநாட்டிய சாதனையை நடப்பு வருடத்திலும் 11 செக்கனில் ஓடி முடித்து சமநிலைப்படுத்தி தங்கப்பதக்கத்தைக் கைப்பற்றினார்.
யாழ்ப்பாண மாவட்டத்தின் சார்பில் கலந்துகொண்ட ரி.விதுசன் 11.3 செக்கனில் ஓடி முடித்து வெள்ளிப்பதக்கத்தையும் ,யாழ்ப்பாண மாவட்டத்தின் சார்பில் கலந்துகொண்ட நிரோசன் 11.4 செக்கன் ஓடி முடித்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,செப்.10
ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியில் நடத்தும் 'ஏ' பிரிவு அணிகளுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் இன்று செவ்வாய்க்கிழமை இரவு 7.30 மணிக்கு இடம்பெறும். இதில் முதலாவது அரையிறுதியாட்டத்தில் புத்தூர் வளர்மதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவ ஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (23)

---

யாழ்ப்பாணம்,செப்.10
மட்டுவில் வடக்கு மோகனதாஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் 'பி' பிரிவு அணிகளுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் இன்று செவ்வாய்க்கிழமை மட்டுவில் வடக்கு மோகனதாஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் ஆரம்பமாகின்றன.
இதில் இன்று இரவு 7மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் புத்தூர் சரஸ்வதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து தொண்டமானாறு கலையரசி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.
இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கச்சாய்வொலிகிங்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து புத்தூர் சென்றல்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (23)

சட்டவேலி பாய்தல் போட்டியில்

# ஆர்.சதீஸ் சாதனையுடன் தங்கம் வென்றார்

யாழ்ப்பாணம்,செப்.10
யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் நடத்தப்படும் வடக்கு மாகாண மெய்வன்மைப் போட்டியில் ஆண்களுக்கான 110 மீற்றர் சட்டவேலி பாய்தல் போட்டியில் யாழ்ப்பாண மாவட்டத்தின் சார்பில் கலந்து கொண்ட ஆர். சதீஸ் புதிய சாதனையுடன் தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.
இவர் 2017ஆம் ஆண்டு 15.8 செக்கனில் ஓடி முடித்து நிலைநாட்டிய தனது சாதனையை நடப்பு வருடத்தில் 15.6 செக்கனில் ஓடி முடித்து புதிய சாதனையுடன் தங்கப்பதக்கத்தைக் கைப்பற்றினார்.
மன்னார் மாவட்டத்தின் சார்பில் கலந்து கொண்ட எ.அபிக்சன் 16.1 செக்கனில் ஓடி முடித்து வெள்ளிப் பதக்கத்தையும்,யாழ்ப்பாண மாவட்டத்தின் சார்பில் கலந்து கொண்ட எம்.நிரோசன் 16.4 செக்கன் ஓடி முடித்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (23)

# திக்கம் வி.க. அணி கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம், செப்.10
இலங்கை தமிழ் அரசுக் கட்சியால் பொலிகண்டி வட்டார கால்பந்தாட்ட கழகங்களுக்கு இடையில் நடத்திய கால்பந்தாட்ட சுற்றுத் தொடரில் திக்கம் விளையாட்டுக் கழக அணி கிண்ணம் வென்றது.
கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இறுதியாட்டத்தில் திக்கம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பொலிகை பாரதி விளையாட்டுக் கழக அணி மோதியது.
முதல் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் எந்தவித கோல்களையும் பதிவு செய்யவில்லை. இரண்டாம் பாதி ஆட்டத்தின் இறுதி நிமிடத்தில் திக்கம் விளையாட்டுக்கழக அணி ஓர் கோலைப் பதிவு செய்ய ஆட்ட நேர முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது. (23)



# பைட்ரஸ் அணி வாகை

யாழ்ப்பாணம்,செப்.10
மன்னார் சுப்பர் லீக் ரி-20 துடுப்பாட்டத் தொடரில் மன்னார் பைட்ரஸ் அணி 42 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.
தாழ்வுபாடு விளையாட்டு மைதானத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் மன்னார் பைட்ரஸ் அணியை எதிர்த்து மன்னார் பந்தர்ஸ் அணி மோதியது.
முதலில் துடுப்பெடுத்தாடிய மன்னார் பைட்ரஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப் பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 185 ஓட்டங்களைப் பெற்றது. அணி சார்பில் துசியந்தன் 49 ஓட்டங்களையும், குகன் 36 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் கரிஸ், சுமித் ஆகியோர் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர்.
பதிலுக்குக் களமிறங்கிய மன்னார் பந்தர்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப் பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 143 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. இதில் றெக்சன், பவன் ஆகியோர் தலா 39 ஓட்டங்களையும், சுமித் 37 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் சுகந்தன், துசியந்தன் ஆகியோர் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர். (23)



# சுப்பர் கிங்ஸ் அணி வெற்றி

யாழ்ப்பாணம்,செப்.10
மன்னார் சுப்பர் லீக் ரி-20 துடுப்பாட்டத் தொடரில் சுப்பர் கிங்ஸ் அணி 5 இலக்குகளால் வெற்றி பெற்றது.
தாழ்வுபாடு விளையாட்டு மைதானத்தில் கடந்த சனிக்கிழமை.காலை இடம்பெற்ற ஆட்டத்தில் மன்னார் சுப்பர் கிங்ஸ் அணியை எதிர்த்து மன்னார் ரைடர்ஸ் அணி மோதியது.
முதலில் துடுப்பெடுத்தாடிய மன்னார் ரைடர்ஸ் அணி 17 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 86 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மேனன் 27 ஓட்டங்களையும், அஜந்தன் 18 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் சூரி, நார்த்தீபன் ஆகியோர் தலா 3 இலக்குகளைக் கைப்பற்றினர்.
பதிலுக்குக் களமிறங்கிய மன்னார் சுப்பர் கிங்ஸ் அணி 12 பந்துப் பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. அணி சார்பில் றோய் 28 ஓட்டங்களையும், டெல்ரன் 14 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் ஜெரோன் 2 இலக்குகளைக் கைப்பற்றினார். (23)

## மே.தீவுகளின் அணித் தலைவராக பொல்லார்ட் நியமிப்பு

மேற்கிந்தியத்தீவுகள் அணியின் ஒருநாள் மற்றும் ரி-20 போட்டிகளுக்கு பொல்லார்ட் அணித் தலைவராக நியமிக்கப் பட்டுள்ளார்.

இங்கிலாந்தில் நடைபெற்று முடிந்த உலகக் கிண்ணத் தொடரில் மேற்கிந்தியத்தீவுகள் அணி மிக மோசமான தோல்வியை சந்தித்தது. மேலும், இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் மற்றும் ரி-20 தொடரில் ஒரு போட்டிகளில் கூட வெற்றிபெறவில்லை.

இந்த நிலையில் அந்த அணியின் ஒருநாள் மற்றும் ரி-20 அணிகளின் தலைவர்கள் மாற்றப்பட்டு பொல்லார்ட் அணித் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். ஒருநாள் அணித் தலைவராக ஜேசன் ஹோல்டரும், ரி-20 அணித் தலைவராக பிரித்வைட்டும் இருந்தனர் என்பது குறிப்பிடத் தக்கது.

**English Personal Classes**
Gr 5 - O/L
(யாழ் நகரில் மட்டும்)
தொடர்பு:- 077 331 4608

**விற்பனைக்கு**
தரமான சீமெந்துக்கற்கள், தூண்கள் விற்பனைக்கு உண்டு.
076 760 3066



### தேசிய மட்ட வலு தூக்கல் போட்டியில்

# சென். பற்றிக்ஸுக்கு நான்கு பதக்கங்கள்

இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட வலுதூக்கல் போட்டியில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி ஓர் தங்கம், இரண்டு வெள்ளி, ஓர் வெண்கலப் பதக்கங்கள் உட்பட 4 பதக்கங்களைக் கைப்பற்றியது.

இலங்கை பாடசாலைகளுக்கு வலு தூக்கும் சம்மேளனம் நடத்திய தேசிய மட்ட வலுதூக்கல் போட்டிகள் நேற்று முன்தினம் கேகாலை ராஜகிரிய மகா வித்தியாலய உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இதில் சென். பற்றிக்ஸ் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்து 16 வயதுக்குட்பட்ட 93 கிலோ எடைப் பிரிவில் அபிஷேக் 330 கிலோ பளுவைத் தூக்கி தங்கப் பதக்கத்தையும், 120 கிலோ எடைப்பிரிவில் எக்சறோன் 230 கிலோ பளுவைத் தூக்கி வெள்ளிப் பதக்கத்தையும், 83 கிலோ எடைப் பிரிவில் கபில்ராஜ் 285 கிலோ பளுவைத் தூக்கி வெள்ளிப் பதக்கத்தையும், 18 வயதுக்குட்பட்ட 66 கிலோ எடைப் பிரிவில் உதயராஜ் 300 கிலோ பளுவைத் தூக்கி வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (422)




### அமெரிக்க பகிரங்க ரென்னிஸ் தொடர்

# நடால் சம்பியன்



அமெரிக்க பகிரங்க ரென்னிஸ் போட்டியில் ஸ்பெய்ன் நாட்டு ரபேல் நடால் டேனில் மெட்விடேவை வீழ்த்தி சம்பியனானார்.

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான அமெரிக்க பகிரங்க ரென்னிஸ் தொடர் நியூயோர்க்கில் நடைபெற்று வருகிறது.

இதில் நேற்று நடைபெற்ற ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு இறுதி ஆட்டத்தில், உலக தரவரிசையில் 2 ஆவது இடம் வகிப்பவரும், 18 முறை கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றவருமான ஸ்பெய்னின் ரபேல் நடால், தரவரிசையில் 5 ஆவது இடத்தில் இருக்கும் ரஷ்ய வீரர் டேனில் மெட்விடேவை எதிர்கொண்டார்.

இந்தப் போட்டி தனக்கு மிக்வும் சவாலாக இருக்கும் என நடால் ஏற்கனவே கூறியிருந்தார். அதுபோலவே போட்டியின் ஆரம்பம் முதலே நடாலுக்கு கடும் சவால் அளிக்கும் வகையில் பந்துகளை தெறிக்க விட்டார் மெட்விடேவ். எனினும் நடால் தனது அனுபவ ஆட்டத்தால் அதனை சமாளித்து ஆட்டத்தை தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தார். முதல் இரண்டு செற்களையும் எந்தவித தடங்கலும் இன்றி கைப்பற்றினார் நடால்.

அதன்பின்னர் எழுச்சி பெற்ற மெட்விடேவ், ஆக்ரோஷமாக ஆடி புள்ளிகளைக் குவிக்க, போட்டியில் விறு விறுப்பும் பரபரப்பும் அதிகரித்தது. நடால் செய்த சிறுசிறு தவறுகளை சாதகமாகப் பயன்படுத்திய மெட்விடேவ் அடுத்தடுத்து 2 செற்களைக் கைப்பற்றி அசத்தினார். இதனால் நடாலுக்கு கடும் நெருக்கடி ஏற்பட்டது. போட்டி விறுவிறுப்பானது. அடுத்த செற்றை கடும் போராட்டத்துக்கு மத்தியில் நடால் கைப்பற்றி போட்டியை முடிவுக்கு கொண்டு வந்தார்.

சுமார் 4 மணித்தியாலங்களும் 50 நிமிடங்களும் நீடித்த இந்த ஆட்டத்தின் இறுதியில் நடால் 7:5, 6:3, 5:7, 4:6, 6:4 என்ற செற் கணக்கில் மெட்விடேவை வீழ்த்தி கிண்ணத்தைக் கைப்பற்றினார்.

இதன் மூலம் நடால் 19 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றுள்ளார். அத்துடன் 4ஆவது முறையாக இந்த அமெரிக்க பகிரங்க கிண்ணத்தை நடால் கைப்பற்றுகின்றார்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.09.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.